பக்கங்கள்: பன்னிரண்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 15.00

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 பங்குனி 18 செவ்வாய்க்கிழமை (31.03.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:125

## ★ மக்களை வெளியேற்றுவதற்கான ★
# போர் இடைநிறுத்தத்தை
# இந்தியா வரவேற்கிறதாம்!
## வெளியுறவுச் செயலர் சிவ்சங்கர்மேனன் சொல்கிறார்



புதுடில்லி, மார்ச் 31

இலங்கையில் மோதல் நடைபெறும் வடபகுதியில் - முல்லைத்தீவில் - போரில் சிக்குண்டுள்ள பொதுமக்களை வெளியேற்றும் பொருட்டு, போரை இடைநிறுத்துவது குறித்து ஆராய்வதாக இலங்கை அரசாங்கம் அறிவித்திருப்பதை இந்தியா வரவேற்கின்றது.

இதனைத் தெரிவித்திருக்கிறார் வெளியுறவுச் செயலர் சிவ்சங்கர் மேனன்.

மோதல் பகுதிகளில் அகப்பட்டுள்ள மக்களை அங்கிருந்து பாதுகாப்பாக வெளியேற்றும் பொருட்டு, ஒரு தாக்குதல் நிறுத்தம் உட்பட பல வழிவகைகள் குறித்து ஆராய தாம் தயாராக இருப்பதாக இலங்கை அரசாங்கம் கூறியிருப்பதாக அண்மையில் வரும் செய்திகளை இந்தியா வரவேற்கின்றது என்று சொன்னார் சிவ்சங்கர் மேனன்.

இந்திய பிரதமரின் பிரதமசெயலர் ரி.கே.ஏ. நாயர், இலங்கைக்கு மேற்கொண்ட விஜயம் குறித்து செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு பதிலளித்த சிவ்சங்கர் மேனன், அவருடைய விஜயம் மிகவும் சிறப்பாக அமைந்தது என்று கூறினார்.

நம்பகத்தன்மையுடனான ஒரு அதிகாரப் பரவலாக்கலை உள்ளடக்கிய ஒரு அரசியல் திட்டம் ஒன்றை இலங்கை அரசாங்கம் உடனடியாக கொண்டுவர வேண்டும் என்பது குறித்து முக்கியமாக அந்த விஜயத்தின் (12 ஆம் பக்கம் பார்க்க)

## வாக்குகள் மூலம் தனி ஈழம் அமைத்தால் தி.மு.க.வரவேற்குமாம்



சென்னை, மார்ச் 31

இலங்கைத் தமிழர்கள் ஜனநாயக வழியில் தனி ஈழம் தமக்கென ஒரு தாயகம் அமைத்தால் திராவிட முன்னேற்றக் கழகம் அதனை வரவேற்கும் என்று தமிழக முதலமைச்சர் மு.கருணாநிதி தெரிவித்தார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

இலங்கையில் தனி ஈழம் மக்களின் வாக்களிப்புடன் உருவானால் அதை நாங்கள் வரவேற்போம்- (12 ஆம் பக்கம் பார்க்க)

## 544 பேர் நேற்று புல்மோட்டையில்

திருகோணமலை, மார்ச் 31

புதுமாத்தளனில் இருந்து காயமுற்றோர் மற்றும் நோயாளர்கள் என 544 பேர் புல்மோட்டைக்கு 'கிறின்ஓசன்' கப்பல் மூலம் அழைத்துச் செல்லப்பட்டனர்.

காயமடைந்த வர்களையும் மற்றும் நோயாளர்களையும் 16ஆவது தடவையாக நேற்று செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு அழைத்து வந்துள்ளது.

நேற்றுப் பிற்பகல் புதுமாத்தளனில் இருந்து புறப்பட்ட இக் கப்பல் நேற்றிரவு புல்மோட்டையை வந்தடைந்தது. (அ-1)

## மேல்மாகாணசபைத் தேர்தலுக்கு முன் புலிகளை அரசு முற்றாக அழித்துவிடும்
### அமைச்சர் சமரசிங்க சொல்கிறார்



கொழும்பு, மார்ச் 31

எதிர்வரும் மேல்மாகாணசபைத் தேர்தலுக்கு முன்னர் - எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் புலிகளை அரசு முற்றாக அழித்துவிடும். புலிகளும், அவர்களின் தலைவர் பிரபாகரனும் இல்லாத நிலையிலேயே எமது மக்கள் மேல்மாகாண சபைத் தேர்தலில் வாக்களிக்கச் செல் வார்கள்.

- இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க.

ஹம்பாந் தோட்டை வீரக் கெட்டியவில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைப் போரினால் மக்கள் படும் கஷ்டங்கள் குறித்து அமெரிக்காவுடன் இந்தியா பேச்சு

புதுடில்லி, மார்ச் 31

இலங்கையில் நடைபெறும் போரின் காரணமாக அப்பகுதிப் பொதுமக்கள் அனுபவித்துவரும் வேதனைகள் மற்றும் அனர்த்தங்கள் குறித்து அமெரிக்க ராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளின்ரனுடன் இந்தியா பேச்சு நடத்தியுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கென உதயன் தனியாக வழங்கும் 6 பக்கங்கள் கொண்ட இலவச கல்விச் சுடர் இணைப்பிதழ் உள்ளே

## ஈச்சிலம்பற்றில் இளைஞர் சுட்டுக்கொலை

கொழும்பு, மார்ச் 31

திருகோணமலை, ஈச்சிலம்பற்று, பூநகர் பகுதியில் இனந்தெரியாத நபர்களால் நேற்று முன்தினம் இரவு 10. 30 மணியளவில் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார் என்று (12 ஆம் பக்கம் பார்க்க)

## கடலிலும் தரையிலும் நேற்றுக் கடும் சண்டை
### படகுகள், பதுங்கு குழி அழிக்கப்பட்டதாக அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 31

முல்லைத்தீவு மாவட்டத்தில் தரையிலும் கடலிலும் நேற்று அரசுப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் மோதல்கள் இடம்பெற்றன என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த மோதல்களில் 55 விடுதலைப் புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர்; கடற்படைச்சிப்பாய் ஒருவரும் கொல்லப்பட்டதுடன் ஓர் அதிகாரி உட்பட 3 கடற்படையினர் காயமடைந்தனர் என்றும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவு மற்றும் சாளை கடற்பரப்புகளில் கடற்புலிகளுக்கும் கடற்படையினருக்கும் இடையில் இரு வேறு கடற்சமர்கள்(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஏ-9 வீதியூடாக உணவுப் பொருள்களை அனுப்பத் தனியார் வர்த்தகர்களுடன் இன்று பேச்சு

கொழும்பு, மார்ச் 31

யாழ்ப்பாணத்தில் அத்தியாவசிய உணவுப் பொருள்களையும், ஏனைய பொருள்களையும் சராசரி விலை மட்டத்திற்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது.

இதற்கமைய கொழும்பிலுள்ள தனியார் வர்த்தகத் துறையினர் யாழ்ப்பாணத்திற்குத் தாராளமாகச் சென்று வர்த்தகத்தில் ஈடுபடுவதற்கான அனுமதியைப் பெற்றுக்கொடுக்க அரசு தீர்மானித்துள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நேற்று 112 பேர் உயிரிழப்பு; 154 பேர் காயம்
### பாதுகாப்பு வலயம் மீது விமான, ஷெல் தாக்குதல்களில்

கொழும்பு, மார்ச்31

முல்லைத்தீவு மக்கள் பாதுகாப்பு வலயப் பகுதிகள் மீது படையினர் நேற்று மேற்கொண்ட விமான மற்றும் ஷெல் தாக்குதல்களில் 21 சிறுவர்கள் உட்பட 112 பேர் படுகொலை செய்யப்பட்டனர்; 27 சிறுவர்கள் உட்பட 154 பேர் காயமடைந்தனர் என இணையத்தளங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. இணையத்தளங்களில்நேற்றைய

(11 பக்கம் பார்க்க)

## ஏ – 9 வீதியூடான வாகனப் போக்குவரத்துக்கு பாதுகாப்பாக புளியங்குளத்தில் பொலிஸ்நிலையம்

கொழும்பு, மார்ச் 31

யாழ். - கண்டி வீதியில் - ஏ9 வீதியில் - இரண்டாவது பொலிஸ் நிலையத்தை இன்னும் ஒரு சில நாள்களில் அமைக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

வவுனியா, ஓமந்தையில் முதலாவது பொலிஸ் நிலையம் அண்மையில் திறக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது பொலிஸ் நிலையத்தை புளியங்குளத்திலும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தை கனகராயன் குளத்திலும் அமைக்க ஏற்பாடு செய்யப்படுவதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (12 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் தயாரான 'ரோபோ' சர்வதேச கண்காட்சியில் முதலிடம்
### மொறட்டுவ பல்கலை மாணவர்கள் சாதனை

கொழும்பு, மார்ச் 31

இந்தியாவின் மும்பை நகரில் அண்மையில் நடந்த 'ரோபோ' போட்டியில் இலங்கையில் தயாரிக்கப்பட்ட ரோபோவிற்கு முதலிடம் கிடைத்துள்ளது.

மொறட்டுவ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பொறியியல் பிரிவே இந்த ரோபோவைத் தயாரித்தது.

இந்த ரோபோவின் வேகம் மற்றும் தடை அறிந்து வழியை (12 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மன்னார் ஆஸ்பத்திரி சிற்றூழியரான புலோலி இளைஞன் வவுனியாவில் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 31

மன்னார் அரசினர் வைத்தியசாலையில் சிற்றூழியராகப் பணி புரியும் புலோலியைச் சேர்ந்த இளைஞன் வவுனியாவில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார் என அவரது தாயார் மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

புலோலி வடமேற்மகச் சேந்த கண பதி சிறீபாஸ்கரன் (வயது32) என்பவரே கைது செய்யப்பட்டவராவார்.

அவரது தாயார் முறைப்பாட்டில் தெரிவித்திருப்பவை வருமாறு:-

மன்னார் பட்டித் தோட்டம், தாழ்வுப் பாட்டில் தற்சமயம் வசித்துவரும் இவர் மன்னார் வைத்தியசாலையில் சிற்றூழியராகப் பணியாற்றி வருகிறார்.

சொந்த அலுவலாக கடந்த 22 ஆம் திகதி வவுனியா ஆஸ்பத்திரிக்கு சென்ற இவர் அங்குவைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார் . அவரை விடுவிக்க ஏற்பாடு செய்யவேண்டும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (1-25)

## முதலாம் ஆண்டு நினைவுஅஞ்சலி

மண்ணில்: 14 * 04 * 1948



விண்ணில்: 14 * 04 * 2008

திதி:31/03/2009

அன்பாலும் பண்பாலும்அனைவரையும் அரவணைத்து
மீளாத்துயில் கொண்ட எம் அன்புத் தெய்வமே!
ஆண்டு ஒன்று சென்றாலும் அகலவில்லை உம் நினைவு
நீர் மீளாத் துயில் கொண்டாலும் மீள வில்லை எம்துயரம்
நாம் வாழும் காலம்வரை வற்றாது உம் நினைவலைகள்

உரும்பிராய் வடக்கு, உரும்பிராய். — உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும் தாய், மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## விண்ணக வாழ்வின் முதலாம் வருட நினைவஞ்சலி

அன்னை மடியில் 20 ★ 06 ★ 1938



ஆண்டவன் அரவணைப்பில் 31 ★ 03 ★ 2008

**அமரர் சுப்பிரமணியம் யோசேப்பூராசா**

(ஓய்வுபெற்ற அதிபர், செயலாளர், புங்குடுதீவு அந்தோனியார் ஆலயம். இயக்குனர் - அந்தோனியார் தெய்வீகக் குழந்தைகள் இல்லம்)

அன்பால் வழிநடத்தி அறிவூட்டியே
நின்பால் உறவுகளைத் துயரில் ஆழ்த்திப்
பொன்போல் ஓராண்டு சென்றாலும்
எம் துயரமின்னும் ஆறவில்லை.

இல. 14, நவீன சந்தை, யாழ்ப்பாணம். — மயூரா அன்பளிப்பகம், மயூரா டிஸ்றிபியூட்டர்ஸ்.

## கோப்பாய் அதிபர்கள் கூட்டம் வெள்ளியன்று

கோப்பாய், மார்ச் 31

கோப்பாய் கோட்டப் பாடசாலை அதிபர்களின் கூட்டம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக கோப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ்.சித்திவடிவேல் அறிவித்துள்ளார். (1-72)

## வீதி விபத்துக்களில் இருவர் காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 31

வீதி விபத்துக்களில் சிக்கி நேற்று முன்தினம் சனிக்கிழமை இருவர் காயமடைந்தனர்.

சரசாலைப் பகுதியில் "லான்ட் மாஸ்டர்" வாகனத்தின் ஓரத்தில் அமர்ந்திருந்த நபரை வேகமாக வந்த மோட்டார்சைக் கிள் மோதியதில் தூக்கி வீசப்பட்டு அதேஇடத்தைச் சேர்ந்த ரி.பிரசன்னா வயது 40 என்பவரும், நாவற்குழிப் பகுதியில் வீதியின் குறுக்கே ஓடிய நாயுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் கைதடி - நாவற்குழியைச் சேர்ந்த சுந்தரராஜ் கஸிஸ்ரஸ் (வயது - 21) என்பவரும் காயமடைந்தனர்.

காயமடைந்த இருவரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (1-207)

## யாழ்.பல்கலையில் நாளை விரிவுரை

கோப்பாய், மார்ச் 31

இலங்கை விஞ்ஞானச் சங்கத்தின் சமூக விஞ்ஞான பிரிவு நடத்தும் சிறப்பு விரிவுரை நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக புவியியல் துறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக கல்வியியற் துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி "கல்விசார் எழுத்தாக்கத்திற்கான அணுகுமுறை" ("Approcach to Academic writing") என்னும் தலைப்பில் விரிவுரையாற்றுவார். ஆர்வலர்கள் எவரும் இச் செயலமர்வில் கலந்து பயன் பெறலாமென ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளார்கள். (1-72)

## நேர்ப் திட்டத்தின் பயிற்சி நெறிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 31

உலகவங்கியின் நிதி உதவியுடன் "நேர்ப்" திட்டத்தின் கீழ் சங்கானை, நல்லூர் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் இளைஞர்களுக்கான பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக திட்டத்தின் பிரதித்திட்டப்பணிப்பாளர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் தெரிவித்தார்.

சங்கானை பிரதேச செயலர் பிரிவில் 3 ஆம் திகதி காலை 9 மணிக்கு மரவேலைப் பயிற்சி நெறிகள் ஆரம்பமாகவுள்ளன. சங்கானை பிரதேச செயலர் திருமதி பாபு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பயிற்சி நெறியினை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு வீட்டு மின் இணைப்புப் பயிற்சிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் பிரதம விருந்தினராகக் கலந்து இந்தப் பயிற்சிகளை ஆரம்பித்து வைப்பார். (1-9)

## கண்ணீர் அஞ்சலி



எமது சங்க முன்னைநாள் பணியாளரும் சமூக சேவையாளருமான இ. சிவநாதன் அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி மங்கையர்க்கரசி இராசரத்தினம்**

அவர்கள் 28.03.2009 சனிக்கிழமை கொழும்பில் இறைவனடி சேர்ந்த நிலையில் துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல வேலணை வங்களாவடி முருகனை வேண்டி நிற்கின்றோம்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

தலைவர், பணிப்பாளர், வேலணை ப.நோ.கூ.சங்கம். பணியாளர்கள், கூட்டுறவு ஊழியர்கள் தொழிற்சங்கம், வேலணை ப.நோ.கூ.சங்கம்.

## கண்ணீர் அஞ்சலி

**அமரர் குண்டுமணி திரவியநாதன்**

(உப அதிபர், யா/இமையாணன் அ.த.க வித்தியாலயம்)



பண்பிலே தெய்வமாய், பார்வையிலே எளிமையாய், அன்புடனே அறிவூட்டும் நல் ஆசானாய் கடமையிலே கண்ணியமாய், காலமது தவறாது கல்விப் பணி புரிந்து, மாணவர்கள் கதறியழ, மற்றையோர் கண்ணீர் மல்க மறைந்துவிட்ட எம் ஆசிரியர் திரவியநாதன் அவர்களுக்கு இதய பூர்வமான அஞ்சலியைச் செலுத்துவதோடு அவரது திடீர் மறைவால் கலங்கி நிற்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

லிவ்கோ (LIFCO) கல்வி மன்றம், உடுப்பிட்டி. — நிர்வாகி, ஆசிரியர்கள், மாணவர்கள்.

## தவறிவிட்டது

பத்திமா நவராஜா - பாவிஸ்சசிதரன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (920121560V) ஆடியபாதம் வீதிக்கும், செங்குந்தா இந்துக்கல்லூரிக்கும் இடையில் (23.03.2009) அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் [illegible]

"சிறீ கந்தகிரி"

ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். தொ.பே: 077 9850410

## அம்பாறை, இங்கிரியகலவில் இரு மின்மாற்றிகள் சேதம்

அம்பாறை, இங்கிரியகல பகுதியில் உள்ள மின் நிலையத்தில் நேற்று ஏற்பட்ட தீ விபத்தால் இரண்டு மின் மாற்றிகள் சேதமடைந்தன.

இயந்திரக் கோளாறு காரணமாகவே இந்த தீவிபத்து ஏற்பட்டுள்ளது என மின்சாரசபை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தை அடுத்து அம்பாறை, உகனை, இங்கிரியாகல உட்பட பல பகுதிகளில் மின்சாரம் தடைப்பட்டுள்ளது எனவும் கூறப்படுகிறது. (1-சி)

# மரண அறிவித்தல்கள்

## இரத்தினசபாபதி அழகம்மா



வியாபாரிமூலை, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினசபாபதி அழகம்மா நேற்று (30.03.2009) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினசபாபதியின் அன்பு மனைவியும், கமலாதேவி (கொழும்பு), இந்திராதேவி (மாத்தளை), சகுந்தலாதேவி (கொழும்பு), பத்மாதேவி, சிவபாலன் (நோர்வே), அமரர் ஜெயராஜா, கிருஸ்ணராஜன் (டென்மார்க்), மகேந்திரன், டாக்டர் ரஞ்சினி தேவி (கொழும்பு), ஆகியோரின் பாசமிகு தாயாரும், நடராசா (ஆசிரியர், கொழும்பு), கந்தசாமி (மாத்தளை), அமரர் நல்லநாதன் (ஆசிரியர்), கஜானந்தன், சிதம்பரநாதன் (ஆசிரியர், கொழும்பு) சாந்தமதி (நோர்வே), செல்வராணி, கமலலோஜனி (டென்மார்க்), செல்வராணி ஆகியோரின் அன்பு மாமியாரும், காண்டீபன் (டென்மார்க்), சந்திரிகா (திருகோணமலை), காங் கேசன் (கனடா), கானமோகன் (கொழும்பு), சசிரேகா (கனடா), புஸ் பவதி (மாத்தளை), ரூபவதி (மாத்தளை), ரமணன் (மாத் தளை), மதுராவதி (மாத்தளை), விஜிதா (கொழும்பு), நிரஞ் சலா (கொழும்பு), யசோதரன் (கனடா), குணதரன், மகாதரன், கஸ் தூரி (நோர்வே), வினோஜ் (நோர்வே), சிந்துஜா, லக் ஷனா, பிரசாந், அச்சுதன் (டென்மார்க்), நிமலன் (டென்மார்க்), சோபனா, கீதன், நிதர்ஷன், அர்ஜூன், சிவாகர் (கொழும்பு), கிருத்திகன் (கொழும்பு) ஆகியோரின் பேர்த்தியும் கார்த்திகா (டென் மார்க்), சேந்தன் (திருகோணமலை), விஜி (கனடா), முரளி (கனடா), நந்தகுமார் (அமெரிக்கா), சிவராசா (மாத்தளை), ஜெகதீஸ்வரன் (மாத்தளை), சிவசுந்தரம் (ஆசிரியர் - கொழும்பு), சுவேதா (கனடா), துஷ்யந்தன் (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியும், சமீரா (டென்மார்க்), துவாகரன் (திரு கோணமலை), பிரியங்கா (திருகோணமலை), மானுஷா (கனடா), கரீஸ் (கனடா), சிவதர்ஷன் (மாத்தளை), நதீஷா (மாத்தளை), டிரோஷிகா (மாத்தளை), சதுர்ஷன் (மாத்தளை), சிவராம் (கொழும்பு), ஜெஸ்வின் (கனடா) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.03.2009) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பி.ப. 3 மணியளவில் சுப்பர் மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வியாபாரி மூலை, பருத்தித்துறை. — தகவல்: குடும்பத்தினர்.

## திருமதி சத்தியமூர்த்தி பாக்கியம்

யாழ்ப்பாணம், குப்பிளானைப் பிறப்பிடமாகவும் வவுனியா, உக்கிளாங்குளப் பிள்ளையார் கோயில் வீதி, உக்கிளாங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சத்தியமூர்த்தி பாக்கியம் நேற்று (30.03.2009) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் சத்தியமூர்த்தியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பொன்னையா-பொன்னுப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் சரவணமுத்து- நாகமுத்து தம்பதியினரின் அன்பு மருமகளும், தங்கமுத்து, யோகமங்களம், சிவபாத சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், வேணி, கிருஷ்ணகுமார், கோமளா, வேணுகுமார், நந்தகுமார், சியாமளா ஆகியோரின் அன்புத் தாயும், நரேன், ஜெயக்குமார், செந்தூரன், வாசுகி, வாணி ஆகியோரின் மாமியாரும், டனுசியா, யோகிதன், சங்கீர்த்தனா, பிருந்தனா, பாலமுருகன், கஸ்த்தூரி, லாவண்யா, நிவேதன், துவேகன், விகாஸ், விஷா, கிஷாந், டெனி, சமந்தா, கஜீபன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.03.2009) செவ்வாய்க்கிழமை உக்கிளாங்குளத்திலுள்ள அவரது இல்த்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தட்சணாங்குள இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: கோமளா ஜெயக்குமார் (கோமா) (மகள்)

வவுனியா.

## திருமதி தசக்கிரீபன் சுபாசினி



கொக்குவில் மேற்கு, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், 175, சிவன்பண்ணை வீதி, கொட்டடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தசக்கிரீபன் (நக்கீரன்) சுபாசினி நேற்று (30.03.2009) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராசேந்திரம் மற்றும் தங்கலெட்சுமி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சண்முகநாதன் மற்றும் ஞானப்பூங்கோதை ஆகியோரின் அன்பு மருமகளும், தசக்கிரீபனின் (வேலணை) அன்பு மனைவியும், நிகேதன், கேனுஜன், கபிநயா, நிலக்ஷன், கம்ஷிகா ஆகியோரின் அன்புத் தாயாரும், சுரேஸ்குமார், ஜெயக்குமார், பாலகுமார் (மகராசி நகை மாடம்) லதாசினி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஞானவசந்தி, சிறிகுகவதனி, தசவரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

175, சிவன்பண்ணை வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். — தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## அரங்கேற ஆரம்பித்துவிட்ட தமிழக அரசியல் அசிங்கம்!

இந்தியாவின் நாடாளுமன்றத்துக்கு - லோகசபைக்கு - அடுத்த மாத மத்தியில் பொதுத்தேர்தல் ஆரம்பமாகிறது. அதில் போட்டியிடும் கட்சிகள், வேட்பாளர்கள் நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்வதற்கு நிர்ணயிக்கப் பட்ட நாள்கள் நெருங்கிவிட்டன. அதனால் அரசியல் கட்சிகள் தமக்குள் கூட்டணி வைத்து வெற்றி பெறுவதற்கான ஆயுத்தங்களைஆரம்பித்துள்ளன.

ஒரு கட்சி தேவைப்படும் கூடுதல் ஆசனங்களை ஒரு கட்சியே பெற்று, தனித்து ஆட்சி அமைக்கும் காலம் இப்போது இந்தியாவிலும் இல்லாமற் போய்விட்டது. கூட்டணிக் கட்சிகளைக் கொண்ட மத்திய அரசே புதுடில்லியில் ஆட்சி நடத்தும் காலம் பல வருடங்களுக்கு முன்னரே வழமையாகி விட்டது.

மேலும், இந்தியப் பொதுத் தேர்தலில் பலம் வாய்ந்த இரண்டு பிரதான அணிகள் மோதும்நிலை மாறி இப்போது மூன்றாவது அணி ஒன்றும் பிறப்பதற்கான வாய்ப்பிருப்பதாக அவதானிக்கப்படுகிறது.

வேட்பாளர் நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யும் பணி நேற்றே சில மாநிலங்களில் ஆரம்பமாகிவிட்டது. மாநிலத்துக்கு மாநிலம் வேறுபட்டதாக, வேட்பாளர் நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யும் திகதி ஏப்ரல் 24 ஆம் திகதி வரை நீளுகிறது. தேர்தல் வாக்களிப்பும் ஏப்ரல் 16 ஆம் திகதி தொடங்கி மே 13 ஆம் திகதிவரை நடைபெறும். மே 16 ஆம் திகதி வாக்குகள் எண்ணப் பட்டு முடிவுகள் வெவ்வேறு நாள்களில் வெளியிடப்படும். இந்தியாவின் மத்திய அரசாங்கம் - 15 ஆவது நாடாளுமன்றம் - ஜூன் மாதம் 2 ஆம் திகதிக்கு முன்னர் கூடும்.

ஆகையால், அகன்று பரந்த இந்தியாவின் நான்கு திக்குகளிலும் - திசைகளிலும், சுமார் ஒன்றரை மாதங்களுக்குத் தேர்தல் சூட்டின் அனல் வீசப்போகிறது.

வேறெந்த இந்தியத் தேர்தல்களையும் விட, 15 ஆவது லோக சபைக்கான தேர்தல்களில் ஈழத்தமிழர்களின் பார்வை மே மாதம் தமிழகத்தில் நடைபெறவுள்ள தேர்தலிலேயே விழும் என்பது சொல்லித் தெரியவேண்டிய ஒன்றல்ல.

முன்னர் எப்போதும் இல்லாதவாறு, ஈழத்தமிழர் விவகாரத்தை வாக்கு வங்கியாக்க வேண்டிய தேவை, தமிழக அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. எந்தக் கட்சி அல்லது எந்த வேட்பாளராயினும் கொதித்துக் கொண்டிருக்கும் ஈழத்தமிழர் விவகாரத்தில் அதிக அக்கறையும், ஈடுபாடும், ஆதரவும் காட்டுகிறாரோ அவரது வாக்குப்பலம் கனமாகி அவர் புதுடில்லி நாடாளுமன்றத்தில் ஆசனத்தைப் பிடித்துக்கொள்ள இயலுமென்ற தேர்தல் களநிலைமை தமிழகத்தில் உருவாகிவருகிறது.

அந்த அளவுக்கு,வன்னித் தமிழ் மக்களின் மனிதப் பேரவலம் குறித்து தொப்புள்கொடி உறவுகளின் (எம்.ஜி.ஆரின் வாசகத்தில் இரத்தத்தின் இரத்தங்களின்) இரக்கத்தின் பால், கவலை மேலீட்டினால் எழுந்துள்ள ஆதரவு உணர்வுகளைத் தமக்கு ஆதாயமாக்க, வாக்குப் பெருக்கத்துக்கான குடுகுடுப்பையடிக்க ஏற்கனவே தமிழக அரசியல் தலைவர்கள் முட்டி மோதுகின்றனர். அவர்களின் அரசியல் போட்டிப்போருக்கு, ஒருவரிடமிருந்து மற்றவர் தம்மைத் தற்காத்துக் கொள்ளகையில் ஏந்த வேண்டிய கேடயமாகவும் வன்னி மக்களின் மனிதப் பேரவலம் வார்க்கப்பட்டு விட்டது.

வட இந்திய அரசியல் தலைவர்கள் ஈழத் தமிழர்களின் விவகாரத்தைத் தமது குப்பைத் தொட்டிகளுக்குள் போட்டு விட்டார்கள் என்று இங்குள்ளோரின் நெஞ்சங்கள் கனக்கிறது என்றால் -

தமிழக அரசியல் தலைவர்கள் தமக்குள் கன்னை பிரித்துக் கொண்டு எதுவுமே சாதிக்க, ஈட்ட முடியாதவாறு சிதறுண்டு போகும் படலம் விரிவதை இப்போது தூரத்தே துயரத்துடன் பார்க்க முடிகிறது.

அணி மாறுதல், தொகுதிப் பங்கீடு என்ற தேர்தல் புலத்தின் ''நாகரிகம்'' வேறெந்த மாநிலங்களையும் விட தமிழகத்தில் ஆரம்பத்திலேயே வீச்சுப் பெற்றிருக்கிறது. அந்தக் களத்தில், ஈழத்தமிழரைக் காப்பாற்றுவதற்கு மத்திய அரசுக்கு உரிய அழுத்தம் கொடுக்க முடியாமல் கையறு நிலைக்கு வந்து தமிழ்ச் சொற்களால் சிலம்படி காட்டும் கருணாநிதியும் -

ஈழத்தமிழர் விவகாரத்தைக் கையில் எடுக்காதிருப்பின், நாடாளுமன்றத் தேர்தலில் அதிக ஆசனங்களைப் பெற்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் செல்வாக்கை உடைத்துவிட முடியாது என ஊகித்து, உண்ந்து உண்ணாவிரதம் இருந்த ஜெயலலிதாவும் -

மத்திய அரசைக் கைப்பற்றப்போகும் ஏதோ ஒரு அணியில் சேர மூச்சு வாங்க வாங்கக் குதித்திருக்கிறார்கள்!

இந்த இரண்டு அணிகளில் எந்த அணியோடு ஒட்டிக்கொள்ளலாம், பேரம் பேசலாம் என்று போட்டி போடுகின்றனர் ஏனைய தமிழகத் தலைவர்களும், கட்சியினரும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துடன் ஒட்டியிருந்து சலித்து, வெறுப்படைந்த பாட்டாளி மக்கள் கட்சியின் இராமதாஸும் -

தமிழ்ப் பாதுகாப்பு இயக்கத்தில் ஒரே அணியில் நின்ற திருமாவளவனும், இராமதாஸும் - எதிரும் புதிருமாகப் முட்டி மோதும் நிலை ஆரம்பமாகியுள்ளது.

நாடாளுமன்ற ஆசனங்களைப் பிடித்து விடவேண்டும் என்ற நப்பாசையில் இன்னும் எத்தனையோ முட்டி மோதல்களும், அணி மோதல்களும் அரங்கேறப் போகின்றன.

தமிழக மக்கள் ஈழத்தமிழர் விவகாரத்தை மறந்துவிட மாட்டார்கள். ஆனால் தமிழக அரசியல் தலைவர்கள்...தங்கள் குத்துக்கரணங்களையும், குத்து வெட்டுகளையுமே அரங்கேற்றிக் கொண்டிருப்பார்கள். தமிழகத் தலைவர்களின் அரசியல் அசிங்கம் நாளாக ஆக நாறும் என நிச்சயம் எதிர்பார்க்கலாம்....!

# அகதிமுகாம்கள் நிரம்பி வழிகின்றன: சுகாதாரமான சூழ்நிலையும் அங்கு இல்லை

## வவுனியா நிலை குறித்து செஞ்சிலுவை அதிகாரி

புதுடில்லி,மார்ச் 31

''அகதிமுகாம் அமைந்துள்ள பகுதிகளில் ஏராளமான இராணுவத்தினர் காணப் படுகின்றனர். இடம்பெயர்ந்த மக்கள் வெளியில்போக அனுமதிக் கப்படுவதில்லை. சுதந்திரமாக நடமாடுவதற்கான சூழ்நிலையும் காணப்படவில்லை''

வன்னி மக்கள் வாழும் வவு னியா நலன்புரி முகாம்களைசுற்றிப் பார்த்துவிட்டுத் திரும்பியுள்ள செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பிரதிநிதி ஒருவர் மேற்கண்ட கருத்தைப் புதுடில்லியில் வெளியிட்டார்.

இலங்கையின் மனிதாபிமான தேவைக்கு உதவவே நாங்கள் விரும்புகின்றோம். அரசுக்கு எதிராக செயல்படுவது எமது நோக்கமல்ல என்றார் அவர்.

வவுனியாவுக்குப் போய் வருவதற்கு விசேட வாய்ப்பளிக்கப்பட்டிருந்த சிரேஷ்ட ஐரோப்பிய அலுவலரான எஸ்கோ கெண்ட் ரஸ்கின்ஸ்கிஜ் என்பவரே இந்தியத் தலைநகரில் மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதில் பங்காளிகளாக இருக்கவே நாங்கள் கோருகிறோம் என்று கூறினார்.

தற்பொழுது செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு மாத்திரமே மோதல் இடம் பெறும் இடங்களுக்குப்போக அனுமதிக்கப்பட்டுள்ளது. ஏனைய உதவி வழங்கும் குழுக்களும் தாம் அனுமதிக்கப்பட வேண்டும் என்று கோரி வருகிறார்கள்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் அதிகாரி மேலும் தெரிவிக்கையில், இலங்கை அரசு இடம்பெயர்ந்த மக்களை நியாயமான வகையில் நன்றாகக் கவனித்துக் கொள்கின்றது. முகாம்களில் அளவுக்கு அதிகமானவர்கள் காணப்படுகிறார்கள். சுற்றாடல், சுகாதாரம் பற்றிய மோசமான பிரச்சினைகள் காணப்படுகின்றன- என்றார். (ப)

## தந்தை செல்வாவின் பிறந்த தினமும் நன்றி ஆராதனையும்

யாழ்ப்பாணம்,மார்ச் 31

யாழ்.கிறிஸ்தவ ஒன்றியத்தின் ஏற்பாட்டில் தந்தை செல்வாவின் 111 ஆவது பிறந்த தினமும் அவரது சேவைகளுக்கு நன்றி தெரிவிக்கும் ஆராதனையும் இன்று செவ்வாய்க் கிழமை மாலை 5 மணிக்கு சுண்டிக் குளி பரியோவான் ஆலயத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் தென்னிந்தியத் திருச்சபையின் இளைப்பாறிய பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுவார். (50-224)

# யாழ்.போதனா வைத்தியசாலைக்கு 4 ஆயிரம் 'எக்ஸ்றே பிலிம்'கள்

## கப்பல் மூலம் எடுத்துவர நடவடிக்கை

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு சுமார் 4 ஆயிரம் 'எக்ஸ்றே பிலிம்'களை கப்பல் மூலம் விரைவில் எடுத்து வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கான துரித ஏற்பாடுகளை வைத்தியசாலை நிர்வாகம் மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது.

கப்பல் மூலம் எடுத்து வரப்படவுள்ள இந்த 4 ஆயிரம் 'எக்ஸ்றே பிலிம்'களும் வைத்தியசாலையில் மூன்றுமாத காலத் தேவையைப் பூர்த்தி [illegible]ய்யப் போதுமானதாகும் எனவும் வைத்தி[illegible]சாலை வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

தற்போது வைத்தியசாலையில் 'எக்ஸ்றே பிலிம்'களுக்கு பலத்த தட்டுப்பாடு நிலவிவருகின்றது. இதனையடுத்தே அவற்றைக் கப்பல் மூலம் எடுத்து வருவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

தற்போது அவசர சிகிச்சைக்கு மட்டும் கையிருப்பில் இருக்கும் 'எக்ஸ்றே பிலிம்'களை பயன்படுத்துவதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (50-224)

# மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் தேர்வுப் பரீட்சை யாழ்ப்பாணத்தில்

## எதிர்வரும் 4 ஆம், 5 ஆம் திகதிகளில் நடைபெறும்

யாழ்ப்பாணம்,மார்ச் 31

மொறட்டுவப் பல்கலைக்கழகத்தின் கற்கைநெறிகளுக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கானதேர்வுப் பரீட்சை யாழ்ப்பாணத்தில் நடைபெற வுள்ளது.

எதிர்வரும் 4ஆம், 5 ஆம் திகதிகளில் யாழ்.பல்கலைக் கழகத்தில் இந்தத் தேர்வுப் பரீட்சையை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதற்கான ஒழுங்குகள் செய்யப் பட்டுள்ளதாக யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் தெரிவித்தார்.

எதிர்வரும் 4 ஆம், 5 ஆம் திகதிகளில் இந்தத் தேர்வுப் பரீட்சை கொழும்பில் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இந்தப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான அனுமதி அட்டைகளும் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

யாழ்ப்பாணத்துக்கும் வெளியிடங்களுக்குமான போக்குவரத்துச் சேவைகளில் தற்போது நெருக்கடி ஏற்பட்டுள்ளமையால் குறித்த தேர்வுப் பரீட்சைக்கு மாணவர்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது.

இதனையடுத்து தேர்வுப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் நேற்றுக் காலை யாழ்.செயலகத்துக்குச் சென்று தாம் பரீட்சைக்குச் செல்வதற்கு ஆவன செய்யுமாறும் அல்லது பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்த ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் யாழ்.அரச அதிபரிடம் கோரியிருந்தனர். இந்த விடயம் உடனடியாக யாழ்.பல்கலைக்கழகத் துணை வேந்தரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

இதனையடுத்து துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் இந்தப் பரீட்சைகளை யாழ்.பல்கலைக் கழகத்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

தகவல் தொழில்நுட்பம், கட்டடக்கலையும் வடிவமைப்பும்,சூழலியல் போன்ற கற்கைநெறிகளுக்கான தேர்வுப் பரீட்சையே இங்கு நடைபெறவுள்ளதெனவும், இது தொடர்பான மேலதிக விவரங்கள் அறியத்தரப் படும் எனவும் துணைவேந்தர் தெரிவித்தார்.

இந்தத் தேர்வுப் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்த ஏற்பாடு செய்யுமாறு பல் கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் உறுப்பினரான பேராசிரியர் எஸ்.சிற்றம்பலம் மொறட்டுவ பல்கலைக்கழக துணைவேந்தருடன் கலந்துரையாடினார்.

இந்த பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்த ஏற்பாடு செய்வதாக அவர் தெரிவித்தார் என பேராசிரியர் சிற்றம்பலம் கூறினார். (50-86-9-224)

### நாளை

| | |
|---|---|
| பங்குனி 19 | 01.04.2009 |
| | புதன்கிழமை |
| திதி: | சஷ்டி |
| | பி.இ. 12.49வரை |
| நட்சத்திரம்: | மிருகசீரிடம் |
| | பி.இ. [illegible]வரை |
| [illegible] | [illegible] |
| ராகுகாலம்: | 12.11 - 01.41 |

## யாழ்.போதனா வைத்தியசாலையில் பழுதடைந்துள்ள

# ஒட்சிசன் அடைக்கும் இயந்திரத்துக்கான உதிரிப்பாகங்கள் விமானம் மூலம் எடுத்துவரப்படும்

யாழ்ப்பாணம்,மார்ச் 31

யாழ்.போதனா வைத்தியசாலையில் பழுதடைந்த நிலையில் உள்ள ஒட்சிசன் அடைக்கும் இயந்திரத்துக்கான உதிரிப் பாகங்கள் கொழும்பிலிருந்து விமானம் மூலம் எடுத்துவரப்படவுள்ளன.

இதற்கான துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த இயந்திரம் கடந்த ஒருவார காலத்துக்கு மேலாகப் பழுதடைந்து செயற்படாமல் உள்ளது. இதனால் போதனா வைத்தியசாலையில் பல வேறு சிகிச்சைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து இந்த இயந்திரத்துக்கான உதிரிப்பாகங்களை உடனடியாகக் கொழும்பிலிருந்து விமானம் மூலம் எடுத்து வருவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம் வைத்தியசாலையில் ஒட்சிசனுக்கு தட்டுப்பாடு ஏற்படாத வகையில் கப்பல் மூலம் ஒரு தொகுதி ஒட்சிசன் சிலிண்டர்கள் கடந்த வாரத்தில் எடுத்து வரப்பட்டமை தெரிந்ததே. (50-224)

# சிறப்பாக உடையணியும் மனிதன் இளவரசர் சாள்ஸ்



லண்டன்,மார்ச் 31

உலகில் சிறப்பாக உடை அணியும் மனிதர் என்ற பட்டத்தை வென்றுள்ளார் பிரிட்டிஷ் பட்டத்து இளவரசர் சாள்ஸ்.

'எஸ்குயர்' என்ற அமைப்பு இந்தத் தேர்வை நடத்தியுள்ளது.

மகாராணி எலிசபெத் - எடின்பரோ கோமகன் பிரபு தம்பதிகளின் புதல்வரான சாள்ஸ் மகாராணிக்குப் பின்னர் பட்டத்துக்கு வரவுள்ளார்.

சிறப்பாக உடையணியும் மனிதர்களைத் தேர்வு செய்வதற்காக அண்மையில் தேர்வு ஒன்று நடத்தப்பட்டது.

வெள்ளித்திரை நட்சத்திரங்கள் றொன்னி கோபெட் மற்றும் நடிகர் பில்நைட் ஆகியவர்களை இரண்டாம், மூன்றாம் இடங்களுக்குத் தள்ளிவிட்டு சாள்ஸ் முதலாம் இடத்தை வென்றுள்ளார். அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவுக்கு நான்காம் இடம் கிடைத்துள்ளது.

இளவரசரின் நடை, உடை, பாவனை மற்றும் சட்டையில் வைத்துக் கொள்ளும் கைக்குட்டை, சில்க் கழுத்துப்பட்டி, அவர் அணியும் சப்பாத்துக்கள் யாவும் தேர்வில் கவனத்தில் எடுக்கப்பட்டது.

டெனிஸ் வீரர் றோஜர் பெடரர், நடிகர் அட்றீன் புரோடி மற்றும் குவைத் அரச குடும்பத்தைச் சேர்ந்த ஷெயக் மாஜட் அல்-சபா ஆகியவர்களையும் பின்னுக்குத் தள்ளிவிட்டார் இளவரசர் சாள்ஸ். (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,மார்ச் 31

இணுவையம்பதி சிவகாமி அம்மன் ஆலய வருடாந்த பெருந்திருவிழா கடந்த சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

எதிர்வரும் 7 ஆம் திகதி செவ்வாய் கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (201)

* * *

அளவெட்டி மேற்கு காட்டுப்புலம் ஆதி காளியம்பாள் ஆலயத்தில் மணவாளக்கோல விழா இன்று முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து மகேஸ்வர பூசையும் இடம்பெறும். (201)

* * *

நல்லூர் சிவஞானப்பிள்ளையார் ஆலய வருடாந்த பெருந்திருவிழா நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 10 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளன. (201)

* * *

புங்குடுதீவு மேற்கு பெருங்காடு மதுரையம்பதி மீனாட்சியம்மன் சமேத சோமசுந்தரேஸ்வரர் ஆலய வருடாந்த பெருந்திருவிழா நேற்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

எதிர்வரும் 7 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளன. (201)

* * *

வண்ணை,மார்ச் 31

யாழ்.அடைக்கல மாதா (ஓ.எல்.ஆர்) தேவாலயத்தில் வருடந்தோறும் நடைபெற்று வரும் யேசுகிறிஸ்துவின் திருப்பாடுகளின் ஆறாம் வெள்ளி தவ நிகழ்வுகள் நாளை புதன்கிழமை ஆயத்த வழிபாடுகளுடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளதாக ஆலயப் பங்குத் தந்தை அருட்பணி ம.றெஜி இராஜேஸ்வரன் அடிகள் தெரிவித்துள்ளார்.

தினமும் மாலை 4.30 மணிக்கு திருச்செப மாலையுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகி நடைபெறும். 3 ஆம் திகதி ஆறாம் வெள்ளிக்கிழமை அன்று மாலை 4.30 மணிக்கு நடைபெற இருக்கும் திருப்பாடுகள், தவ வழிபாடுகளில் குடாநாட்டின் சகல பகுதிகளில் இருந்தும் பெருந்தொகையான கிறிஸ்தவர்கள் கலந்த கொள்வரென்பது குறிப்பிடத்தக்கது. (203-160)

# தவக்காலச் சிந்தனை

## சுயநலத்தில் இறந்து பொதுநலத்தில் உயிர்ப்போம்

நான் என்று வாழ்வதை விடுத்து நாங்கள் என்று வாழத் திருச்சபையானது இவ்வாண்டிலே அழைப்பு விடுத்துள்ளது. எம்பிரான் இயேசு தனக்காக வாழ்ந்திருந்தால் உலகையே ஆட்சிபுரியும் அரசராக இருந்திருப்பார்.

ஆனால் இயேசு எங்களுக்காகத் தன்னையே பலியாக்கினார். ஏழைகளையும், எளிய வர்களையும், ஒடுக்கபட்டவர்களையும் அன்பு செய்தார். சட்டங்களினாலும், சம்ரதாயங்களினாலும் அடக்கப்பட்ட மக்களுக்காக நீதிக்குரல் கொடுத்தார். பிறரை அன்பு செய்தல் கடினமான காரியம் தான். பல துன்பங்கள், கஷ்ரங்கள், இழிவுகள் அனுபவிக்கத்தான் வேண்டும். இவ்வாழ்க்கைக்கு இயேசு ஒரு முன்னுதாரணம். நானும், என் குடும்பமும், நான்தான் பெருமிதமாக வாழவேண்டும்.

என்னைப் போன்றவர்களைத் தான் அன்பு செய்வேன் என்று வாழும் ஒரு வாழ்வு கிறிஸ்தவ வாழ்வல்ல. மாறாக இயேசு எம்மிடம் விரும்பிக் கேட்பது ''உன்னைப் போன்று உன் அயலவனையும் நேசி'' என் அயலில் இருப்பவர்கள் என்நிலையில் இருந்தாலும் அன்புறவிலும், நட்புறவிலும், பகிர்விலும் ஒரு அன்பிய சமூகமாக வாழ அழைக்கப்பட்டுள்ளோம். ஒரு நாளில் என் சுயநலத்தை களைந்து விட்டு என் அயலவனுக்காக என் சொல்லால், செயலால், சிந்தனையால், பயனுள்ள கருவியாக வாழ்ந்திருப்பேன். கிறிஸ்தவத்தின் அடித்தளம் பொதுநலம்தான். இப்புனிதமான காலத்தை அனுபவிக்கும் நாங்கள், நான் என்ற சுயநலத்தில் இறந்து நாங்கள் என்ற பொதுநலத்தில் உயிர்ப்போம். இறைவன் முன் எல்லோரும் சரிசமன் என்று சகோதரர்களாய் வாழுவோம்.

**வின்சன் கோமதி** நாவாந்துறை.

## ஓராண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 21 | | 31 |
| 06 | | 03 |
| 1938 | | 2008 |



**அமரர் சு.போ.பூராசா**

(முன்னாள் தலைவர் (புங்குடுதீவு பெருங்காடு, கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கம்)

புங்கை நகரிலே பூத்த புண்ணியசீலரே
பூராஜா" மாஸ்டர் ஐயா - நீர்
பூரைக்கு நீர் ராஜா ஐயா
புங்குடுதீவிற்கு புது ஒளி தந்தீரே
புகழ்பூத்த உத்தமரே.

புங்குடுதீவு பெருங்காடு கிழக்கு.
கிராம அபிவிருத்திச் சங்கம். இ.தேவதாஸ் (தலைவர்).

(83995)

## இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு,மார்ச் 31

யாழ்.மக்கள் வசந்த எழுச்சிப் பேரவை ஏற்பாட்டில் யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே மாவட்ட மட்டத்தில் லீக் முறையில் நடத்திவரும் கூடைப் பந்தாட்ட போட்டியில் இன்று செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்டத்திடலில் இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

* யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டு அணி எதிர் யாழ்ப்பாணம் சென்றல்ஸ் விளையாட்டுக் கழகம்.

* வட்டுக்கோட்டை 'ஒல்ட் கோல்ட்' விளையாட்டுக் கழகம் எதிர் யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம். (50-86)

* * *

வலி.வடக்கு,மார்ச் 31

யாழ்.மக்கள் வசந்த எழுச்சிப் பேரவை ஏற்பாட்டில் யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட லீக்குகளுக்கு இடையே இடம்பெற்ற போட்டிகளில் தெரிவு செய்யப் பட்ட அணிகளுக்கு இடையேயான வில கல் முறையில் நடைபெற்றுவரும் உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங் கில் இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:

* வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கைச் சேர்ந்த ஏழாலை ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் எதிர் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கைச் சேர்ந்த கரணவாய் மத்தி விளையாட்டுக் கழகம்.

* யாழ்ப்பாண உதைபந்தாட்ட லீக்கைச் சேர்ந்த அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் எதிர் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கைச் சேர்ந்த வடமராட்சி கலைமதி விளையாட்டுக் கழகம். (50-86)

## 'நிஷா'வால் பாதிக்கப்பட்ட கிணறுகள் இறைப்பு

வடமராட்சி,மார்ச் 31

'நிஷா' வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட கிணறுகளில் பருத்தித்துறை நகரசபைப் பகுதியில் 100 கிணறுகளும், பருத்தித்துறை பிரதேசசபைப் பகுதியில் 20 கிணறுகளும் இறைத்துச் சுத்தம் செய்யப்பட வேண்டியிருப்பதாக இச்சபைகளின் செயலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வடமராட்சி வடக்குப் பிரதேசத்தில் பருத்தித்துறை நகரசபைப் பகுதியில் 11 பொது, கோயில் கிணறுகளும், 65 தனியார் கிணறுகளும், பருத்தித்துறை பிரதேசசபைப் பகுதியில் 18 பொதுக்கிணறுகளும் 40 தனியார் கிணறுகளும், வல்வெட்டித்துறை நகரசபைப் பகுதியில் 10 பொதுக்கிணறுகளும் 20 தனியார் கிணறுகளும் இறைத்துச் சுத்தம் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை வல்வெட்டித்துறைப் பகுதியில் சேவாலங்கா நிறுவனமும் வெள்ளப் பாதிப்புக்குள்ளான கிணறுகளை இறைத்துச் சுத்தம் செய்து வருகின்றது.

(203-236)

## விணைத்திறன்காண் தடைப் பரீட்சை

வடக்கு மாகாண பொதுச் சேவையின் இலங்கை தொழில்நுட்பவியல் சேவை வகுப்பு II பிரிவு 'ஆ'ல் உள்ள அலுவலர்களுக்கான முதலாம் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை எதிர்வரும் சனிக்கிழமையும், வகுப்பு II 'அ' இல் உள்ள அலுவலர்களுக்கான 2ஆம் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பரீட்சை அனுமதி அட்டைகள் வடமாகாண பொதுச் சேவை ஆணைக் குழுவால் பரீட்சார்த்திகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண யாழ்.பிராந்திய ஆணையாளர் அறிவித்துள்ளார்.(201)

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 22 | | 22 |
| 11 | | 03 |
| 1927 | | 1999 |



**அமரர் நாகலிங்கம் சங்கரப்பிள்ளை**

*திதி: பஞ்சமி (31.03.2009)*

பாசமொடு பண்புகள் பல நிறைந்து
நேசமொடு எங்கள் மனங்களை நெகிழவைத்த
வாசமலராய் வலம் வந்த எங்கள் அப்பாவே
தேசம் விட்டு விண்ணுலகம் வாசம் கொண்டீரோ?
பத்து ஆண்டுகள் சென்றாலும் மறைந்திடுமோ உங்கள் நினைவுகள்...
உங்களை மறந்திடுமோ எங்கள் இதயம்

உங்கள் பிரிவுத் துயரத்தில் வாடும்:

இல.687/06, மானிப்பாய் வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் நாகராஜா பாக்கியராஜா**

தோற்றம்: 16.12.1963 மறைவு: 31.03.2007

திதி: 31.03.2009

இரண்டு வருடங்கள் இரண்டு யுகங்களாக தோன்றுதப்பா
பிரிவை எமக்குள் புதைத்து விட்டு வெகுதூரம் சென்று விட்டீர்களே...
துவளும் உங்கள் நினைவுகள் எம் மனதை உருக்குலைய வைக்கிறதே...
துடிக்கும் எம் இதயம் உங்கள் நாமம் சொல்லுதப்பா
முத்தான உங்கள் நினைவுகள் நித்தமும் எங்கள் நெஞ்சில் தொடர்கிறது
நித்தமும் உங்களை நினைத்து நினைத்து நிம்மதியை தொலைத்து விட்டோம்
கண்ணீரில் விளக்கேரித்து கவலை நோயால் தினம் தவிக்கின்றோம்
தவணை முறையில் திருப்பிக் கொடுக்கும் நல்ல மனம் அவனிடமில்லை
அவனே கொடுத்தான் அவனே எடுத்தான் அழுவதைத் தவிர வழியுமில்லை
உங்களுடன் சேர்ந்து வாழ்ந்த காலங்களே வசந்த காலம்
நிலையற்ற இப்புவி வாழ்வில் அவ் இனிய காலங்கள் மீண்டும் தோன்றுமா?
உங்கள் ஆத்மா சாந்தியடைய புங்குடுதீவு பானாவிடை சிவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

இல.687/26A, மானிப்பாய் வீதி. ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள் தாய், சகோதரர்கள்.

(83990)

## மரண அறிவித்தல்

### திருமதி சின்னம்மா தங்கராசா



(ஓய்வுபெற்ற நெசவு ஆசிரியை)

இணுவிலைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னம்மா தங்கராசா நேற்று (30.03.2009) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வினாசித்தம்பி - பார்வதி தம்பதியரின் இளைய மகளும் கணபதிப்பிள்ளை - நாகரத்தினம் தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற மின்தறி நிலைய பொறுப்பதிகாரி கணபதிப்பிள்ளை தங்கராசாவின் அன்பு மனைவியும் வசந்தகுமாரி (ஆசிரியை, தும்பளை சிவப்பிரகாச ம.வி.) சாந்தகுமாரி (ஆசிரியை, பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயும் அகிலரூபனின் அன்பு மாமியும் கவீசன், கார்த்தீசன் ஆகியோரின் அன்பு அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.03.2009) செவ்வாய்க்கிழமை காலை 8 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சுப்பர் மடம் இந்துமயானத் திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பத்திரகாளி கோயில் ஒழுங்கை, பருத்தித்துறை.

தகவல்: குடும்பத்தினர்.

(சி/557720)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவப் பாடசாலைகளில் சைவ உணவு கொடுத்தலே நீதி; புலால் உணவு கொடுக்கப்படுவது தவிர்க்கப்பட வேண்டும்

யாழ்ப்பாணம், மார்ச் 31

சைவசமயத்தைப் பின்பற்றும் மாணவர்கள் உள்ள பாடசாலைகளில் புலால் உணவு வழங்கப்படுவது தவிர்க்கப்பட்டு, சைவ உணவை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென அகில இலங்கை சைவப் புலவர் சங்கம் அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் உள்ள சிலவிடயங்கள் வருமாறு:

*சைவப்பாடசாலைகளில் சைவப் பண்பாட்டைச் சிதைக்கவல்ல புலால் உணவை வழங்குவது நீதியா?

* இந்நாட்டில் சைவப்பாடசாலைகள் உருவாக்கப்பட்ட வரலாற்றையும், நோக்கத்தையும் சிந்தித்துப் பாருங்கள்.

*ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்திலே கிறிஸ்தவப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. அங்கு சைவசமயக் கல்வியையோ பண்பாட்டையோ மாணவர் பெறமுடியாதிருந்தது.

*இந்த நிலையில் ஸ்ரீலஸ்ரீ நாவலர் பெருமான் சைவப்பிள்ளைகள் சைவப் பண்பாட்டுடன் கூடிய சூழலில் கல்வி பயில்வதற்கு வசதியாகச் சைவப்பாடசாலைகளை உருவாக்க வேண்டுமென வேண்டுகோள் விடுத்தார். தானே முதலாவது சைவப்பாடசாலையாக வண்ணார் பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாலயத்தை (இன்று வண்.நாவலர் மகாவித்தியாலயம்) தொடக்கினார்.

*அவரின் சிந்தனையின் வழிவந்த சைவ வள்ளல்களும், இந்துக் கல்லூரிச் சபை, சைவ வித்தியா விருத்திச் சங்கம் முதலான நிறுவனங்களும் நம் நாடெங்கும் சைவப் பாடசாலைகளை நிறுவிச் சைவச் சூழலில் சைவப் பிள்ளைகள் கல்வி கற்க வழி செய்தார்கள்.

*புலால் உணவில்தான் போஷாக்கிருக்கிறதென்றால் புலாலுண்ணாத எத்தனையோ இலட்சம் பேர் போஷாக்கில்லாமலா சுகவாழ்வு வாழ்கிறார்கள்?

*சும்மா வருவதை ஏன் விடுவான் என நினைப்பது எவ்வளவு சிறுமை, சும்மாவரும் நஞ்சையும் ஏற்கலாமா?

*விரும்பியவர்களுக்குத்தானே வழங்கப்படுகிறது என்று பொறுப்பு வாய்ந்தவர்கள் சொல்லலாமா? மாணவப் பருவம் நல்லது எது, கெட்டது எது என்பதை அறியாத பருவம். நல்லதை அறியும் கல்வியைப் புகட்டுவதை விட்டு விரும்பியதை எடுங்கள் என்பது அறியுடைமையாகுமா?

*பாடசாலைகளை நிறுவியவர்களின் நோக்கத்துக்கு மாறாக இடைக்காலத்தவர் செயற்படல் துரோகம் என்பதை மறவாதீர்.

*சைவப்பாடசாலைகளில் எக்காரணங் கொண்டும் புலால் உண வைப் புகவிடாதீர்கள் என்று உங்களை வேண்டுகின்றோம்.

சைவ நிறுவனங்கள் ஒவ்வொன்றும் இந்த அறக்கருத்தை எடுத்துரைக்கவேண்டுமெனவும் வேண்டுகின்றோம்.

'அறிவினால் ஆகுவதுண்டோ பிறிதின் நோய்
தன்நோய் போல் போற்றாக்கடை'

என்ற வள்ளுவர் குறளை அறிவு புகட்டும் கல்விப் புலத்தார் மறக்க லாமா?

-என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சண்டிலிப்பாய் இந்து சிறந்த சுற்றாடலை உடைய பாடசாலையாகத் தெரிவு

யாழ்ப்பாணம், மார்ச்.31

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்பூட்டல் பிரிவினால் மாவட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட ஆரோக்கியமான சிறந்த சுற்றாடலைக் கொண்ட பாடசாலைகளைத் தெரிவு செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தில் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

''தூய்மையான சிறந்த சுற்றாடல்'' என்ற தொனிப்பொருளில் பாடசாலைகளுக்கிடையே நடைபெறும் இந்தப் போட்டியில் இதற்கு முன்னர் மேற்படி பாடசாலை இரண்டாம் இடத்தைப் பெற்றிருந்தது. இதற்கான பரிசில் வழங்கும் நிகழ்வு கடந்தவாரம் பத்தரமுல்லையில் உள்ள மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. (201)

## சமூகத்தில் அருகிவரும் இலக்கியப் பணிகள் பாடசாலை மட்டத்தில் முன்னெடுக்கப்படுகின்றன

### இணுவில் மத்திய கல்லூரி அதிபர் மகிழ்ச்சி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 31

சமூகத்தில் அருகிவரும் இலக்கியக் கழகங்களும் அதன் பணிகளும் பாடசாலை மட்டத்தில் முன்னெடுக்கப்படும் இலக்கிய நடவடிக்கைகளால் மீட்டெடுக்கப்பட்டு வருகிறது.

இதன்மூலம் மாணவர்களின் திறன்கள் வெளிக்கொணரப்படுவதுடன் இலக்கியங்களை நயக்கும் திறன்களையும் வளர்க்க முடிகிறது.

இவ்வாறு கூறினார் இணுவில் மத்திய கல்லூரி அதிபர் அ.சதானந்தன்.

யாழ்.மத்திய கல்லூரியால் நடத்தப்படும் பாடசாலைகளுக்கு இடையிலான விவாத அரங்கு அண்மையில் இணுவில் மத்திய கல்லூரி ஆரம்பப் பிரிவு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அதிபர் இவ்வாறு கூறினார்.

தொடர்ந்து உரையாற்றுகையில் அவர் தெரிவித்தவை வருமாறு:-

மனித வாழ்க்கைக்கு உதவுவது இராமாயணமா? மகாபாரதமா? என்னும் தலைப்பில் நடைபெற்ற விவாத அரங்கில் யாழ்.மத்திய கல்லூரி ஆண்கள் அணியினரும் இணுவில் மத்திய கல்லூரி பெண்கள் அணியினரும் பங்குபற்றி தமது இலக்கியப் புலமையையும் பேச்சாற்றலையும் வெளிப்படுத்தியுள்ளனர்.

இவ்வாறு ஒவ்வொரு பாடசாலை மாணவர்களும் தமது திறன்களை வெளிப்படுத்த முன்வர வேண்டும்.

இதற்கு ஒவ்வொரு பாடசாலைகளிலும் இலக்கிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

பாடசாலை மட்டத்தில் இடம்பெறும் பயிற்சிதான் ஏனைய இடங்களுக்கு எம்மை உயர்த்திச் செல்லும் என்றார். (203-201-45)

## கடைகளின் உரிமையாளரை தொடர்பு கொள்ளக் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 31

''நெக்டெப்'' நிறுவனத்தின் நிதியுதவியுடன் பருத்தித்துறை நகர மத்தியில் அமைக்கப்பட்டுவரும் நவீன சந்தையிலுள்ள கடைகளை வாடகைக்கு விடுவது தொடர்பாக தீர்மானம் எடுக்கப்பட உள்ளது.

எனவே 1983, 1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் பருத்தித்துறைப் பொதுச் சந்தையின் உடைந்த கடைகளின் வாடகையாளராக இருந்தவர்கள் தாம் நகர சபைக்கு ஒரேமுறையில் செலுத்திய பணவிவரம், மற்றும் ஒப்பந்தப் பத்திரம் ஆகியவற்றுடன் நகரசபைக் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளுமாறு பருத்தித்துறை நகரசபைச் செயலாளர் தெரிவித்துள்ளார். (201-218)

## மின்குமிழ் மாற்றிய வேளை மின்சாரம் தாக்கிக் காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 31

வீட்டில் மின்குமிழ் மாற்றியவேளை மின்சாரம் தாக்கியதில் காயமடைந்த யுவதியொருவர் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணியளவில் யாழ்ப்பாணம் அரசடி வீதியிலுள்ள வீடொன்றில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த க.தமிழினி(வயது 20) என்ற யுவதியே மின்சாரத்தினால் தாக்கப்பட்டவர் ஆவார். (203-78)

## பாம்புக் கடிக்குள்ளானவர் யாழ். ஆஸ்பத்திரியில்

வீதியில் சைக்கிளை உருட்டிக் கொண்டு சென்றவேளை ஒருவரை பாம்பு கடித்தது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணிக்கு வேலணை கிழக்கு நான்காம் வட்டாரத்தில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த எஸ்.தவநாயகம் (வயது 52) என்பவரையே பாம்பு கடித்தது.

இவர் வேலணை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அம்புலன்ஸ் மூலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (203-78)

## கிரிக்கெட் போட்டிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி நாளை

யாழ்.மக்கள் எழுச்சிப் பேரவையினால் யாழ்.மாவட்ட மட்டத்தில் நடத்தப்படவுள்ள ஆறுபேர் பங்கு பற்றும் ஐந்து ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய மென்பந்து கிரிக்கெட் போட்டிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி நாளை புதன்கிழமையாகும்.

போட்டிகளில் கலந்து கொள்ள விரும்பும் கழகங்களை பிரதேச செயலக, உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள விளையாட்டு அலுவலர்களுடனோ அல்லது யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு முன்னால் அமைந்துள்ள 'ரில்கோ' விடுதியில் தொடர்பு கொண்டு விண்ணப்பங்களை பெற்று விண்ணப்பிக்குமாறு ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (203-86)

## பருத்தித்துறை நகர சபையால் புதிய காணி கொள்வனவு

யாழ்ப்பாணம், மார்ச் 31

பருத்தித்துறை நகரசபைத் தேவைக்காக தும்பளை வீதியில் மகாலட்சுமி படமாளிகைக் கட்டடம் அமைந்துள்ள திருமதி காமாட்சி முத்துக்குமாரசாமிக்குச் சொந்தமான காணியைக் கொள்வனவு செய்யவுள்ளது.

மேற்படி காணி நகரசபைத் தேவைக்குக் கொள்வனவு செய்வது தொடர்பாக ஆலோசனை, அபிப்பிராயம், ஆட்சேபனை தெரிவிக்க விரும்புவோர் எழுத்து மூலம் தெரிவிக்க முடியும் என பருத்தித் துறை நகரசபைச் செயலாளர் தெரிவித்துள்ளார். (201-218)




## சிறுபோகத்திற்கான மரக்கறி விதைகளை பதப்படுத்தும் பணிகள் ஆரம்பமாகின

யாழ்ப்பாணம், மார்ச் 31

சிறுபோகத்திற்கு எதிர்வரும் காலங்களில் பயன்படுத்துவதற்கான மரக்கறி விதைகள் தற்போது பதப்படுத்தப்பட்டு வரும் பணிகள் இடம்பெற்று வருகின்றன என்று குடாநாட்டு மரக்கறி விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளர் த.சிவலோகநாதன் தெரிவித்தார்.

சங்கத்தினால் உற்பத்தி செய்யப்படும் உள்ளூர் மரக்கறி இனங்கள் தற்போது அறுவடை செய்யப்பட்டு விதைகளாக பதப்படுத்தப்பட்டு வருகின்றன.

குறிப்பாக பாவல், புடோல், தக்காளி போன்ற மரக்கறி இனங்களே விதைகளாக முதலில் விவசாய தேவைக்கு விநியோகிக்கப்படவுள்ளன.

கத்தரி, பயிற்றை, பூசணி போன்ற மரக்கறி விதைகள் எதிர்வரும் மே மாதமளவிலேயே அறுவடை செய்து பதப்படுத்தி விவசாய தேவைக்கு விநியோகிக்க கூடியதாக இருக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (203-224)

### உலக உணவுத் திட்டத்தின் கீழ்

# மார்ச்மாத நிவாரணவிநியோகம் இன்று ஆரம்பமாகி இடம்பெறும்

யாழ்ப்பாணம், மார்ச் 31

உலக உணவுத் திட்டத்தின் கீழ் மார்ச் மாதத்திற்கான நலிவுற்ற நிவாரணம் விநியோகிக்கும் பணிகள் இன்று தொடக்கம் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அசிரி தவிர கோதுமை மா, பருப்பு, சீனி, சமையல் எண்ணெய் போன்றவை இந்த நிவாரணத்திற்கு விநியோகிக்கப்படவுள்ளது.

இந்த நிவாரணம் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் விநியோகித்து முடிக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அங்கத்தவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப விநியோகிக்கப்படும் பொருள்களின் விவரம் வருமாறு:-

| பொருள் | அங்கத்தவர்களின் எண்ணிக்கை | | | | |
|---|---|---|---|---|---|
| | 1 அங் | 2 அங் | 3 அங் | 4 அங் | 5 அங் |
| மா | 11.200 | 22.400 | 33.600 | 44.800 | 56.000 |
| பருப்பு | 1.680 | 3.360 | 5.040 | 6.720 | 8.400 |
| சீனி | 0.560 | 1.120 | 1.680 | 2.240 | 2.800 |
| எண்ணெய் | 0.560 | 1.120 | 1.680 | 2.240 | 2.800 |




கொமர்ஷல் வங்கியின் ''அருணலு' சிறுவர் சேமிப்புத் திட்டத்தின் கீழ் 2008 ஆம் ஆண்டு 5 ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கு பரிசில் வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் சுன்னாகம் கிளையில் நடைபெற்றது.

கொமர்ஷல் வங்கியின் சுன்னாகம் கிளை முகாமையாளர் இ.குபேந்திரன், உதவி முகாமையாளர் க.விவேகானந்தராஜா, வங்கி அதிகாரி இ.கிரிதரன் ஆகியோர் மாணவர்களுக்குப் பணப் பரிசில்களை வழங்குவதை முதல் மூன்று படங்களில் காணலாம். வங்கி அதிகாரிகளும் பரிசில் வென்ற மாணவர்கள் நிற்பதை இறுதிப் படத்தில் காணலாம். (50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 01 * 07 * 1920



இறப்பு 13 * 04 * 2004

### அமரர் செல்லப்பா சுப்பிரமணியம் (முருகாமணியம்)

காலங்கள் கடந்தாலும்
காவியமாய் உறைந்து நிற்கும்
எம் அன்புத் தெய்வத்தின்
நினைவில் வாழுகின்றோம்.

மட்டுவில் கிழக்கு,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

(அ/557687)

# காஷ்மீர் பிரச்சினையில் அமெ. தலையிடாது பாதுகாப்பு ஆலோசகர் உறுதி தெரிவிப்பு

வாஷிங்டன், மார்ச் 31

''காஷ்மீர் பிரச்சினையில் அமெரிக்கா தலையிடாது'' என அமெரிக்க தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் ஜெனரல் ஜேம்ஸ் ஜோன்ஸ், வாஷிங்டனில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு நடைபெற்ற தெற்காசிய ஊடகவியலாளர் மாநாடொன்றில் தாம் பேசுகையில் தெரிவித்துக் கொண்டார்.

''காஷ்மீர் பிரச்சினை இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இருநாடுகளுக்குமிடையிலானது. இது விடயத்தில் அமெரிக்கா ஆக்கபூர்வமான இராஜரீகக் கொள்கைகளையே கடைபிடிக்கும். இதனை ஜனாதிபதி பராக் ஒபாமாவும் தெரிவித்துள்ளார். அதனால் காஷ்மீர் பிரச்சினையைத் தீர்க்க, நாங்கள் தலையிடுவோம் என பொருள் கொள்ளக்கூடாது'' என்றும் அவர் தெரிவித்துக் கொண்டார்.

''இந்தியாவும் பாகிஸ்தானும் அணுகுண்டுகளைத் தயாரித்து பாதுகாத்துவரும் நாடுகள். அவற்றுக்கிடையே சுமுக உறவு நிலவுவது அவசியம். இவ்விரு நாடுகளுக்கு மிடையே அவ்வப் போது மோதல்கள் தலைதூக்கி வருகின்றன. இது நல்லதல்ல'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

''இவ்விரு நாடுகளையும் அமெரிக்கா நட்பு நாடுகளாகவே கருதுகிறது. அதே வேளை, இருநாடுகளுக்குமிடையிலான பிரச்சினையில் தலையிட அமெரிக்கா விரும்பவில்லை'' என்றும் அவர் கூறினார். அத்துடன் நிருபர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு அவர் பதில்களும் விளக்கங்களும் அளித்தார்.

''ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் கை ஓங்கி வருகிறது. பாகிஸ்தானின் வட மேற்கு பகுதியில் அல்-குவைதா தீவிரவாதிகளின் செல்வாக்கு அதிகரித்துள்ளது. இவை கவலை அளிப்பவை. இவற்றால் இவ்விரு நாடுகளுக்கு மட்டுமின்றி, இந்தியா உட்பட ஏராளமான நாடுகளுக்கும் ஆபத்து உண்டு'' என்றும் ஜேம்ஸ் ஜோன்ஸ் சுட்டிக் காட்டினார்.

''எனவேதான் ஆப்கானிஸ்தானிலும், பாகிஸ்தானிலும் பயங்கரவாதிகளின் ஆதிக்கத்தை ஒடுக்கும் நடவடிக்கைக்கு அமெரிக்கா முன்னுரிமை கொடுக்கின்றது. இதன் பொருட்டே அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு, அமெரிக்கா பாகிஸ்தானுக்கு அதிகளவில் இராணுவ ரீதியிலான உதவிகளை வழங்க முடிவு செய்துள்ளது'' என்றும் அவர் தெரிவித்தார்.

''இந்த விடயம் குறித்து இந்திய அரசுடனும் நாம் மிக விரிவாக விவாதித்துள்ளோம். இதனால் இந்தியா அச்சம் கொள்ளத் தேவையில்லை. பாகிஸ்தானும் இந்தியாவும் பரஸ்பர நம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டும். தொழில் துறைகள், வர்த்தகங்கள் ஆகியவற்றிலும் இவ்விரு நாடுகளும் பரஸ்பர உறவுகளை மென்மேலும் விருத்தி செய்து கொள்ள வேண்டும்'' என்றும் அவர் கேட்டுள்ளார்.

''பரஸ்பர நல்லுறவுகளால், இரு நாடுகளுக்குமிடையிலான பதற்றம் தணியும். பாகிஸ்தானாலும் கலவரங்கள் மிகுந்த அதன் மேற்கு எல்லைப் பிராந்தியங்கள் மீதும் கூடிய கவனம் செலுத்த முடியும். அப்படியானால், ஏககாலத்தில் அதனால் சுலபமாக தலிபான்களையும், அல்-குவைதா தீவிரவாதிகளையும் ஒடுக்கி விட இயலும். இல்லையேல், இரு நாடுகளிலும் கடுமையான பாதுகாப்புப் பிரச்சினைகள் தலைதூக்கி விடும்'' என்றும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 10 * 04 * 1910



மறைவு 11 * 04 * 2008

### திருமதி தில்லையம்பலம் திலகவதி (மாரிமுத்து)

திதி: சஷ்டி (01.04.2009)

குடும்பத்தின் ஒளி விளக்காய் திகழ்ந்து
பாசத்தின் உறைவிடமாய்
எம்மை யெல்லாம் வழிநடத்திய
எங்கள் அன்புத் தெய்வமே!
ஓராண்டு சென்றாலும் உங்கள்
நினைவுகள் எம் நெஞ்சில் என்றென்றும்
நீங்காது நிலைத்திருக்கும்...

நாளை (01.04.2009) புதன்கிழமை தீருவில் இல்லத்தில் நடைபெறும் எமது அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

தீருவில் ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.
077 4715767

மகன் - தி.நவரெத்தினம் (மெம்பர்),
மற்றும் மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(83951)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 24 * 02 * 1931



மறைவு 27 * 02 * 2009

### அமரர் கணபதிப்பிள்ளை கோபாலசாமி

(ஓய்வுபெற்ற தபாலதிபர்)

ஞானசம்பந்தர் கலைமன்றத்தின் உபதலைவராகவும் நிர்வாக உறுப்பினராகவும் கடமையாற்றியதுடன் அவரது குடும்பமே மன்றத்தின் கலைகலாசார வளர்ச்சிக்காக அயராது பாடுபட்டவர்கள். இப்பெரியாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல முதல்வி அம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.

புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.

நிர்வாக உறுப்பினர்கள்,
ஞானசம்பந்தர் கலைமன்றம்.

(அ/557642)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 19 * 06 * 1922



உதிர்வு 10 * 04 * 2008

### திருமதி நடராசா யோகம்மா

திதி: பஞ்சமி

அன்பால் எம்மைக் காத்து ஆசையாய் வளர்த்தெடுத்து
அவனியில் தரமுயர வழிகள் செய்து
ஆளாக்கி அரவணைத்த எம் தெய்வமே!
ஆயிரம் உறவுகள் இருந்துமென்ன?
அவை அனைத்தும் உங்கள் அன்புக்கு ஈடாகுமோ
நெஞ்சில் எழுதி வைத்த உங்கள் நினைவுகள்
என்றும் உயிரோடு வாழும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

இல.9, 2ஆம் ஒழுங்கை,
பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

(83958)

குடும்பத்தினர்.

## விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 21 * 06 * 1938



இறப்பு 31 * 03 * 2008

### அமரர் சு.யோ.பூராசா

(ஓய்வுபெற்ற அதிபர் தரம் I, புங்குடுதீவு - நயினாதீவு ப.நோ.கூ.சங்க முன்னாள் தலைவர், அகில இலங்கை சமாதான நீதிவான், பெருங்காடு கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர், புங்குடுதீவு புனித அந்தோனியார் ஆலயச் செயலாளர், தேய்வக் குழந்தைகள் இல்ல இயக்குநர், சமூக சேவையாளர், இறை தொண்டன்)

விண்ணுலகில் இறையடியில் வாழ்பவரே
உம்மை நாம் துதிக்கின்றோம் - ஐயா
தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்தவரே
உம்மை நாம் போற்றுகின்றோம் - ஐயா
தரணிதனில் நீர் செய்த நற்சேவைகள்
சொல்லில் அடங்காதன - ஐயா
கறைபடியாத உமது கரங்கள்
எமது வாழ்வின் வழிகாட்டி - ஐயா

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக இன்று (31.03.2009) செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்குப் புங்குடுதீவு புனித அந்தோனியார் ஆலயத்தில் அருட்தந்தை J.E.ஜெயசீலன் அடிகளார் தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

அதனைத் தொடர்ந்து தெய்வக் குழந்தைகள் இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் இரங்கல் நினைவுப் பேருரை நிகழ்விலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

2ஆம் வட்டாரம், புங்குடுதீவு.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வசந்த எழுச்சிப் பேரவையின் உதைபந்தாட்டம்

# வலிகாமம் லீக் இறுதியாட்டத்தில் இளவாலை யங்ஹென்றீசியன் சம்பியன்

வலி.வடக்கு,மார்ச்31

யாழ்.மக்கள் வசந்த எழுச்சிப் பேரவை ஏற்பாட்டில் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் நடத்திய விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியில் இளவாலை யங்ஹென்றீசியன் விளையாட்டு கழகம் சம்பியனாகியது.

மல்லாகம் ஸ்ரீபாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் ஏழாலை மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகமும் இளவாலை யங்ஹென்றீசியன் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பமாகிச் சில நிமிடத்தில் யங்கென்றீசியன் விளையாட்டுக் கழகத்திற்கு கோல் பெறும் சந்தர்ப்பம் ஒன்று கிடைத்தபோதிலும் அதனை அந்த அணி தவறவிட்டது.

அடுத்துக் கிடைத்த சந்தர்ப்பத்தை உரிய முறையில் பயன்படுத்தி ஒரு கோலைப் பெற்றுக்கொண்ட யங்கென்றீசியன் விளையாட்டுக் கழகம் மேலும் கோல்கள் பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டது. ஞானமுருகன் விளையாட்டுக் கழகத்துக்குத் தண்டனை உதையொன்று கிடைத்தபோதிலும் அதனை கோலாக மாற்றத் தவறிய அந்த அணி பின்னர் கிடைத்த நான்கு, ஐந்து சந்தர்ப்பங்களையும் தவறவிட்ட நிலையில் முதல்பாதி ஆட்டம் முடிவடைந்தது.

இரண்டாம்பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோல்கள் பெறுவதற்காகக் கடும் முயற்சிகளை மேற்கொண்டபோதிலும் இரு அணிகளுக்கும் அந்த வாய்ப்புகள் கிடைக்காத நிலையில் இரண்டாம்பாதி ஆட்டமும் நிறைவுபெற்றது.

இளவாலை யங்கென்றீசியன் விளையாட்டுக் கழகம் 1:0 என்ற கோல் கணக்கில் ஞானமுருகன் விளையாட்டுக் கழகத்தை வெற்றி பெற்று வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் சம்பியனாகியது. (50-86)



வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற 15 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் வெற்றிபெற்ற அளவெட்டி அருணாசலம் வித்தியாலய அணியினர், வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், உடற்கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர் மு. நடராசா மற்றும் அதிபர், ஆசிரியர்களுடன் நிற்பதைப் படத்தில் காணலாம். (படம்: நேசன்)

## காரைநகர் தியாகராஜா ம.ம.வி. வெற்றி

ஆனைக்கோட்டை,மார்ச்31

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகா வித்தியாலயம் வலய மட்டத்தில் வலைப்பந்தாட்டம், சதுரங்கப் போட்டிகளில் சம்பியனாகியது.

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகாவித்தியாலயம் கரப்பந்தாட்டத்தில் 19 வயது பெண்கள் பிரிவில் முதலாம் இடத்தையும் சதுரங்கப் போட்டிகளில் 15 வயது ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவுகள் இரண்டிலும் முதலாம் இடங்களையும் பெற்றுக்கொண்டது.

அத்துடன் சதுரங்கப் போட்டியில் 19 வயது ஆண்கள் பிரிவில் 2ஆம் இடத்தையும் வலய மட்டக் கிரிக்கெட் போட்டியில் 3ஆம் இடத்தையும் பெற்றுக்கொண்டது.

ஏற்கனவே கோட்ட மட்டப் போட்டிகளில் கரப்பந்தாட்டத்தில் 19 வயதுப் பெண்கள் பிரிவு முதலாம் இடத்தையும், 15 வயது பெண்கள் பிரிவு இரண்டாம் இடத்தையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (50-20)

# மஞ்சி நிறுவனத்தின் கரப்பந்தாட்டம்; சம்பியன் வென்றது ஆவரங்கால் இந்து

வலி.வடக்கு,மார்ச்31

'மஞ்சி' நிறுவனத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்டக் கரப்பந்தாட்டச் சங்கம் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்திய ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது.

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப்போட்டியில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் அச்சுவேலி ஆவரங்கால் இந்து விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டன.

இரு அணிகளும் வெற்றி பெறுவதற்காக மிகவும் கடுமையாக மோதிக்கொண்டமை ஆதரவாளர்களுக்கும் ரசிகர்களுக்கும் மிகவும் உற்சாகமாக அமைந்தது.

ஐந்து சுற்றுக்கள் கொண்ட இந்தப் போட்டியில் முதல் சுற்றைக் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் 25:20 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்றது.

தொடர்ந்து வந்த 2ஆம், 3ஆம், 4ஆம் சுற்றுக்களை ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் 25:20, 25:23, 25:19 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று 'மஞ்சி' சுற்றுப்போட்டியில் யாழ். மாவட்டச் சம்பியனாகியது.

போட்டியில் வெற்றி பெற்ற அணி கொழும்பில் நடைபெறவுள்ள தேசிய மட்டத்திலான போட்டிகளில் கலந்துகொள்வதற்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. (50-86)

# பெண்களுக்கான எல்லே போட்டியில் வலயச் சம்பியனாகியது அருணோதயா

வலி.வடக்கு,மார்ச்31

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான எல்லே போட்டியில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி வலயச் சம்பியனாகியது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியும் மல்லாகம் குளமங்கால் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையும் மோதிக்கொண்டன.

முதலில் விளையாடிய அருணோதயாக் கல்லூரி வீராங்கனைகள் அனைவரும் ஆட்டமிழந்து 2 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர்.

3 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் பதிலுக்கு விளையாடக் களமிறங்கிய குளமங்கால் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை வீராங்கனைகள் ஓட்டம் பெறமுயற்சித்தபோதிலும் அதனை முறியடிக்கும் முயற்சியில் அருணோதயாக் கல்லூரி வீராங்கனைகள் ஈடுபட்டனர். இதனால் ஓட்டம் எதனையும் பெறாத நிலையில் குளமங்கால் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை வீராங்கனைகள் அனைவரும் ஆட்டமிழந்தனர்.

ஆட்டநிறைவில் அருணோதயாக் கல்லூரி 3:0 என்ற ஓட்டங்களினால் வெற்றி பெற்று வலிகாமம் கல்வி வலயச் சம்பியனாகியது.

மூன்றாம் இடத்திற்கான போட்டியில் பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலையும் மானிப்பாய் மகளிர் கல்லூரியும் மோதிக் கொண்டன.

ஆட்டநிறைவில் மானிப்பாய் மகளிர் கல்லூரி 2:0 என்ற ஓட்டங்களில் பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலையை வெற்றி பெற்று மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. (50-86)




கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான துடுப்பாட்டப் போட்டியில் சம்பியன் பட்டத்தைப் பெற்ற அல்வாய் மனோகரா விளையாட்டு அணியினர், விளையாட்டுக் கழகத் தலைவர், பயிற்சியாளர்களுடன் நிற்பதைப் படத்தில் காணலாம். (படம்: சுந்தர)

# வலிகாமம் வலயக் கரப்பந்தாட்டம்; இளவாலை மெய்கண்டான் சம்பியன்

வலி.வடக்கு,மார்ச்31

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற 17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் இளவாலை மெய்கண்டான் வித்தியாலயம் சம்பியனாகியது.

இணுவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப்போட்டியில் அளவெட்டி அருணாசலம் வித்தியாலயமும் இளவாலை மெய்கண்டான் வித்தியாலயமும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை இரு அணிகளும் கடுமையாக மோதிக் கொண்டன. மூன்று சுற்றுக்கள் கொண்ட இப் போட்டியில் முதல் சுற்றை அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம் 25:18 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்றது.



2ஆம், 3ஆம் சுற்றுக்களை முறையே இளவாலை மெய்கண்டான் வித்தியாலயம் 25:19, 25:16 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று வலிகாமம் கல்வி வலயச் சம்பியனாகியது.

மூன்றாம் இடத்துக்கான போட்டியில் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயமும் மானிப்பாய் இந்துக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதல்சுற்றை ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயம் 25:23 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்றபோதிலும் தொடர்ந்து 2ஆம், 3ஆம் சுற்றுக்களை மானிப்பாய் இந்துக் கல்லூரி 25:10, 25:15 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. (50-86)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

# பெண்களுக்கான கரப்பந்தாட்டத்தில் கே.கே.எஸ். ஐக்கியம் வெற்றி

வலி.வடக்கு,மார்ச்31

'மஞ்சி' நிறுவனத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தினால் நடத்தப்பட்ட பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது.

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகமும் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

ஐந்து சுற்றுக்கள் கொண்ட இந்தப் போட்டியில் முதல் மூன்று சுற்றுக்களை ஐக்கிய விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று யாழ்.மாவட்ட சம்பியனாகியது.

காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் முதல் மூன்று நேர்சுற்றுக்களையும் முறையே 25:17, 25:16, 25:20 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்றது.

இறுதிப்போட்டியில் வெற்றி பெற்றுச் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்ட அணி தேசிய மட்டத்தில் நடைபெறவுள்ள போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். (50-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகள் நடத்தியுள்ள ஏவுகணைத் தாக்குதல்: ஆய்வாளர் மத்தியில் அதிர்ச்சி கலந்த ஆச்சரியம்

மிக விரைவில் தரைநிலைகளை தமிழீழ விடுதலைப் புலிகள் முற்றாக இழந்துவிடும் நிலை ஏற்பட்டிருந்தாலும் குழப்பங்களை ஏற்படுத்தக்கூடியதான சர்வதேச வலைப்பின்னல் ஒன்றை அவர்கள் கொண்டிருப்பதானது அரசின் உயர்மட்ட நிலைகளில் கவலையை ஏற்படுத்தத்தான் செய்கின்றது. இராணுவ உயர்மட்ட நிலைகளிலும்கூட இந்த அம்சம் உறுதிசெய்யப்பட்டுள்ளது. புலிகள் தற்போது தம்வசம் வைத்துள்ள நிலப்பகுதிகள் யாவற்றையும் இழக்க நேர்ந்தாலும் மேற்கண்ட அச்சுறுத்தும் அம்சமானது பல நிலைகளில் வெளிப்படமுடியும் என்று அவர்கள் கருதுகிறார்கள்.

இந்த நிலைமையயை உறுதிசெய்யக்கூடிய ஒரு சம்பவம் கடந்த வாரத்தில் இடம்பெற்றிருந்தது. புதுக்குடியிருப்புப் பகுதியில் படையினர் புலிகளுடன் கடும் மோதல் ஒன்றில் ஈடுபட்டிருந்தார்கள். காயமடைந்தவர்களை மீட்பதற்காக விரைந்து சென்ற உலங்கு வானூர்திகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. உடனடியாக வான்படை தற்காப்புப் பொறிமுறை செயற்படுத்தப்பட்டதால் நிலைமை சமாளிக்கப்பட்டது. புலிகள் தரையில் இருந்து வான் நிலைகளைத் தாக்கும் (சாம்) ஏவுகணைகளைப் பயன்படுத்தியிருந்தார்கள் என்பது மிக விரைவிலேயே தெரியவந்தது. இதன் சரியான விவரம் இன்னும் தெரியவரவில்லை.

இந்தச் செய்தியானது கொழும்பிலுள்ள புலனாய்வுத் துறையினரை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

2007ஆம் ஆண்டிலிருந்து புலிகளுக்கு எதிராக தாக்குதல் நடத்திவரும் ராஜபக்ஷ நிர்வாகத்தின் விமானப்படைகளுக்கு எதிராக ஏவுகணைகள் வீசப்பட்டதான தகவல் எதுவும் இதுவரைக்கும் கிடைத்ததில்லை. ஏவுகணைகள் எதுவும் புலிகளிடம் இல்லை என்ற அபிப்பிராயத்தை இது ஏற்படுத்தியிருந்தது. கடந்த பல மாதங்களாக புலிகளின் நிலைகள் மீது விமானத்தாக்குதல்கள் கடுமையாக நடத்தப்பட்டு வந்தபோதிலும் 23மில்லிமீற்றர் அல்லது 50மில்லிமீற்றர் யந்திரத் துப் பாக்கிகள், றைபிள்கள் போன்றவற்றால் மட்டுமே திருப்பித் தாக்கிவந்துள்ளார்கள். அதேசமயம் கிழக்கு ஐரோப்பா மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளிலிருந்து கறுப்புச் சந்தையில் சாம் ஏவுகணைகளை வாங்கிக்கொள்ள அவர்கள் எடுத்த முயற்சிகள் தோல்வி கண்டுவிட்டதாகவும் செய்தி கிடைத்திருந்தன.

இந்த நிலைமையில் உலங்கு விமானங்கள் மீது இப்பொழுது 'சாம்' ஏவுகணைகள் பாவிக்கப்பட்டிருப்பதானது சமீப காலத்தில் அவை நாட்டுக்குள் கடத்திவரப்பட்டிருக்கலாம் என்ற எண்ணத்தைத் தோற்றுவித்துள்ளது. ஏனென்றால் அவர்களிடம் இவை இருந்திருந்தால் பாவிக்காமல் இருந்திருக்கமாட்டார்கள் என்ற கருத்து நிலவுகின்றது.

புல்னாய்வாளர்களில் ஒரு பிரிவினர் முன்வைக்கும் இன்னொருவாதம் என்னவென்றால் புலிகளிடம் அவை இருந்தபோதிலும் அவைகளைப் பாவிக்கவேண்டிய அவசர நிலைமை வரும்வரை காத்திருந்துள்ளார்கள் என்பதாகும். இதுவும் இது போன்ற வேறு பல விடயங்கள் தொடர்பாகவும் விடைகளைத் தெரிந்துகொள்வதற்குப் புலனாய்வாளர்கள் முயன்று வருகிறார்கள்.

இந்தவகையில் புலிகளின் ஆயுதக் கொள்வனவாளர் குமரன் பத்மநாதன் மீது எல்லோர் கவனமும் திரும்பியுள்ளது. அண்மையில் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் அவரை தமது அமைப்பின் இராஜதந்திரத் தொடர்பாளராக நியமித்திருந்தார். இந்த நியமனம் புலிகளின் வெளிநாட்டுச் சொத்துக்களைக் கவனிப்பதற்கான ஒரு நியமனம் என்று கருதப்பட்டது.

## இவ்வளவும் நடந்த பிறகு இப்பொழுது எங்கிருந்து வந்தது

கடந்த ஆண்டு பத்மநாதன் தாய்லாந்தில் கைதுசெய்யப்பட்டுவிட்டார் என்று பெரிதாகச் செய்தி வெளியிடப்பட்டது. அவர் கொழும்புக்கு அனுப்பப்படவிருக்கிறார் என்று இங்குள்ள அதிகாரிகள் தெரிவித்திருந்தார்கள். பின்னர் தாய்லாந்து அதிகாரிகள் அப்படியான ஒருவர் கைதுசெய்யப்படவே இல்லை என்று அறிவித்தார்கள். இந்தப் பின்னணியில்தான் கடந்த வாரம் வெளிநாட்டமைச்சர் ரோகித்த போகொல்லாகம தாய்லாந்துக்கு விஜயம் செய்திருந்தார். புலிகள் விடயத்தில் கவனம் தேவையென தாய்லாந்து அரசுக்கு ஆலோசனை கூறியதாக அவர் பின்னர் கூறியிருந்தார்.

போர் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கும் நிலையில் பிரபாகரனின் மகன் சார்ள்ஸ் அன்ரனி ஆட்லறி தாக்குதலில் சிறுகாயங்களுக்குள்ளாகியதாக லண்டனில் செய்தி பரவியிருந்தது. இதற்கு முன்னர் பிரபாகரனும் அவரது மகன் சார்ள்ஸ் அன்ரனியும் மக்கள் பாதுகாப்பு வலயப் பகுதியில் இடம்பெயர்ந்த மக்கள் மத்தியில் கலந்துறவாடிப் பழகுவது அவதானிக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்திருந்தனர். பலத்த காயங்களுக்குள்ளான இன்னொரு புலிகளின் முக்கிய புள்ளி பாலகுமாரன் ஆவார். ஈரோஸ் அமைப்பின் முன்னாள் தலைவர்களில் ஒருவர்.

போர் வலயப்பகுதியில் இடம்பெயர்ந்து வாழும் மக்களின் துர்ப்பாக்கிய நிலைமைதான் இப்போது உலகம் முழுவதிலும் கவலையைத் தோற்றுவித்துள்ளது.

கடந்தவாரம் அமெரிக்க செனட்டின் வெளியுறவுக் குழுவின் தலைவர் ஜோன் கெரி இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஒரு கடிதம் அனுப்பியிருந்தார். நாட்டில் மனித உரிமை நிலைமை மோசமடைந்திருப்பது குறித்து அவர் கவலை தெரிவித்திருந்தார். அப்பகுதியில் நிவாரண உதவிகளில் ஈடுபடும் மனிதநேயக் குழுவினரை அங்கு முழுமையாக தடைவிதித்திருப்பதையும் அவர் குறை கூறியிருந்தார்.

மிருகத்தனமான ஒரு நடவடிக்கையின் காரணமாக எழுந்துள்ள நிலைமைகளிலிருந்து தமது பிரஜைகளைக் காப்பாற்ற இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்காமலிருப்பதைக் கண்டு நான் குழப்பமடைந்திருக்கிறேன். போர் நிறுத்தப் பகுதிகளில் பொதுமக்கள் கொல்லப்படுவதும் காயமடைவதும் அதிகரித்து வருகின்றது. இதற்கு இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் பொறுப்பாளிகளாகிறார்கள் - என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.

**கடந்த 29ஆம் திகதி சண்டே ரைம்ஸ் எழுதிய அரசியல் ஆய்விலிருந்து ஒரு பகுதி இது**

பத்திரிகையாளர்கள் காப்பாற்றப்படவேண்டியதையும் அவர் வலியுறுத்தியிருந்தார். அரசியல் தீர்வொன்று இன்னமும் ஆலோசனையில் இருக்கிறது என்பதை மேலும் வெளிப்படுத்துவதற்காக ஜனாதிபதி ராஜபக்ஷ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்றைப் பேச்சுக்கு வருமாறு கடந்த வாரம் அழைத்திருந்தார். ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அழைப்பை நிராகரித்துவிட்டனர். போர் நிறுத்தம் ஒன்று ஏற்பட்டுப் பொதுமக்கள் பிரச்சினை தீர்க்கப்படாதவரை அவ்வாறான பேச்சுக்களில் பயனேதும் இல்லை என்று அவர்கள் தெரிவித்து விட்டனர். (ப)



நாயன்மார்கட்டு அரசடி விநாயகர் ஆலய திருவிழாவின்போது வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள உறவுகளுக்கு உதவும் பொருட்டு வைக்கப்பட்டிருந்த உண்டியலில் சிறுமி ஒருவரும் தாய் ஒருவரும் தமது உதவி நிதியைப் போடுவதை முதலிரு படங்களிலும், யாழ்.மாநகரசபை ஆணையாளர் மு.செ.சரவணபவ மக்களின் சார்பில் ஆலயத்தினால் வழங்கப்பட்ட நிதியை நல்லை ஆதின முதல்வரிடம் கையளிப்பதை அடுத்துள்ள படத்திலும் காணலாம். *(படங்கள்: லக்ஸ்மன்)*

# அரசியல், இராணுவ, பொருளாதாரத் துறைகளில் இந்தியா இப்போது சிறப்பான நிலையில்

## சீன இராணுவத்துக்கு கவலை என்கிறது பென்டகன்

வாஷிங்ரன், மார்ச் 31

இந்தியா பொருளாதாரம், அரசியல், இராணுவம் ஆகியவற்றில் மாபெரும் சக்தியாக வளர்ந்து வருவது குறித்து, சீன இராணுவம் கவலை தெரிவித்துள்ளது என அமெரிக்க பாதுகாப்புத் தலைமையகமான பென்டகன் தெரிவித்துள்ளது.

இந்திய-சீன உறவுகள் குறித்தும், ரஷ்ய-மத்திய ஆசிய குடியரசுகள் குறித்தும் பென்டகன் வெளியிட்டுள்ள 78 பக்க அறிக்கையில் இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது. அதில் குறிப்பாக இந்திய-சீன எல்லைப் பிரச்சனைகள் குறித்தும், இரு நாடுகளிடையே நடைபெற்ற உயர்நிலை வர்த்தக ஒப்பந்த பேச்சுகள், கூட்டு இராணுவ நடவடிக்கைகள் ஆகியவை குறித்தும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இரு நாடுகளும் 2007 இல் நடைபெற்ற பேச்சுகளின்போது, 11.4 பில்லியன் டொலர்களாக இருந்த வர்த்தகத்தை 2010 ஆம் ஆண்டுக்குள் 40 பில்லியன் டொலர்களாக மேம்படுத்துவது என ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளன.

இருநாடுகளும் எல்லைப் பிரச்சினை தொடர்பாக பல்வேறு சுற்றுப் பேச்சுகளை நடத்தியுள்ளன. இருதரப்பு இராணுவ உறவுகள், பாது காப்பு மேம்பாடு ஆகியவை குறித்து உயர்நிலை அதிகாரிகள் அளவில் மூன்று சுற்றுப் பேச்சுகள் நடத்தப்பட்டுள்ளன. இருப்பினும், பிராந்திய அளவிலும் சர்வதேச அளவிலும் இந்தியாவின் சீரிய வளர்ச்சி குறித்தும், இராணுவ வல்லமை பெற்ற நாடாக இந்தியா வளர்ந்து வருவது குறித்தும் சீன இராணுவம் கவலையடைந்துள்ளது என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(சி)

நினைவஞ்சலி

மலர்வு 15 * 10 * 1931 உதிர்வு 18 * 01 * 2000 — 9ஆம் ஆண்டு

2ஆம் ஆண்டு — மலர்வு 27 * 06 * 1939 உதிர்வு 23 * 03 * 2007





சிவக்கொழுந்து சுந்தரலிங்கம் ♦ சுந்தரலிங்கம் பொன்னம்மா

எமது வாழ்விற்கு நல்வழி காட்டிய எங்கள் அன்புத் [illegible] ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கின்றோம்.

இணுவில். (சி/557667) குடும்பத்தினர்.

விற்பனைக்கு

கோப்பாய் கல்வியற் கல்லூரிக்கு அருகாமையில் நல்ல சூழலில் கிணற்றுடன் கூடிய, வீடு கட்ட உகந்த 12½ பரப்புக் காணி உடன் விற்பனைக்கு.

தொடர்பு: 077 6653875, 021 222 5575 (83889)

மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 8இல் செவ்வாயுடைய, 50கிரக பாவமும் சதய நட்சத்திரமும் கொண்ட, 29 வயதுடைய அரச பதவி வகிக்கும் மணமகனுக்கு அழகிய அரச பணியில் உள்ள மணமகளை [illegible]ன்றனர்.


தொடர்பு: T.P.No.077 9847813 (5 pm - 8 pm மணிவரை தொடர்பு கொள்ளவும்) (83987)

Personal Class

தரம் 1 - 12 வரையான மாணவர்களுக்கு English Personal Class உடன் Spoken with Grammar கற்க விரும்பும் அனைவருக்கும் இலகுமுறையில் குழுவாகவும் தனியாகவும் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும். (மேலதிக விவரங்களுக்கு ஆசிரியரை தொடர்புகொள்ளவும்) தொடர்புக்கு: ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. தொ.பே.077 8716113

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஒற்றை ஆட்சியில் கிடைக்கும் அதிகாரப் பரவல் நிரந்தரமான ஒன்றல்ல பதவிக்கு வரும் அரசாங்கங்கள் அதை மாற்றிவிடலாம்



இதனாலேயே 1952ஆம் ஆண்டில் தமிழ் மக்கள் அவரைத் தள்ளிவிட்ட போதும் அவர் சோர்ந்து போய் விடவில்லை. 1956ஆம்

**தந்தை செல்வாவின் 111ஆவது பிறந்தநினம் இன்றாகும். அதையொட்டி கொழும்பு இலங்கை சர்வகலாசாலை தமிழ்ச் சங்கத்தில் "சிறுபான்மை யோர் பிரச்சினை" என்ற தலைப்பில் 1960 ஜனவரியில் எஸ்.ஜே.வி. ஆற்றிய சொற்பொழிவிலிருந்து ஒரு பகுதி இங்கு பிரசுரமாகிறது.**

### வாழ்வா? சாவா?

இன்று தமிழ் பேசும் இனம் ஒரு முக்கியமான கட்டத்தை அடைந்திருக்கிறது. தமிழ் பேசும் இனம் இந்த நாட்டில் வாழப் போகிறதா? இறந்தொழியப் போகிறதா? இதற்கு அவசியம் விடைகாணவேண்டியிருக்கிறது. இனம் வாழவேண்டும். அதற்குப் பின்புதான் மற்ற எல்லாம்! தமிழ் பேசும் இனத்துக்கு வாழ்வு தேடுவதுதான் அந்த இனத்தின் நலனில் அக்கறையுடைய எந்தக் கட்சியினதும் முதற்கடமை. அந்தக் கடமையை இலங்கைத் தமிழரசுக் கட்சி ஏற்றிருக்கிறது. கடந்த 12 ஆண்டு காலமாக, கண்ணுங் கருத்துமாக அந்தக் கடமையைச் செய்து வருகிறது.

### தாயகம் வேண்டும்!

ஓர் இனம் வாழ, அதற்குத் தனது என்று ஒரு பிரதேசம் வேண்டும். தன்னுடைய தனித்தன்மையோடு நாட்டின் தேசிய இனமாகத் தலையெடுத்திருப்பதற்குப் பிரதேசம் அல்லது தாயகம் இல்லாமல் முடியாது. உறைவிடம் அவசியம் வேண்டும். உறைவிடம் இல்லாத நாடோடி இனம் நல்லபடியாக வாழமுடியாது. தமிழ் பேசும் இனத்தைப் பொறுத்தமட்டில் அதற்குத் தாயகம் உண்டு. வடகிழக்கு மாகாணங்கள் பரம்பரையாகவே தமிழ் பிரதேசங்கள்.

### சிங்களக் குடியேற்றம்: ஆபத்து!

தமிழ் பிரதேசங்கள் பறிபோகாமல் பாதுகாப்பதிலேயே தமிழ் இனத்தின் வாழ்வு தங்கியிருக்கிறது. 1958ஆம் ஆண்டுக் கலவரம் இதை ஓரளவுக்கு எடுத்துக் காட்டிவிட்டது. வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழ் பேசும் மக்களுடையனவாக இருந்தபடியால்தான் தமிழ் பேசும் மக்கள் அங்கு சென்று தப்பமுடிந்தது. இப்படியான அனுகூலம் தமிழ் பேசும் மக்களுக்கு இருப்பதை விரும்பாத அரசாங்கம், தமிழ்ப் பிரதேசங்களில் குடியேற்றத் திட்டம் என்ற போர்வையில் சிங்களவர்களைக் குடியேற்றி வருகிறது. அதன்மூலம் தமிழ்ப் பிரதேசங்களைச் சிங்களப் பிரதேசங்களாக்க விழைகிறது. தமிழ் பேசும் மக்களை அவர்கள் தம் சொந்தப் பிரதேசத்திலேயே சிறுபான்மையினராக்க முனைகிறது. இதுதான் எல்லாவற்றிலும் பெரிய ஆபத்து. இதைத் தடுத்து நிறுத்தத் தமிழரசுக் கட்சி நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. இதில் ஓரளவு வெற்றியும் கண்டிருக்கிறது.

### உடன்படிக்கை கிழித்தெறியப்படாதிருந்தால்...

காலஞ்சென்ற பண்டாரநாயகாவுக்கும் தமிழரசுக் கட்சிக்குமிடையே செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையில் குடியேற்றம் முக்கியமான அம்சமாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. தமிழ் பிரதேசங்களுக்குப் பிரதேச சபைகள் ஏற்படுத்துவது என்றும், தமிழ்ப் பிரதேசத்தில் குடியேற்றம், நீர்ப்பாசனம் சம்பந்தமான விவகாரங்களில் பிரதேச சபைகளுக்கு முக்கிய அதிகாரங்கள் அளிப்பது என்றும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அந்த உடன்பாட்டின்படி காரியம் நடந்திருக்குமானால் தமிழ் பேசும் மக்கள் சற்று ஆறுதல் அடைந்திருக்கலாம்.

### சமஷ்டி அமைப்பே பரிகாரம்!

நமது பிரதேசம் நமதாகி, அதில் நாம் நமது விஷயங்களைப் பிறர் தலையீடு இன்றிப் பிரதேச சபை மூலம் கவனித்துக் கொள்வதானாலும் அந்த ஏற்பாடு சமஷ்டி அரசமைப்பின் கீழ் உள்ளதாக இருக்கவேண்டும். ஒற்றையாட்சியில் கிடைக்கும் விடுதலையோ, அதிகாரப் பரவலோ நிரந்தரமானதல்ல. ஒற்றையாட்சியில் இன்றைய நிலைமையை நாளை பதவிக்கு வரும் இன்னொரு அரசாங்கம் மாற்றிவிடலாம். சில வேளைகளில் முதலில் இணங்கிய அதே அரசாங்கமே பிணக்குற்றுத் தன் முடிவை பின்னர் மாற்றியமைத்துக் கொள்ளலாம். சமஷ்டி அரசமைப்பில் அது முடியாது. அதனால்தான் இந்த நாட்டில் சமஷ்டி அரசமைப்பு வேண்டும் என்றும் அந்த அமைப்பின்கீழ் தமிழ் பேசும் மக்கள் தம்மைத் தாமே ஆளும் உரிமை பெறவேண்டும் என்றும் தமிழரசுக் கட்சி வற்புறுத்தி வருகிறது.

### இவர்களுக்கு இப்போ புரிகிறது!

சமஷ்டி ஆட்சி முறை பற்றி நான் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முதல் பேசத் தொடங்கியபொழுது பலரும் அதைப் பொருட்படுத்தவில்லை. பொருளற்ற பேச்சு என்று சொன்னார்கள், நடக்காது என்றார்கள். ஆனால் இப்போது அவர்களுக்கெல்லாம் விஷயம் புரிந்துவிட்டது. பிலிப், குணவர்த்தனாவின் தலைமையில் உள்ள எம்.ஈ.பி.கட்சி பிரதேச சுயாட்சித் திட்டத்தை ஒப்புக்கொள்கிறது. கம்யூனிஸ்டு கட்சியும் ஒப்புக்கொள்கிறது. தமது கட்சி சமஷ்டி ஆட்சி முறையை ஏற்றுக்கொள்கிறது என்று சற்றுமுன்னர் பேசிய கம்யூனிஸ்ட் நண்பர் சண்முகநாதன் பகிரங்கமாகக் கூறினார்.

* * *

## தந்தை செல்வா விதைத்த கருத்துக்களை இந்நாட்டு மக்கள் என்றோ ஒருநாள் ஏற்றுக்கொள்வர்

நீதி செய்வார்களென்று எதிர்பார்க்கப்பட்ட பிரிட்டிஷ் எஜமானர்கள் தம் கடமையில் முற்றாகத தவறிவிட்டார்கள். அரசியல் அதிகாரம் சிங்களவரின் கையிலேயே இருப்பதை அவர்கள் கண்டார்கள். எனவே தமிழ் பேசும் மக்களுக்கு நீதி வழங்குவதிலும் பார்க்கச் சிங்கள மக்களைத் திருப்தி செய்வதே உசிதமென்று கருதினர். அது ஆண்மையற்ற செயல். எனினும் அதையே விரும்பினார்கள்.

1949ஆம் ஆண்டு தமிழரசுக் கட்சியை அங்குரார்ப்பணம் செய்து, தமது தலைமையுரையில் இவ்வாறு கூறினார் தந்தை செல்வா. இந்த அநீதி நீங்கவேண்டும் என்ற சத்திய ஆவேசமே தந்தை செல்வாவின் பேச்சும், மூச்சுமாகவிருந்தது. ஒரு சமஷ்டி ஆட்சிமுறையிலே தமிழ்பேசும் மக்கள் சரிசமமான உரிமைகளுடன் இலங்கைத்தீவில் மகிழ்ச்சியாக வாழ்கின்ற ஒரு காலத்தைத் தம் அகக்கண்ணால் கண்டு மகிழ்ந்தார். தீர்க்க தரிசனப் பார்வை, தியாகம், அர்ப்பணிப்பு உணர்வு, துவண்டு போகாத திண்மை, அகிம்சையில் நம்பிக்கை என்பன அவருள்ளத்தில் குடிகொண்டிருந்தன.

ஆண்டில் தமிழ் மக்கள் அவரைத் தமது ஏகதலைவனாக ஏற்றுக்கொண்டனர். 1977ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26ஆம் திகதியன்று அவர் காலமாகும் வரை தந்தை செல்வா தமிழ் மக்களின் ஒரே நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழ்ந்தார். அவிழ்ந்து விட்ட நெல்லிக்காய் மூடைபோல, சிதறுண்டிருந்த தமிழ் பேசும் மக்களைத் தமது நேர்மைத் திறத்தினால் ஒருங்கு சேர்த்தார். அவருடைய தூய உள்ளத்தையும், துவண்டு போகாத உறுதியையும் கண்ட வாலிபர்கள் லட்சம் லட்சமாக அவரின் அணியில் ஒன்று திரண்டனர். "அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு" என்ற பழமொழிக்கிணங்க சிங்கள அரசுகள் அவருடன் ஒப்பந்தங்கள் செய்தன. சிறந்த அரசியல் பேச்சாளர்களான அ.அமிர்தலிங்கம், சொல்லின் செல்வர்

**அதி.வண.கலாநிதி எஸ்.ஜெபநேசன்**
**தந்தை செல்வா அறங்காவற்குழு தலைவர்**

செ.இராசதுரை ஆகியோர் தமிழ் அரசுக் கட்சியின் கோட்பாடுகளைப் பட்டிதொட்டி எங்கும் சென்று விளக்கினர். தமிழரசுக் கட்சியை அசைக்கமுடியாது! வடக்கையும் கிழக்கையும் பிரிக்கமுடியாது!! என்று தமிழ் மக்கள் இறுமாந்திருந்தனர்.

ஆனால் தந்தை செல்வா பலமுறை ஏமாற்றப்பட்டார். "வாழ்க்கையில் நான் ஒருவரையும் ஏமாற்றவில்லை! ஆனால் ஒருவரும் என்னை ஏமாற்றாமல் விடவுமில்லை" என்றார் கவியரசு கண்ணதாசன்.

இந்தியாவின் பிரதமராக வரவிருந்த சந்திரசேகர், தாம் சரண்சிங்கினாலும், தேவிலால் அவர்களாலும் ஏமாற்றப்பட்ட பொழுது,

"ஏமாறுவது அவமானமில்லை
ஏமாற்றுவது தான் அவமானம்"
என்று கூறினார்.

தந்தை செல்வா என்ற பண்பாளரைப் பலர் ஏமாற்றினார்கள். சிங்களவர், இஸ்லாமியர் மட்டுமன்றி தமிழ்ப் பிரதிநிதிகளும் ஏமாற்றினார்கள்.

முப்பது வருட அரசியல் வாழ்க்கையில் பல தோல்விகள்! பல ஏமாற்றங்கள், பல அவதூறுகள்!!!களை அவர் சந்திக்க நேர்ந் தது.

தந்தை செல்வா மனவேதனையுடன் தான் இவ்வுலகைவிட்டு நீங்கினார்.

ஆனால் அவர் விதைத்த கருத்துக்கள் என்றோ ஒருநாள் இந்நாட்டு மக்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும். *

# விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்கும் நடவடிக்கைகளை அரசு பொறுப்புடன், தொழில்சார் நிபுணத்துவத்துடன் கையாள்கின்றது

## ரோகித போகெல்லாகம உறுதிபடத் தெரிவிப்பு

கொழும்பு,மார்ச்31

விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்கும் நடவடிக்கைகள் மிகவும் பொறுப்புடனும் தொழில்சார் நிபுணத்துவத்துடனும் கையாளப்படுவதாக வெளிவிவகார அமைச்சர் ரோகித போகெல்லாகம உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூரில் 'இந்து' பத்திரிகை நிருபர் பி.எஸ்.சூரியநாராயணாவுக்கு அமைச்சர் போகெல்லாகம மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மனிதாபிமான ரீதியான கரிசனைகளைக் கவனத்திற்கொண்டிருப்பதாகவும் நியாயமற்ற முறையில் இராணுவ வெற்றியைப் பெற்றுக்கொள்ள கொழும்பு அவசரப்படவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

அகப்பட்டுள்ள பொதுமக்கள் புகலிடம் தேடவே பாதுகாப்பு வலயம் அமைக்கப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்த மக்களுக்கு நிவாரணம் வழங்கு மிகவும் வெளிப்படையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை - இலங்கையின் தற்போதைய நிலவரம் தொடர்பாகச் சர்வதேசத்தின் அக்கறை அதிகரிக்கின்ற நிலையில் மோதலுக்குப் பின்னர் தீர்வு காண்பது தொடர்பான திட்டங்கள் குறித்து சர்வதேச மாநாடொன்று இடம்பெறுவதை அவர் நிராகரித்துள்ளார்.

உள்நாட்டு அரசியல் நடவடிக்கைகள் இது தொடர்பாக இப்போது அதிகளவில் இடம்பெறுகிறது.

இந்தியா எமக்குப் பாரிய பலமாக உள்ளது. எமது நலன்கள் தொடர்பாக அதனுடன் நடவடிக்கைகளைப் பகிர்ந்துகொள்கிறோம்.

அந்நாடு எம்முடன் மிகவும் அந்நியோன்யமாகச் செயற்படுகின்றது. ராஜீவ் காந்தியால் அறிமுகப்படுத்தப்பட்ட அரசியல் நடவடிக்கைகள் (அதிகாரப் பகிர்வு) இலங்கையின் மோதலின் பின்னர் முழு அளவில் அமுல்படுத்தப்படவுள்ளது.

தாய்லாந்திலிருந்து நாடு திரும்பும் வழியில் சிங்கப்பூரில் வைத்து இதனைத் தெரிவித்த வெளிவிவகார அமைச்சர் போகெல்லாகம, மோதல் முடிவடைந்ததற்குப் பின்னர் எமது அயலவர்களுடன் எமது தொடர்பாடல்களை மேலும் விரிவுபடுத்த நாம் விரும்புகின்றோம் - என்றார்.

பிரபாகரன் இலங்கையில் இருக்கிறார் என்று நம்புகிறோம். இலங்கைக்கு வெளியே புலிகளின் பயங்கரவாதத்தையும் மனதில் கொண்டுள்ளோம். தற்போது எமது முயற்சிகளில் நாம் வெற்றி பெற்றுள்ளோம். அச்சுறுத்தல் குறித்து நாம் எமது நண்பர்களுக்கும் எச்சரிக்கை விடுப்போம்.

புலிகளின் அனுதாபிகள் (ஏற்கனவே) ஐரோப்பாவில் உள்ளனர். அவர்களின் பாரிய போராட்டம் தற்போது இடம்பெறுகிறது.

புலிகளுக்கு உயிர்மூச்சுக் கொடுக்கப் போராட்டம் இடம்பெறுகிறது. இதற்கு நாம் இடமளிக்கக் கூடாது.

புலிகளின் முன்னணி அமைப்புகள் என்ற போர்வையில் இந்த நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

அதனாலேயே ஐரோப்பிய ஒன்றியத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழக அமைப்புகளைத் தடைசெய்ய நாம் கோரினோம் - என்று அமைச்சர் போகெல்லாகம மேலும் தெரிவித்துள்ளார். (9)

# வவுனியா அகதிமுகாமில் உள்ள மாணவர்கள் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் தோற்ற ஏற்பாடு

கொழும்பு,மார்ச்31

இந்த வருடம் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள வவுனியா அகதி முகாம்களில் தங்கியுள்ள வன்னி மாணவர்களின் விவரங்களைத் திரட்டுமாறு பரீட்சைகள் திணைக்களம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளது.

முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்ட வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கு இது தொடர்பாக எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது எனப் பரீட்சைகள் ஆணையாளர் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

இம்மாணவர்களின் விவரங்கள் திரட்டப்பட்டு முடிந்ததும் இம்மாணவர்களை உயர்தர பரீட்சையில் தோற்ற வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த மாணவர்களின் விவரங்களை இப்போதிருந்தே திரட்டினால் இவர்களுக்கான பரீட்சை ஏற்பாடுகளைச் செய்து கொடுப்பது மிக இலகுவாக இருக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்த வருடம் ஓகஸ்ட் மாதம் முதலாம் வாரத்தில் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சி)

# இந்த வருடம் 12ஆயிரம் பேருக்கு டெங்கு நோய் பீடிக்கும் ஆபத்து!

## சுகாதார அமைச்சு ஆய்வில் தகவல்

கொழும்பு,மார்ச்31

இந்த வருடம் சுமார் 12 ஆயிரம் பேர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்படும் அபாயம் உண்டு என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சால் அண்மையில் நடத்தப்பட்ட டெங்கு நோய் தொடர்பான ஆய்வு ஒன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆய்வின்படி இந்த வருடம் மார்ச் மாதத்துடன் முடிவடைந்த ஒரு வாரத்தில் மாத்திரம் 27 பேர் டெங்கு காய்ச்சலால் உயிரிழந்துள்ளனர்.

அதேபோல் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்ட இரண்டாயிரத்து 700 பேர் சிகிச்சை பெற்றுச் சென்றுள்ளனர்.

இந்த வருடத்தின் முதல் மூன்று மாதங்களில் இந்நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை கணிசமான அளவு அதிகரித்துள்ளது.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, அநுராதபுரம் மற்றும் மட்டக்களப்பு உள்ளிட்ட பல இடங்களில் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்நோயைக் கட்டுப்படுத்த பொது மக்களின் ஒத்துழைப்பு மிக அவசியம் என்று தெரிவித்துள்ள சுகாதார அமைச்சு காய்ச்சல் வந்து மூன்று நாள்கள் நீடித்தால் உடன் வைத்தியர்களை நாடவேண்டும் என்றும் கூறியுள்ளது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமக

# ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம்: | | மறைவு: |
|---|---|---|
| 25 | | 10 |
| ★ | | ★ |
| 07 | | 03 |
| ★ | | ★ |
| 1934 | | 2000 |



## அமரர் சிவக்கொழுந்து சீனிவாசகம்

அன்பே அணிகலனாகக் கொண்டு அரவணைத்து ஆதரவு காட்டி எங்கள் சீரிய வாழ்வுக்கு வழி காட்டியாக விளங்கிய எங்கள் அன்புத் தெய்வம்

இல. 62, புதிய செம்மணி வீதி, நல்லூர் வடக்கு, கல்வியங்காடு.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மேலும் 235 பேர் வந்தனர்

முல்லைத்தீவுப் பகுதியிலிருந்து கடந்த மூன்று தினங்களில் 235 பேர் அழைத்து வரப்பட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை 27 குடும்பங்களைச் சேர்ந்த 88 பேரும் சனிக்கிழமை 14 குடும்பங்களைச் சேர்ந்த 37 பேரும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை 110 பேரும் வருகை தந்துள்ளனர்.

இக் குடும்பங்கள் நாவற்குளி பனை அபிவிருத்தி நிலையத்தில் உள்ள நலன்புரி நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (1-207)


## ராஜீ திருமண சேவை

வெளிநாட்டில் P.R. உள்ள மணமகன், மணமகள், உள்நாட்டில் உத்தியோக மணமகன், மணமகள், சுய தொழில் செய்யும் மணமகன், மணமகள் தேவைகளுக்கு தொடர்பு கொள்ளவும்.

ராஜீ திருமண சேவை

இல.158/03, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே.: 0774745647

e.mail rajee wedding123@yahoo.com


# நன்றி செலுத்தும் வழிபாடு

அமரர் தந்தை எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்களின் நூற்றிப்பதினொராவது(111வது) பிறந்த தினத்தை நிறைவு கூரும் வகையிலும் அவரது வாழ்வுக்கும் பணிக்கும் கடவுளுக்கு நன்றி செலுத்தும் வகையிலும் இன்று (31.03.2009) செவ்வாய்க்கிழமை பி.ப. 5மணிக்கு சுண்டுக்குளி புனித திருமுழுக்கு யோவான் ஆலயத்தில் நன்றி செலுத்தும் வழிபாடு நடைபெறவுள்ளதால் அனைவரையும் இவ் வழிபாட்டில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

யாழ் -கிறிஸ்தவ ஒன்றியம்,
யாழ்ப்பாணம்.


## உலகத் தரத்திலான சினிமாப் படங்கள் வாடகைக்கு

செயல்திறன் அரங்க இயக்கம் சினிமா ஆர்வலர்களுக்காகவும் நாடகமும் அரங்கியலும் துறைசார்ந்தோர் மற்றும் ஆர்வலர்களுக்காகவும் உலகத் தரத்திலான சினிமாப்படங்களை வாடகைக்கு வழங்குகிறது. ஆர்வமுள்ளோர் பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

செயல்திறன் அரங்க இயக்கம்

(பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு முன்பாக)

'அருளகம்'

ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் பிரகாசம் தோமஸ்



தோற்றம்:17✱04✱1960
மறைவு:31✱03✱2008

கடந்த31.03.2008 திங்கட்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர்.

அமரர் பிரகாசம் தோமஸ்

அவர்களின் இரங்கல் திருப்பலி இன்று (31.03.2009) செவ்வாய்க்கிழமை காலை 6.15 மணிக்கு யாழ். மரியன்னை பேராலயத்தில் ஒப் புக்கொடுக்க இருப்பதால் அத்திருப்பலியில் கலந்து கொண்டு அவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக செபிக்கும்படி தங்களை தாழ்மையுடன் அழைக்கின்றோம். திருப்பலி நிறைவில் எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இராஜசிங்கம் வீதி,திருநகர். குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சிவபாதராசா சிவபாக்கியம்

(ஓய்வுபெற்ற ஆசிரியை யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்)



30.03.2009 ஆம் திகதி திங்கட்கிழமை (நேற்றைய தினம்) உதயன் பத்திரிகையின் 2ஆம் பக்கத்தில் பிரசுரமான திருமதி சிவபாதராசா சிவபாக்கியம் அவர்களின் மரண அறிவித்தலைத் தொடர்ந்து அறியத்தருவது-

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.03.2009) செவ்வாய்க்கிழமை காலை அன்னாரின் 'ராஜபாக்கியம்' இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப. 10.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக புலோலி கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

"ராஜபாக்கியம்" தம்பி வளவு, அல்வாய்கிழக்கு, அல்வாய்.

வ.ச.சிவபாதராசா (கணவர்).

## திருமதி இராசதுரை சிவஞானம்

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் சுதுமலை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசதுரை சிவஞானம் நேற்று (30.03.2009) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குரும்பசிட்டியைச் சேர்ந்த வைத்திலிங்கம் - சிதம்பரம் தம்பதிகளின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான கந்தையா- சின்னம்மா தம்பதிகளின் மருமகளும் இராசதுரையின் அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுதுமலை வடக்கில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (31.03.2009) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுதுமலை வடக்கு, மானிப்பாய்.

தகவல்: இ.க.இராசதுரை (கணவர்)

## செல்வராசா கிருஸ்ணராஜா (கண்ணன்)

(பரந்தாமன் ரான்ஸ்போட் உரிமையாளர்)



2ஆம் குறுக்குத் தெரு, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராசா கிருஸ்ணராஜா (கண்ணன்) நேற்று (30.03.2009) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வராசா மற்றும் இராணியம்மா தம்பதிகளின் அன்பு மகனும் கிருஸ்ணராஜா கலாவதியின் அன்புக் கணவரும், சுதாகர், ரஞ்சனி, திவாகர் ஆகியோரின் பாசமிகு தந்தையும். வே.செல்வராணி, சி.இந்திராணி (ஜேர்மனி), ஜெ.வசந்தராணி, செ.பரமேஸ்வரன், செ.கோபாலகிருஸ்ணன், நா.கேசவராணி(நோர்வே), சி.மண்டலேஸ்வரி (லண்டன்), செ.குகன்(ஜேர்மனி), பா.பவானி (கொலன்ட்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.03.2009) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக கந்தனை வெட்டிய ஆலடி (முனை) மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

2 ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை.

தகவல்: குடும்பத்தினர்.

# கேள்வி அறிவித்தல் இல 05

## கட்டடங்கள் திணைக்களம்

## வடக்கு மாகாணம், யாழ்ப்பாணம்

01. தலைவர், மாவட்ட கொள்ளல் குழு, அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலாளர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம். அவர்களால் தகுதிவாய்ந்த சகல கேள்விதாரர்களிடமிருந்தும் கீழ்வரும் வேலைகளுக் கான மூடிய கேள்விகள் 30.04.2009 பிற்பகல் 3 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

| தொ இல | ஒப்பந்த குறியீட்டு இல. | ஒப்பந்த வேலை விவரம் | இக்ராட் தரம் | கேள்வி பிணை | மீளளிக்கப்படாத கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 01. | JF/BD/GA/HS/09/2009 | மருந்துக் களஞ்சியம் நிர்மாணித்தல் ஆதார வைத்தியசாலை சாவகச்சேரி, கட்டம் I | M6/C7 | 98,400.00 | 1000.00 |
| 02. | JF/BD/GA/HS/10/2009 | மத்திய மருந்தகம் நிர்மாணித்தல் கரவெட்டி, கட்டம் V | M6/C7 | 89,900.00 | 1000.00 |
| 03 | JF/BD/GA/HS/11/2009 | மத்திய மருந்தகம் நிர்மாணித்தல் கரவெட்டி, கட்டம் VI | M7/C8 | 57,700.00 | 1000.00 |

02. கேள்வி அறிவித்தல் தொடர்பில் பின்வரும் தகைமைகளை சகல கேள்விதாரர்களும் கொண்டிருக்க வேண்டும்.

I.மேற்கூறிய அட்டவணையின் பிரகாரம் குறிப்பிடப்பட்ட ICTAD தரத்தை கொண்டிருத்தல் வேண்டும்.

II. ICTAD அறிவுறுத்தலுக்கமைய மேற்படி வேலை தொடர்பில் போதிய கேள்வி தகவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

III.முன்னைய வேலைகளில் மோசமான, நேர்மையற்ற வெளிப்படுத்தல்களை கொண்டிருத்தல் கூடாது.

IV.ஒப்பந்தகாரர் புதுப்பித்த தகவுப் பதிவுப் புத்தகத்தை கேள்வி ஆவணங்கள் பெறமுன்னர் ஒப்படைக்க வேண்டும்.

V.கேள்வி தாரர் VAT பதிவு செய்ததன் பிரதியையோ அல்லது VAT பதிவு செய்யப்படாமைக்கான கடிதத்தையோ ஆணையாளர், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் உறுதிப்படுத்தி சமர்பிக்க வேண்டும்.

03. ஆர்வமுள்ள கேள்விதாரர் மேலதிக விவரங்களையும், கேள்வி ஆவணங்களையும் இலவசமாக அலுவலக நேரத்தில் நிறைவேற்றுப் பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம் (வ.மா) யாழ்ப்பாணத்தில் தொடர்பு கொண்டு(தொ.இல.021 222 2634) பரிசீலிக்க முடியும்.

04.கேள்வி ஆவணங்களை 01.04.2009 தொடக்கம் 24.04.2009 பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணம் (அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு) பிரதம பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம் (வ.மா), யாழ்ப்பாணத்தில் செலுத்தி நிறைவேற்றுப் பொறியியலாளரிடம் இருந்து அலுவலக நாள்களில் பெற்றுக்கொள்ளலாம்.

05.இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்ட பொறி வைக்கப்பட்ட கேள்விகள் உரிய கேள்விப் பிணையுடன் தலைவர் , மாவட்ட கொள்ளல் குழு, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 30.04.2009 பிற்பகல் 3 மணிக்கு முன்பாக அனுப்பி வைக்க வேண்டும்.கேள்வியின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் விவரம் குறிப்பிடப்படவேண்டும். உடனடியாக கேள்வி திறக்கப்படும். இந்த நேரம் ஒப்பந்தகாரரோ அல்லது அவர் சார்பில் உரித்தளிக்கப்பட்டவரோ சமுகமளிக்க முடியும்.

06.மேற்படி கேள்வி தயாரித்தல், அனுப்புதல் தொடர்பில் ஏற்படும் எந்த செலவினங்களுக்கும் தொழில் தருநர் பொறுப்பாகமாட்டார்.

பிரதம பொறியியலாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம் (வ.மா), யாழ்ப்பாணம்.

க.கணேஷ், தலைவர், மாவட்ட கொள்ளல் குழு/ அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலாளர், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாகிஸ்தானில் பெரும் பரபரப்பு

# லாகூர் பொலிஸ் பயிற்சிக் கல்லூரிக்குள் தீவிரவாதிகள் அதிரடி! 25 பேர் பலி; ஆயிரம் பொலிஸார் பணயக் கைதிகளாகப் பிடிப்பு!!

லாகூர், மார்ச் 31

பாகிஸ்தானின் லாகூர் நகரில் உள்ள பொலிஸ் பயிற்சிக் கல்லூரி ஒன்றுக்குள் நுழைந்த தீவிரவாதிகள் அங்கிருந்த ஆயிரத்திற்கும் அதிகமான பொலிஸாரை பணயக் கைதிகளாகப் பிடித்துள்ளனர்.




இதன் போது இடம்பெற்ற மோதலில் 25 இற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டதுடன் 90 இற்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர்.

நேற்று அதிகாலை 7 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

''ஆயுததாரிகள் பொலிஸ் சீருடையில் உள்ளே நுழைந்தனர். கைக்குண்டுகளை வீசினர். பின்னர் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர் '' என புலனாய்வு அதி காரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பொலிஸ் பயிற்சி நிலையத்திற்குள் 15 முதல் 20 தீவிரவாதிகள் நுழைந்துள்ளனர் என காயமடைந்த பொலிஸ் அதிகாரியொருவர் நேற்று மாலை குறிப்பிட்டார்.

பொலிஸ் பயிற்சிக்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் தமது காலைப் பயிற்சிகளை மேற்கொண்டிருந்த வேளை தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக சம்பவம் நடைபெற்ற இடத்திலிருந்த பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தீவிரவாதிகளிடமிருந்து பொலிஸ்காரர்களை மீட்பதற்காக பொலிஸ் துருப்புக் காவி வாகனம் ஒன்று உள்ளே நுழைந்ததாகவும் எனினும் அதன்மீது தாக்குதல் நடத்தப்பட்டதால் அது பின் வாங்கிவிட்டதாகவும் செய்தியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். பொலிஸ் பயிற்சிக் கல்லூரியின் அணி வகுப்பு மைதானத்தில் பல பொலிஸார் வீழ்ந்து கிடப்பதை வெளியிலிருந்து ஊடகவியலாளர்கள் படம் பிடித்து தொலைக் காட்சியில் காண்பித்துள்ளார்கள், சிலர் உயிரிழந்து விட்டனர் போல தென்படும் அதே வேளை வேறு சிலர் தாக்குதலிருந்து தப்புவதற்கு முயலுகின்றமைய்யை போன்று காட்சிகள் காண்பிக்கப்பட்டுள்ளன.

இச்சம்பவத்தில் 52 பேர் காயமடைந்துள்ளனர் எனத் தெரிவித்துள்ள பாகிஸ்தான் உள்துறை அமைச்சர், கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையை வெளியிட மறுத்துள்ளனர்.

எனினும் தொலைக்காட்சி செய்திகள் 20 இற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டு விட்டனர் என தெரிவித்துள்ளன.

தீவிரவாதிகளின் தாக்குதலைத் தொடர்ந்து பாகிஸ்தானின் விசேட படைப் பிரிவினர் பொலிஸ் பயிற்சிக் கல்லூரியை சுற்றிவளைத்தனர். அருகிலுள்ள கட்டடங்களிலிருந்து அவர்கள் தாக்குதல்களை மேற்கொண்டனர். பொலிஸ் கல்லூரிக்குள் உள்ள தீவிர வாதிகளும் பதிலுக்கு தாக்குதல்களை மேற்கொண்டனர்.

### 8 மணி நேரப் போராட்டம்; தாக்குதல் முறியடிப்பு

பாகிஸ்தானின் லாகூர் நகரில் தீவிரவாதிகளால் கைப்பற்றப்பட்ட பொலிஸ் பயிற்சிக் கல்லூரிக் கட்டிடத்தை 8 மணி நேர போராட்டத்தின் பின்னர் பாதுகாப்புப் படையினர் மீண்டும் கைப்பற்றியுள்ளனர்.

இந்த மோதல்களில் அதிகாரிகள் சிலர் கொல்லப்பட்டுள்ளனர், வேறு சிலர் பணயக் கைதிகளாக பிடித்துச் செல்லப்பட்டிருந்தார்கள். கைக்குண்டுகளை வீசித் தாக்கிய தீவிரவாதிகள் மீது ஆயுதப்படையினர் திடீர் தாக்குதல் நடத்திய போது, இராணுவ உலங்கு வானூர்திகள் வானில் இருந்து பயிற்சிக் கல்லூரி மீது குண்டுகளை வீசின.

இந்த மோதல்களில் குறைந்தது மூன்று தீவிரவாதிகள் கொல்லப்பட்டதுடன், இருவர் தமது குண்டுகளை வெடிக்கச் செய்து இறந்துள்ளனர்.

# கிழக்கிலங்கைப் பல்கலை. தகுதிகாண் பரீட்சைக்கு தெரிவாகியுள்ளவர்கள் விவரம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 31

கிழக்கிழங்கைப் பல்கலைக்கழகத்தில் கட்புலக் கலை, இசை, நடனம் ஆகிய கற்கை நெறிகளுக்கான தகுதிகாண் பரீட்சை விரைவில் நடத்தப்படவுள்ளது.

இந்தப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தெரிவாகியுள்ள மாணவர்கள் விவரம் வருமாறு:-

**நடனம்**

எஸ்.சாமிலா-சுன்னாகம், எஸ்.பிரதீபா-மானிப்பாய், எஸ்.கம்ஸா-மானிப்பாய், ஆர்.றெந்தியா-மானிப்பாய், தரனியா -மாதகல், எம்.திவ்யா-சுன்னாகம், ரி.பிருந்தா-வடலியடைப்பு, ரி.அபிராமி-மல்லாகம், ஆர்.சோபனா-மானிப்பாய், என்.நர்மதா -இணுவில், என்.சர்மிலா-சுன்னாகம், எம்.வாசுகி-யாழ்ப்பாணம், ஆர்.சியானி-மல்லாகம், ஜ.ரெனீசா-மல்லாகம், ஏ.தமிழினி-வேலணை, எஸ்.சிந்துஜா-யாழ்ப்பாணம், பி.ஆஜினி-பண்டத்தரிப்பு,ஆர்.சுவேந்தினி-கரவெட்டி, றிவன்ஜனி-மீசாலை, எம்.காயத்திரி-மானிப்பாய், ஆர்.விந்தா- ஆணைக் கோட்டை, பி.யாழினி-மானிப்பாய், வி.கஜநிலா-மல்லாகம், வி.தனுசா-சுழிபுரம், எஸ்.வினோத்-அல்வாய், தர்சினி- சிலாபம், எஸ்.சிந்துஜா-ஆனைக் கோட்டை, எஸ்.செலில்தினி- பருத்தித்துறை, ஜெ.ஜீவிதா-சுழிபுரம், ஏ.நிரோஜினி-கோண்டாவில், என்.பதுசா- இருபாலை, ஜெ.லக்சலா-கோப்பாய், எம்.எஸ். கேமப்பிரியா- சுன்னாகம், எம்.சி.ஆர்.விர்ஜின் தனுகா- யாழ்ப்பாணம், எஸ்.நிரோ ஜினி-சாவகச்சேரி, சுகந்தினி-கோப்பாய், ஆர். அர்ச்சனா -சாவகச்சேரி, எஸ்.சிவதாரணி-சுன்னாகம், எல்.லக்ஸனா -சுன்னாகம், எஸ். பாபிகா-சுன்னாகம், ஜி.சிபோஜா- சுன்னாகம்.

# நாய் விரட்டியதால் மாடியிலிருந்து குதித்த சிறுவன் பரிதாப உயிரிழப்பு



சென்னை, மார்ச் 31

நாய் விரட்டியதால் பயத்தில் மாடியிலிருந்து குதித்த 6ஆம் வகுப்பு மாணவன் பரிதாபமாக உயிரிழந்த சம்பவம் ஒன்று மீனம்பாக்கத்தில் இடம்பெற்றுள்ளது.

மீனம்பாக்கம் இந்தியன் ஏயார்லைன்ஸ் குடியிருப்பில் வசிப்பவர் சீனிவாசன். இவரது மகன் ஆசிப் அரவிந்த் (வயது -11). அதே குடியிருப்பில் 3ஆவது மாடியில் வசிப்பவர் சமீதா நாயக். இவர் ஒரு விமான பணிப்பெண். இவர், வீட்டில் டாபர்மேன் நாய் வளர்க்கிறார்.

பாடசாலை விடுமுறை என்பதால், மொட்டை மாடியில் நண்பன் பிரகாசுடன், கடந்த சனிக்கிழமை அரவிந்த் விளையாடிக் கொண்டிருந்தார். பிரகாஷின் தாயும் அங்கிருந்தார். அப்போது, சமீதா வீட்டில் இருந்த நாய் திடீரென மொட்டை மாடிக்கு வந்தது. அங்கு விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களை விரட்டத் தொடங்கியது. பயந்துபோன பிரகாஷ், ஓடிச்சென்று தாய்க்குப் பின்னால் ஒளிந்து கொண்டான். இதையடுத்து அரவிந்தை நாய் துரத்தியது.

பயத்தில் அலறிய அரவிந்த், நாயிடம் இருந்து தப்பிக்க மொட்டை மாடியில் இருந்து கீழே குதித்துவிட்டார். இதில் படுகாயம் அடைந்த அரவிந்தை, தனியார் மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு சிகிச்சை பலனின்றி சிறிது நேரத்தில் அரவிந்த் பரிதாபமாக இறந்தார். இதுகுறித்து, மீனம்பாக்கம் பொலிஸார் வழக்குப் பதிவு செய்து சமீதாவை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்று விசாரணை நடத்துகின்றனர்.

இறந்த மாணவன் அரவிந்தனின் இரு கண்களையும் அவனது பெற்றோர் தானமாக வழங்கினர்.

# லக்ஷ்மன், கம்பீரின் அபார சதங்களால் தோல்வியிலிருந்து தப்பியது இந்தியா

நேர்பியர், மார்ச் 31

கம்பீர், லக்ஷ்மன் ஆகியோரின் அபாரச் சதத்தால் நியூஸிலாந்து அணிக்கு எதிராக நேர்பியரில் நடந்து வந்த 2ஆவது டெஸ்ட் போட்டி சமநிலையில் முடிவடைந்துள்ளது. 201 ஓட்டங்கள் குவித்த நியூஸிலாந்து வீரர் ரைடர் ஆட்டநாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார்.

இந்திய - நியூஸிலாந்துக் கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டி நேர்பியரில் மக்லீன் பார்க் மைதானத்தில் நடைபெற்று வந்தது.

நியூஸிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் 9 விக்கெட்டுக்களை இழந்து 619 ஓட்டங்களைக் குவித்து ஆட்டத்தை இடைநிறுத்தம் செய்தது. அடுத்து தனது முதல் இன்னிங்ஸை ஆடிய இந்திய அணி 305 ஓட்டங்களை மாத்திரமே எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதனால் 314 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் தொடர்ந்து 2ஆவது இன்னிங்ஸை விளையாடிய இந்திய அணி 3ஆவது நாள் ஆட்ட நேர முடிவில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 47 ஓட்டங்களை எடுத்திருந்தது.

4ஆவது நாள் ஆட்டநேர முடிவில் இந்திய அணி 2ஆவது இன்னிங்ஸில் 2 விக்கெட்டுக்களை இழந்து 252 ஓட்டங்களை எடுத்திருந்தது. 7 மணி நேரத்திற்கு மேலாக களத்தில் நின்ற கம்பீர் 102 ஓட்டங்களுடனும், டெண்டுல்கர் 58 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

கடைசி நாளான நேற்று ஆட்டத்தைத் தொடங்கிய இந்திய அணி, 8 ஓட்டங்களைச் சேர்ப்பதற்கு முன்னர் சச்சின் ஆட்டமிழந்தார். இவர் 131 பந்துகளில் 64 ஓட்டங்களை எடுத்தார். இதில் ஒரு சிக்ஸர், 9 பவுண்டரிகளும் அடங்கும்.

பின்னர் வந்த லக்ஷ்மன் அபாரமாக விளையாடினார். மறுமுனையில் இருந்த கம்பீர் 137 ஓட்டங்களைக் குவித்திருந்தபோது பட்டீல் வீசிய பந்தில் ஆட்டமிழந்தார். இவர் 436 பந்தில் 137 ஓட்டத்தை எட்டினார். இதில் 18 பவுண்டரிகள் அடங்கும்.

இதைத் தொடர்ந்து களமிறங்கிய யுவராஜ் சிங் அதிரடியாக விளையாடி ஓட்டங்களைக் குவித்தார். இவர் 63 பந்தில் 54 ஓட்டங்கள் எடுத்தார். இதில் 10 பவுண்டரிகள் அடங்கும். மறுமுனையில்நின்ற லக்ஷ்மன் அபாரமாக விளையாடி சதம் (124 ஓட்டங்கள்) அடித்தார்.

இந்திய அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 476 ஓட்டங்களைக் குவித்திருந்தபோது ஆட்டம் சமநிலையில் முடிவடைவதாக நடுவர் அறிவித்தார்.

3ஆவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் ஏப்ரல் 3ஆம் திகதி வெலிங்டனில் நடைபெறுகிறது.

# வருண் மீது பாய்ந்தது தேசிய பாதுகாப்புச் சட்டம்

சிறுபான்மையினருக்கு எதிராகவன்முறையைத் தூண்டும் வகையில் பேசினார் என வருண் காந்தி மீது தேசியப் பாதுகாப்பு சட்டம் பாய்ந்துள்ளது.

உத்தரப் பிரதேச மாநிலம் பிலிபித் தொகுதியில் பா.ஜ.க. வேட்பாளராகப் போட்டியிடும் சஞ்சீவ் காந்தியின் மகனான வருண் காந்தி சிறுபான்மையினருக்கு எதிராக வன்முறையைத் தூண்டும் வகையில் பேசினார் என முறைப்பாடு எழுந்தது. இதுதொடர்பாக அவர் மீது பிணையில் வெளிவர முடியாதபடி பொலிஸ் நிலையங்களில் 3 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. இவற்றை ரத்துச் செய்யக் கோரி வருண் தாக்கல் செய்த மனுவை அலகாபாத் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. இதையடுத்து, டில்லி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த முன் பிணை மனுவை வருண் காந்தி வாபஸ் பெற்றார். பிலிபித் நீதிமன்றத்தில் கடந்த சனியன்று சரணடைந்தார். அவரை காவலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டதையடுத்து, மாவட்ட சிறையில் அவர் அடைக் கப்பட்டார்.

சிறைக்கு அவர் கொண்டு செல்லப் படும் போது பா.ஜ.க. தொண்டர்களுக்கும் பொலிஸாருக்கும் மோதல் ஏற்பட்டது. தடியடி, துப்பாக்கிச் சூட்டில் 65 பேர் காய மடைந்தனர். தடை உத்தரவை மீறினர் எனவும் வன்முறையைத் தூண்டினர் எனவும் மற்றும் கொலை முயற்சி வழக்கும் வருண் காந்தி மீது கோட்வாலி பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் நேற்றுமுன்தினமிரவு அவர் மீது தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் உத்தரப் பிர தேச பொலிஸார் வழக்கு பதிவு செய்தனர்.

# நேற்று 112 பேர் உயிரிழப்பு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதல்கள் குறித்து வெளியிட்ட தகவல்கள் வருமாறு:-

மக்கள் பாதுகாப்பு வலய' பகுதிகளான மாத்தளன், முள்ளிவாய்க்கால், அம்பலவன்பொக்கணை, வலைஞர்மடம் மற்றும் இரட்டைவாய்க்கால் பகுதிகளில் உள்ள மக்கள் வாழ்விடங்களை நோக்கி நேற்று திங்கட்கிழமை காலை தொடக்கம் படையினர் விமானக் குண்டுத் தாக்குதல், ஆட்லெறி ஷெல், பல்குழல் வெடிகணை மற்றும் கொத்துக்குண்டுத் தாக்குதல்களை நடத்தினர்.

இதில் 21 சிறுவர்கள் உட்பட 112 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 27 சிறுவர்கள் உட்பட 154 பேர் காயமடைந்துள்ளனர்.

வலைஞர்மடம், இரட்டைவாய்க்கால் பகுதிகளிலேயே அதிகளவிலான மக்கள் கொத்துக்குண்டுத் தாக்குதல்களால் கொல்லப்பட்டுள்ளனர் என்று அறியவந்தது.

கொலையுண்டவர்களின் அடையாளம் காணப்பட்டோரின் பெயர்விவரங்கள் வருமாறு:-

புலேந்திரன் பகிர்த்தனா (வயது 08), முருகையா சின்னம்மா (வயது 45), கந்தையா கேதீஸ்வரி (வயது 14),முருகையா செல்வேந்திரன் (வயது 30), முருகையா ரஞ்சனி (வயது 18), மாரிமுத்து இலட்சுமி (வயது 65) , வேலும் மயிலும் சூரியகுமார் (வயது 36) , சூரியகுமார் கார்த்திகேசன் (வயது 05), அரியதாஸ் விக்கினேஸ்வரி (வயது 32) , பொன்னையா சுப்பிரமணியம் (வயது 57), ரவிக்குமார் சஜீவன் (வயது 11), அருள்தாஸ் தர்சிகா (வயது 08), தியா[illegible] (வயது 48), கனகராசா பிரதீபன் (வயது 20), கனகலிங்கம் கோமதி (வயது 45), கனகலிங்கம் வசந்தகுமாரி (வயது 16), கனகலிங்கம் சாந்தகுமாரி (வயது 17) ,செல்வராசா ஜனார்த்தன் (வயது 16) ,ஜெயராசா தர்மிலன் (வயது 12) ,சூரியராசா வேல்விழி (வயது39), யோகநாதன் பிரதீபா (வயது 26) , மதியாவதனம் மணிவண்ணன் (வயது 29) ,பூமிபாலு விமலாதேவி (வயது 39), ஜெயராசா சுபாசினி (வயது 29), ஜெயராசன் ரதீபன் (வயது 13) ,செல்வேந்திரன் பத்மலோஜினி (வயது 30) ,வரதராசா சின்னராசா (வயது 45) ,இதயரூபன் கவிதா (வயது 32) ,இதயரூபன் விதுசா (வயது03), கணபதிப்பிள்ளை ஜெதீஸ்வரன் (வயது 32) , சின்னராசா ரத்தினமணி (வயது 48), துஸ்யந்தன் சுவீற்றி (வயது 22) ,வரதராசா சின்னராசா (வயது 46)-

முத்துசாமி வடிவேல் (வயது 47), இராமலிங்கம் பிரதீபன் (வயது 18), கனகலிங்கம் சாந்தகுமாரி (வயது 16), மேகநாதன் [illegible] (வயது 22), லட்சுமிகாந்தன் மாரிமுத்து (வயது 67), கந்தசாமி ரூபிகா (வயது 09), செல்வராசா நிசாந்தன் (வயது 16) ,மாடசாமி புவனேந்திரராசா (வயது 24) ,கிருசாந்தி (வயது 10), இராசு சிவகலா (வயது 25) , வீரசாமி நாகம்மா (வயது 70), சர்வானந்தகரன் நிசாந்தி (வயது 24) , புவேந்திரமகாராசா பகிர்த்தனா (வயது 14) , மதியாபரணம் ரோமியா (வயது 10) , மதியாபரணம் இந்திராதேவி (வயது 43) , மதியாபரணம் பார்த்தீபன் (வயது 14), முருகையா செல்வேந்திரன் (வயது 25) ,முருகையா ரஞ்சனி (வயது 19) , முருகையா சின்னம்மா (வயது 56), ரவிக்குமார் சக்திவேல் (வயது 11),கார்த்திகேயன் பிந்துசா (வயது 07), பாலகுமாரன் பிரணவன் (வயது 09), தேவதாஸ் கவிதா (வயது 10) ,கோமகன் பிருந்தா (வயது 05),செல்வநாதன் பத்மலோஜா (வயது 30) ,கந்தசாமி ரூபிகா (வயது 11) ,முத்துச்சாமி மணிவேல் (வயது 45).

ஏனையோரின் பெயர் விவரம் இதுவரை கிடைக்கப்பெறவில்லை - என்றுள்ளது. (1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போர் இடைநிறு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போது இலங்கை அர சாங்கத்தரப்பினருடன் நாயர் கலந்துரையாடியதாக அவர் தெரிவித்தார்.

அதேவேளை, போரில் அகப்பட்டுள்ள மக்களுக்கான மனித நேயப் பணிகள் மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகள் ஆகியவை குறித்தும் அவர் இலங்கை அரசாங்க அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளுடன் விவாதித்ததாகவும் சிவ்சங்கர் மேனன் தெரிவித்துள்ளார். (அ)

## ஏ - 9 வீதியூடான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏ-9 பாதை ஊடான வாகனங்கள் பாதுகாப்பாக பயணம் செய்ய வசதியாக பாதை ஓரமாக காவலரண்களை அமைக்கும் பணியை இப்போது படையினர் ஆரம்பித்துள்ளனர்.

ஏ-9 பாதையில் இப்போது இடம்பெறும் கண்ணி வெடி அகற்றும் பணி பூர்த்தியானதும் பொது மக்களின் போக்குவரத்துக்கு அனுமதி வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## இலங்கையில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாற்றிக்கொள்ளும் சக்தி போன்ற சிறப்பம்சங்களை அடிப்படையாகக் கொண்டே இந்த ரோபோவிற்கு முதலிடம் வழங்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ரோபோ போட்டியில் பல நாடுகளைச் சேர்ந்த ரோபோக்கள் பங்கேற்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்திய தொழில் நுட்ப நிறுவனமே இந்தப் போட்டியை ஏற்பாடு செய்திருந்தது. இப்போட்டி வருடந்தோறும் நடத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.(அ-சி)

## ஈச்சிலம்பற்றில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈச்சிலம்பற்றுப் பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவத்தில் செல்லையா பிரபாகரன் (வயது-23) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டார். (சி)

THE SCIENCE CORNER
CLOCK TOWER LANE, JAFFNA.
BIOLOGY
DAY BATCH
BATCH-I
MON, WED, THU:- 6.45 - 8.00
BATCH-II
SAT, SUN - 9.30 - 11.00
கடந்த கால் வினாக்கள் மீட்டல்
WED - 2.45 - 4.30

## கடலிலும்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்றுள்ளன என கடற்படைப் பேச்சாளர் தஸநாயக்க தெரிவித்தார்.

"இந்த இரு கடற்சமர்களிலும் விடுதலைப் புலிகளின் நான்கு படகுகள் அழிக்கப்பட்டன. அந்தப் படகுகளில் இருந்த கடற்புலிகள் 26 பேர் கொல்லப்பட்டனர்" என்று கூறிய கடற்படையின் பேச்சாளர் கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு சாளைக் கடற்பரப்பில் இடம்பெற்ற கடற்சமரில் கடற்புலிகளின் மூன்று படகுகள் அழிக்கப்பட்டன.

நேற்று அதிகாலை முல்லைத்தீவு கடற்பரப்பில் இடம்பெற்ற கடற்சமரில் கடற்புலிகள் படகு ஒன்று கடற்படையினரால் தாக்கியழிக்கப்பட்டது- என்று மேலும் தெரிவித்தார்.

### பதுங்கு குழி மீது தாக்குதல்

இதேவேளை, முல்லைத்தீவு பழமாத்தளனுக்கு வடக்கே விடுதலைப்புலிகளின் பதுங்கு குழியொன்றின் மீது படையினர் நேற்றுக் காலை தாக்குதல் நடத்திய வண்ணம் முன்னேறியபோது, அங்கு பதுங்கியிருந்த விடுதலைப்புலிகளின் தற்கொலைத் தாக்குதல் அணியைச் சேர்ந்த ஒருவர் குண்டை வெடிக்கச் செய்து மரணமடைந்ததாக இராணுவத் தலைமையகம் தெரிவித்திருக்கின்றது.

எனினும் இந்தச் சண்டைகள் குறித்து விடுதலைப்புலிகள் தரப்பிலிருந்து உடனடியாகத் தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை.

விடுதலைப்புலிகளின் வசமிருந்த பல பிரதேசங்களை இராணுவத்தினர் கைப்பற்றி முன்னேறி வரும் அதேவேளை, விடுதலைப்புலிகளை 25 சதுர கிலோ மீற்றர் பரப்பளவுடைய சிறிய நிலப்பகுதியில் ஒடுக்கியிருப்பதாக இராணுவம் தெரிவித்திருக்கின்றது.

இந்தப் பிரதேசத்தின் உள்ளே சிக்கியுள்ள பல்லாயிரக்கணக்கான பொதுமக்களின் பாதுகாப்புக்காக பாதுகாப்பு வலயம் ஒன்றை அரசாங்கம் அறிவித்திருக்கின்றது. எனினும் இந்தப் பாதுகாப்பு பிரதேசத்தினுள்ளே இருந்து பொதுமக்களைக் கேடயமாக வைத்துக்கொண்டு, விடுதலைப் புலிகள் இராணுவத்தின் மீது தாக்குதல் நடத்துவதாக அரசாங்கம் குற்றம் சுமத்தி வருகின்றது. எனினும் இந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ள விடுதலைப்புலிகள் பொதுமக்கள் மீது இராணுவத்தினரே தாக்குதல் நடத்துவதாகக் கூறுகின்றார்கள்- என்று பி.பி.ஸி. தெரிவித்துள்ளது. (அ-1)

## இலங்கைப் போரி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் சிவ்சங்கர் மேனன் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

அகில இந்திய வானொலிச் செய்திச் சேவைக்கு அளித்த விசேட பேட்டியிலேயே அவர் இதனைக் கூறினார்.

இலங்கையில் இடம்பெற்று வரும் போர் காரணமாக தமிழ் மக்கள் பெரும் வேதனைகளை அனுபவித்து வருகின்றனர்.

இலங்கையில் கடந்த 23 ஆண்டுகளாக தொடரும் யுத்தம் காரணமாக அப்பாவிப் பொதுமக்கள் பாரிய அனர்த்தங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களது வாழ்க்கை நிலையை இயல்பு நிலைக்கு கொண்டுவர சகல விதமான உதவிகளையும் வழங்க இந்தியஅரசு தயாராகவுள்ளது.

யுத்தம் காரணமாக பொதுமக்கள் எதிர்நோக்கி வரும் சிக்கல்கள் குறித்து அமெரிக்க ராஜாங்க செயலாளர் ஹிலாரி கிளின்ரனுடன் பேச்சு நடத்தப்பட்டது -என்றார். (அ-1)

## மேல்மாகாணசபை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் மஹிந்த சமரசிங்க இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டும் எமது யுத்தம் இப்போது இறுதிக்கட்டத்துக்கு வந்துள்ளது. வடக்கு - கிழக்கில் புலிகளின் வசமிருந்த அனைத்துப் பகுதிகளும் பெரும்பாலும் மீட்கப்பட்டுவிட்டன.

இப்போது புலிகள் 21 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பிற்குள் முடக்கப்பட்டுள்ளனர். அந்த 21 சதுர கிலோ மீற்றர் நிலத்தையும் பிடித்து புலிகளை முற்றாக இல்லாதொழிக்க வெகு நாள்கள் செல்லாது.

யுத்தத்தில் ஈட்டப்படும் பாரிய வெற்றிகளை கௌரவிக்கும் வகையில் மக்கள் அனைத்துத் தேர்தல்களிலும் அரசை ஆதரிக்கின்றனர். இது யுத்தத்திற்கு மேலும் பலம் சேர்க்கின்றது.

மேல் மாகாணசபைத் தேர்தலுக்கு முன்பாக இந்தப் பயங்கரவாதம் முற்றாக ஒழித்துக்கட்டப்படும் என்று நான் நூறு வீதம் நம்புகிறேன்.

புலிப் பயங்கரவாதமும் அந்தப் பயங்கரவாதத்தின் தலைவர் பிரபாகரனும் ஒழித்துக்கட்டப்பட்ட நிலையில்தான் மேல் மாகாண மக்கள் தேர்தல் தினத்தன்று வாக்களிக்கச் செல்வர்.

மேல்மாகாண சபைத் தேர்தலில் அரசை வெற்றிபெறச் செய்வதற்கு மக்கள் தயாராகிவிட்டனர். எல்லாத் தேர்தல்களையும் போல் இந்தத் தேர்தலிலும் எமக்கு எவரும் போட்டியில்லை.

எமது வெற்றி என்றோ உறுதியாகிவிட்டது. எதுவித சிரமமுன்றி மீண்டும் மேல் மாகாணசபையில் ஆட்சியை நடத்துவோம் - என்றார்.

மேல் மாகாண சபைத் தேர்தல் அடுத்த மாதம் 25 ஆம் திகதி நடைபெறவுள்ளது தெரிந்ததே. (அ-சி)

## வாக்குகள் மூலம்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மகிழ்ச்சி அடைவோம் என்று அவர் குறிப்பிட்டார்.

சில கட்சிகள் தி.மு.கழகம் இலங்கைத் தமிழருக்கு எதிரானது என்று கூறுவது வெறும் வதந்தி என்றும் அவர் கூறினார்.

எமது கட்சியும் மத்தியில் உள்ள ஐக்கிய முன்னேற்ற முன்னணியும் இலங்கைத் தமிழர்களுக்கு எதிரானவை என்று பிரச்சாரம் செய்ய சிலர் முயற்சிக்கின்றனர்ளஎன்றும் கருணாநிதி கண்டனம் தெரிவித்தார். (அ-1)

## ஏ-9 வீதியூடாக உணவு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்படி கொழும்பிலுள்ள தனியார் வர்த்தகத் துறையினரை விசேட பேச்சு ஒன்றுக்கு வருமாறு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் அழைப்பு விடுத்துள்ளார். இந்தச் சந்திப்பு இன்று செவ்வாய்க்கிழமை கொழும்பு உலக வர்த்தக மையக் கட்டடத்தில் நடைபெறுகிறது என அறிவிக்கப்பட்டுள்ளது.

புத்தாண்டை முன்னிட்டு அத்தியாவசியப் பொருள்கள் உள்பட அனைத்து உற்பத்தி பொருள்களும் தட்டுப்பாடின்றி குடாநாட்டில் கிடைப்பதற்கு வழி செய்யும் வகையில் தனியார் வர்த்தகர்களுடனான இந்தச் சந்திப்பை அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் தனது அலுவலகத்தில் நடத்தவுள்ளார்.

யாழ். குடாநாட்டு மக்கள் சித்திரைப் புதுவருட கொண்டாட்டங்களில் ஈடுபடுவதற்கு ஏதுவாக புதன்கிழமையன்று ஏ-9 பாதையூடாக பொருள்களை அனுப்புவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன எனவும் அவர் தெரிவித்தார்.

புத்தாண்டை ஒட்டி 100 லொறிகளில் பொருள்கள் எடுத்துச் செல்லப்படவுள்ளன. ஏ-9 ஊடாக பொருள்களை எடுத்துச் செல்ல தனியாருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது

வலி மேற்கு கணித விஞ்ஞான
மாணவர்கட்கு ஓர் நற்செய்தி
Subra(14)
சித்தன்கேணியில்
THE SCIENCE CORNER
ஆசிரியர் குழாமின் சேவை
ஆரம்பம் - April 5 (ஞாயிறு) 3.00 மணி

Practice English Every Day
by: S.S.Vairamuttu
(ஆங்கில ஆசான்)
நவீன முறையில் ஆக்கப்பட்டது
மலிவு விற்பனையில்
பிரபல புத்தகசாலைகளில்
பெற்றுக்கொள்ளலாம்.

பதவி வெற்றிடம்
எமது நிறுவனத்திற்கு பின்வரும் பதவிகளுக்கு
விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
1. Instructor (MSO, DTP) full time
2. Instructor (Web designing) part time
3. Instructor (Mobile phone Rep) part time
03.04.09 ற்கு முன் விண்ணப்பங்களை
அனுப்பி வைக்கவும்
Softview Computer College
55, Arasady Road, Jaffna.

சாந்திகம்
உள சமூகப்பணிக்கான
சான்றிதழ் பயிற்சி நெறி - 6 மாத காலம்
இலங்கையில் வடக்கிலும் கிழக்கிலும் உளசமூகப் பணியில் கடந்த இரண்டு தசாப்தங்களாக உளவளத்துணை, உளசமூகத் தலையீடு, சுயதிறன் வலுவூட்டல் தொடர்பான பயிற்சி நெறிகளை தன்னார்வத்துடன் முன்னெடுத்து வரும் தொண்டு நிறுவனமாகிய சாந்திகம், தற்பொழுது உளசமூகப் பணியாளருக்கான 6மாதகால சான்றிதழ் பயிற்சி நெறியை ஆரம்பிப்பதற்காக, பொருத்தமான ஆர்வலர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருகின்றது. இப் பயிற்சி நெறியானது வார நாள்களில் 8.30 தொடக்கம் 4 மணிவரை நடைபெறும்.
விண்ணப்பதாரியின் தகைமைகள்:
* குறைந்த பட்சம் க.பொ.த. உயர்தரம் சித்தியடைந்து இருத்தல் (பட்டதாரிகள்)
* அடிப்படை ஆங்கில, கணனி அறிவைக் கொண்டிருத்தல்.
* 22தொடக்கம் 45 வயதிற்கிடையே இருத்தல்.
விண்ணப்பிக்கும்முறை
விண்ணப்பப்படிவங்களை எமது நிறுவனத்தில் பெற்று நேரடியாகவோ, தபால் மூலமாகவோ விண்ணப்பிக்க முடியும்.
★ பயிற்சிக்கான கட்டணம் மற்றும் மேலதிக விவரங்களுக்கு நேரடியாகத் தொடர்புகொள்ளவும்.
விண்ணப்ப முடிவுதிகதி: 20.04.2009
தொடர்புகளுக்கு:
நிறைவேற்றுப் பணிப்பாளர், சாந்திகம், 8/1, கற்பகவிநாயகர் ஒழுங்கை, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0212223338, 0212229720
மின்னஞ்சல் முகவரி: psych@sltnet.lk

DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING
உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைப் பெற, சுயதொழில் ஆரம்பிப்பதற்கு
உங்கள் கணினிகளை நீங்களே அமைத்துக்
கொள்வதற்கான 100% பயிற்சி நெறி
♦Chip & Card level Trouble shooting ♦Assembling ♦Variours Mother Board Handling ♦Upgrading ♦Fault Finding ♦Repairing ♦Servicing ♦Printer, Scanner & Com device management ♦Software Installation ♦Configuring Internet Interfacing & Trouble shooting ♦Networking & Etc...
பயிற்சிநெறி முடிவில் கம்பியூட்டர் ஹார்ட் வெயார் சம்பந்தமான
பூரண அறிவைப் பெற்றுக் கொள்வதற்கான உத்தரவாதம்
ஒவ்வொரு மாணவர்களுக்கும் தனிப்பட்ட முறையில் கவனம் செலுத்தப்படும்.
விபரங்களுக்கு நேரில்
Softview Computer College
55, Arasady Road, Jaffna.
T.P: 021 2225170

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31.03.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
நற்சிந்தனை
உன்னால் சாதிக்க இயலாத காரியம் என்று எதுவும் இருப்பதாக ஒருபோதும் நினைக் காதே. அப்படி நினைப்பது ஆன்மீகத்துக்கு முற்றிலும் முரண்பட்டது

க.பொ.த.உயர்தர
கல்விச்சுடர்
31.03.2009 செவ்வாய்க்கிழமை
Special Guidance For A/L 2009&2010

க. பொ.த உயர்தர மாணவர்களுக்கென தனியாக வெளிவரும்
கல்வி இணைப்பிதழ்

# பங்குத்தரகர்களின் முக்கியத்துவமும் பரிமாற்றப்படும் சாதனங்களும்

**அன்பு மாணவர்களே!**

**இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் பங்குச்சந்தையின் பங்களிப்புப் பற்றி அடிக்கடி அதிகம் பேசப்பட்டு வருகின்றது. எனினும், இது பற்றி விளக்கமின்மையும் அறிவின்மையும் மாணவர் மத்தியில் காணப்படுகின்றன.**

**2007ஆம் ஆண்டு 7ஆம் இலக்கக் கம்பனிச்சட்டம் உருவானதன் பின்னர் கம்பனிகளின் செயற்பாடுகளிலும் பங்குச்சந்தையிலும் பெருமளவு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இவை உயர்தர கலை, வர்த்தகப் பிரிவு மாணவர்கள் அவசியம் அறிந்துகொள்ள வேண்டியவை. எனவே, அனைவரும் இலகுவில் விளங்கிக்கொள்ளக்கூடிய வகையில் இந்தக் கட்டுரைத்தொடர் பிரசுரிக்கப்படுகின்றது.**

கடந்தவாரத் தொடர்ச்சி...

பொதுமக்கள் தரகர் நிறுவனங்கள் மூலமாகவே பங்குச்சந்தை நடவடிக்கைகளில் ஈடுபடமுடியும். இவ்வாறு பங்குச்சந்தையில் இடைநடுவராகத் தரகர் நிறுவனங்கள் பணிபுரிவதற்கு இரு அடிப்படைக் காரணங்கள் உள்ளன.

அ. கம்பனிகளின் நிதி நிலைமைகள் பற்றி மேற்கொள்ளப்படும் நிதிப்பகுப்பாய்வுத் தகவல்களின் அடிப்படையில் அதன் பங்குகள் கொள்வனவு செய்வதற்கு தெரிவு செய்யப்படும். ஒரு கம்பனியின் நிதி நிலைமையை அதன் ஆண்டறிக்கையை (இலாபநட்டக் கணக்கு, ஐந்தொகை உள்ளடங்கிய நிதிக்கூற்று) பகுப்பாய்வு செய்வதன் மூலம் அறிந்துகொள்ளலாம். பங்குச் சந்தையில் அங்கம் வகிக்கும் தரகர் நிறுவனங்கள், நிதிப்பகுப்பாய்வுகள் பற்றிய விசேட தகைமையுள்ளவர்களை பணிகளில் ஈடுபடுத்துவதால், முதலீடு செய்யக்கூடிய கம்பனிகளை தெரிவுசெய்துகொள்வதற்கான அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் முதலீட்டாளர்களுக்கு வழங்குகின்றன. இப் பணியானது முதலீட்டாளர்களுக்குச் சிறந்த முறையில் அவர்களது முதலீட்டை மேற்கொள்ள வழிகாட்டுகின்றது.

ஆ. தன்னியக்க கணினிப்பொறிகள் மூலம் பங்குகள் கைமாற்றம் இடம்பெற்றபோதிலும், அக்கொடுக்கல்வாங்கல்கள் நிறைவுற்றதாகக் கருதமுடியாது. அவை அக் கொடுக்கல்வாங்கல்களின் ஆரம்ப நிலையாகும். குறித்த சந்தர்ப்பம் ஒன்றில் கம்பனிகள் தமது பங்குதாரர்களின் விவரங்களைத் திரட்டிக்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்படலாம். கம்பனிப் பங்குதாரர் இடாப்பில் பங்குகளைக் கொள்வனவுசெய்த நபர்களின் பெயர்களைப் பதிவதற்கு மேற்கொள்ளவேண்டிய பணிகளுக்கான ஆவணங்களைத் தயாரிப்பது பற்றிய விசேட அறிவும், அனுபவமும் இன்றியமையாதன. பங்குத்தரகர்கள் இத்துறையில் பூரண அறிவும் தேர்ச்சியும் உள்ளவர்களாகக் கருதப்படுகின்றனர்.

எனவே, பங்குச்சந்தை தொழிற்பாடுகளில் இவ்விரு முக்கியத்துவம் வாய்ந்த பணிகளை மேற்கொள்வதற்காக இடைநடுவராக தரகர்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்வது அவசியமாகின்றது. இதன் மூலம் பொதுமக்கள் தத்தம் முதலீடுகளைச் சிறந்த முறைகளில் மேற்கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

**பங்குகள் கைமாற்றல் கட்டணம் (Transaction Fees)**

பங்குச்சந்தையில் பங்குகள் கைமாற்றம் நிகழும்போது அப் பணிகளுக்காக வாடிக்கையாளர்களிடம் இருந்து அறவிடப்படும் கட்டணம் பங்குக் கைமாற்றல் கட்டணம் எனப்படும். இது பங்குக் கைமாற்றல் பெறுமதியின் சதவீதமாகக் கணிக்கப்படும்.

ஒரு மில்லியன் ரூபாவுக்கு அல்லது அதனிலும் குறைவான பெறுமதி வாய்ந்த கைமாற்றல்களுக்கு 1.425% கட்டணம் அறவிடப்படும். இது பின்வருமாறு கணிக்கப்படுகின்றது.

* தரகர்களுக்கான தேறிய பெறுமதி 1.00% (கைமாற்றலின் குறைந்தபட்சக் கட்டணம் ரூபா 10)
* பிணைகள் பரிமாற்று ஆணைக்குழு செஸ்வரி 0.090%
* கொழும்புப் பங்குச்சந்தைக் கட்டணம் 0.105%
* மத்திய வைப்புத்திட்டக் கட்டணம் 0.030%

(கைமாற்றலின் குறைந்தபட்சக் கட்டணம் ரூபா 5)

* அரசாங்க செஸ் வரி 0.020%,1.425%

ஒரு மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியுடைய கைமாற்றல்களுக்கு 1.225% கட்டணம் அறவிடப்படும். இது பின்வருமாறு கணிக்கப்படுகின்றது.

* தரகர்களுக்கான தேறிய பெறுமதி 0.800%
* பிணைகள் பரிமாற்று ஆணைக்குழு செஸ்வரி 0.090%
* கொழும்புப் பங்குச்சந்தைக் கட்டணம் 0.105%
* மத்திய வைப்புத்திட்டக் கட்டணம் 0.030%
* அரசாங்க செஸ் வரி 0.020%, 1.225%.

**பங்குச்சந்தையில் கைமாற்றம் செய்யப்படும் பிணைகள்**

பொதுக்கம்பனிகள் சாதாரண பங்குகளை மட்டுமன்றி முன்னுரிமைப் பங்குகள், பங்கு ஆணைப்பத்திரங்கள், கம்பனித் தொகுதிக்கடன் பத்திரங்கள் போன்ற பிணைப்பத்திரங்களையும் பட்டியற்படுத்திக்கொள்ள முடியும்.

**சாதாரண பங்குகள் (Ordinary Shares)**

பொதுக்கம்பனி ஒன்றின் உரிமையாண்மையைப் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய பங்குகள் சாதாரண பங்குகள் எனப்படும். கம்பனியின் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்பவர்கள் சாதாரண பங்குதாரர்களாவர். இவ்வகையான பங்குகளுக்குக் குறித்த நிலையான பங்குலாபம் வழங்குவதற்கு கம்பனிகள் கட்டுப்படுத்தப்படுவதில்லை. அதேபோல் பொதுக்கம்பனி ஒன்று முறியும் பட்சத்தில் அதனது அனைத்து வெளியார் பொறுப்புக்களும் தீர்க்கப்பட்ட பின்னர் மீதியாகவுள்ள நிதியே சாதாரண பங்குதாரர்களுக்கு பிரித்துக்கொடுக்கப்படும். தற்போது கொழும்புப் பங்குச்சந்தையில் 241 பொதுக்கம்பனிகளின் சாதாரண பங்குகள் பட்டியற்படுத்தப்பட்டுள்ளன.

**முன்னுரிமைப்பங்குகள் (Preference Share)**

குறித்த நிலையான பங்குலாபத்தைப் பெறுவதற்கு உரிமையுள்ள பங்குகள் முன்னுரிமைப் பங்குகள் எனப்படும். கம்பனி கலைப்பின்போது சாதாரண பங்குதாரர்களிலும் கூடிய முன்னுரிமை, முன்னுரிமைப்பங்கு தாரர்களுக்கு உண்டு. முன்னுரிமைப்பங்குகளுடன் சாதாரண பங்குகளைச் சார்பளவாக ஒப்பிடும்போது பங்குகளுக்கான நட்ட அச்சம் குறைந்தளவில் காணப்படுகின்றது.

**பங்கு ஆணைப்பத்திரம் (Share Warrants)**

எதிர்காலத்தில் குறித்த விலைக்கு குறித்த கம்பனியின் பங்குகளைக் கொள்வனவு செய்துகொள்வதற்கான உரிமையை வெளிப்படுத்தக்கூடிய ஓர் ஆவணமாக பங்கு ஆணைப்பத்திரம் கருதப்படுகின்றது. தற்போது கம்பனி ஒன்று வழங்கும் பங்கு ஆணைப்பத்திரத்தை கொள்வனவு செய்பவர், அதனைப் பயன்படுத்தி எதிர்காலத்தில் கம்பனியின் தற்போதைய இணங்கிய விலைக்கு பங்குகளைக் கொள்வனவு செய்யலாம். அதற்கு இவ் ஆவணம் துணைபுரியும். தற்போது கொழும்புப்

பங்குச்சந்தையில் இரண்டு கம்பனிகளின் பங்கு ஆணைப்பத்திரங்கள் பட்டியற்படுத்தப்பட்டுள்ளன.

LB Finance எனும் கம்பனியினதும், Colombo Land எனும் கம்பனியினதும் பங்கு ஆணைப்பத்திரங்கள் பட்டியற்படுத்தப்பட்டிருக்கின்றன.

**வாக்குரிமையற்ற பங்குகள் (Non-Voting Shares)**

பொதுக்கம்பனி ஒன்றின் பங்கு மூலதனத்தில் வாக்குரிமையைப் பயன்படுத்த முடியாத ஆனால், சாதாரண பங்குகளுக்குரிய அனைத்து உரிமைகளையும் கொண்ட பங்குகள் வாக்குரிமையற்ற பங்குகள் என அழைக்கப்படுகின்றன. தற்போது கொழும்புப் பங்குச் சந்தையில் இலங்கை வர்த்தக வங்கி, ஹட்டன் நசனல் வங்கி, வணிக இன்கோபரேஷன், கெமிக்கல் இன்டஸ்ரீஸ் (கொழும்பு) கம்பனி, சொண்டீப் ஹோட்டல் கம்பனி, செலான் வங்கி, டர்டன்ஸ், ப்ளு டயமன்ட், மொரிசன்ஸ் போன்ற கம்பனிகள் வாக்குரிமையுள்ள சாதாரண பங்குகளுக்கு மேலதிகமாக வாக்குரிமையற்ற சாதாரண பங்குகளையும் பட்டியற்படுத்தியுள்ளன.

**கம்பனித் தொகுதிக்கடன்கள் (Corporate Debenture)**

பொதுக்கம்பனிகள் கடன் மூலதனத்தை திரட்டிக்கொள்வதற்கு பொதுமக்களுக்கு வழங்கும் பிணைப்பத்திரங்கள் கம்பனித்தொகுதிக் கடன்கள் என அழைக்கப்படும். சாதாரண பங்குகளுக்கு முற்றிலும் மாறான முறைகளில் தொகுதிக்கடன்களைப் பல்வேறு பண்புகளுக்கமைய வடிவமைத்துக்கொள்ள முடியும். குறித்த வட்டி வீதத்தையும் குறித்த முதிர்வுகாலம் ஒன்றையும் கொண்டமைந்திருப்பது தொகுதிக் கடன்களின் அடிப்படைப் பண்புகளாகக் கருதப்படுகின்றன. வட்டி வீதமற்ற தொகுதிக்கடன்கள் (Zero Coupon Debentures) அல்லது மிதக்கும் வட்டிவீதத் தொகுதிக்கடன்கள் (Floating Rate Debentures) எனவும் கம்பனிகளுக்குத் தொகுதிக்கடன்களை வழங்க முடியும். இதேபோல் முதிர்வுகாலமற்ற, மீட்கத்தகா தொகுதிக்கடன்களையும் (Perpetual Debentures) கம்பனிகளுக்கு வழங்க முடியும்.

**பிணைகளின் கடன்வழங்கலும் கடன் பெறுதலும் (Securities Lending & Borrowing)**

கொழும்புப் பங்குச்சந்தையில் 2001ஆம் ஆண்டு செப்டெம்பர் முதல் கம்பனிப் பங்குகளைக் கடனுக்கு வழங்குவதற்கும், கடனுக்குப் பெறுவதற்குமான (Securities Lending and Borrowing) எண்ணக்கரு ஒன்று அறிமுகம் செய்துவைக்கப்பட்டது. இக் கொடுக்கல்வாங்கல்களுக்கான புதிய ஒழுங்கு விதிகளை கொழும்புப் பங்குச்சந்தையும், மத்திய வைப்புத்திட்டமும் ஒழுங்கமைத்துள்ளன.

கம்பனிப்பங்குகளைக் கடனுக்கு வழங்க முன்வருபவர்களுக்கும் (கடன் கொடுத்தோர்- Lender), கடனுக்குப் பெற முன்வருபவர்களுக்கும் (கடன்பட்டோர்- Borrower), இப்பணியைச் செயற்படுத்துவதற்குத் தகுதியுள்ள பங்குத்தரகர்களாகிய தரகர் நிறுவனங்களுக்கும் அல்லது நம்பிக்கைப் பொறுப்பாளராக செயற்படக்கூடிய வங்கிகளுக்கும் இடையில் எழுத்துருவான ஒப்பந்தம் ஒன்றின் மூலம் இக் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப் படுகின்றன.

இப்புதிய முறையில் பங்குகளின் விலையில் வீழ்ச்சி ஏற்படும்போது பங்குகளைக் கடனாகப் பெற்றவருக்கு இலாபத்தை அடையக்கூடியதாக இருக்கின்ற அதேவேளை பங்குகளின் விலை அதிகரிக்கும்போது நட்டத்தை ஏற்படுத்தக்கூடியதாகவும் அமைகின்றது.

மறுபுறத்தில் தன்னிடம் கைமாற்றம் செய்யப்படாமல் இருக்கும் பங்குகளைக கடனுக்குக் கொடுப்பதன் மூலம் கடன் வழங்குபவர் கடன் பெறுபவரிடமிருந்து ஏற்கனவே இணங்கியபடி ஒரு வருமானத்தைப் பெறக்கூடியதாக இருக்கின்றது.

பங்குகளைக் கடனுக்கு பெற்றுக்கொண்டவரிடமிருந்து பஙங்குத்தரகர் தாம் ஆற்றிய பணிகளுக்காக தாம் முன்னரே இணங்கிய கட்டணங்களை அறவிட்டுக்கொள்ள முடியும். இக்கட்டணங்கள் கொழும்புப் பங்குச்சந்தையினால் நிர்ணயிக்கப்படாமல், அப்பணிகளில் பங்காற்றும் கட்சியினர்களால் தீர்மானிக்கப்படுகின்றன.

பங்குகளைக் கடனுக்கு வழங்குநர், பங்குகளைக் கடனுக்குப் பெறுநர் ஆகிய

தொடரும்....

**உயர்தர கலை, வர்த்தகப்பிரிவு மாணவர்களுக்கான விளக்கக் கட்டுரைத்தொடர்-3**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க. பொ.த உயர்தர மாணவர்களுக்கான

புள்ளி வழங்கும் திட்டம்- அரச பரீட்சை வினாத்தாள் ஓகஸ்ட்-2008

# அரசியல் மூலத்தத்துவங்கள்-02

கடந்தவாரத் தொடர்ச்சி....

**Q7. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றிற்குச் சிறுகுறிப்புகள் எழுதுக.**

**1) தற்போதைய உயர் நீதிமன்றத்தின் அதிகாரங்களும் பணிகளும்.**

அரசியல் யாப்பின் (XIV) அத்தியாயத்தின் 118-136 வரையுள்ள சரத்துக்கள் உயர் நீதிமன்றத்துக்கு நீதித்துறை அதிகாரத்தை வழங்குகிறது. 118ஆம் சரத்தில் குறிப்பிடப்படுவதன்படி உயர் நீதிமன்றம் இலங்கைக் குடியரசின் உயர்நிலை நீதிமன்றமாகவும் இறுதிப்பதிவேட்டு நீதிமன்றமாகவும் அமைவதோடு அது பின்வரும் அதிகாரங்களை நிறைவேற்றும்.

அதிகாரங்கள்

1. பாராளுமன்ற மசோதாக்களின் யாப்புறு தன்மையைப் பரிசீலனை செய்தல்.
2. அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்தல்.
3. இறுதி மேன்முறையீட்டு நீதிமன்றாகச் செயற்படல்.
4. ஆலோசனை வழங்கும் நியாயாதிக்கம்.
5. தேர்தல் ஆட்சேபனை மனுக்களை விசாரித்தல்.
6. பாராளுமன்றச் சிறப்புரிமை மீறல்களைப் பரிசீலித்தல்.
7. சட்டத்தின் மூலம் பாராளுமன்றம் ஒப்படைக்கும் கருமங்கள் தொடர்பான நியாயாதிக்கம்.

மேலும் ஜனாதிபதிக்கு எதிரான குற்றப்பிரேரணை வழக்கை விசாரித்தல். பாராளுமன்ற உறுப்பினர்களைப் பதவிநீக்கம் செய்வதற்கு அரசியற் கட்சிகள் பெற்றுள்ளஅதிகாரத்துக்குச் சவால்விடுத்தல் என்ற விடயங்களையும் உட்படுத்தி எழுதப்படும் விடைகள் பூரணமானவையாகக் கருதப்படவேண்டும்.

**2) தற்போதைய பகிரங்கசேவை ஆணைக்குழுவின் அதிகாரங்களும் பணிகளும்.**

1. 55 (1) ஆம் சரத்து;
அரசாங்க உத்தியோகத்தர்களை நியமித்தல், பதவி உயர்வு வழங்குதல், இடமாற்றம் செய்தல், ஒழுக்கக் கட்டுப்பாடுகளை மேற்கொள்ளுதல், பதவியிலிருந்து அகற்றுதல் ஆகிய அதிகாரங்களை நிறைவேற்றுகிறது. இவ் அதிகாரத்திற்கு இலாகாத்தலைவர்கள் உட்படமாட்டார்கள்.

2. 56 (1) ஆம் சரத்து:
துணைக் கமிட்டிகளை நியமித்து அதிகாரங்களை ஒப்படைத்தல். நிச்சயமாகக் குறிப்பிடப்பட்டுள்ள அரசாங்கசேவையின் சில அதிகாரிகளை நியமித்தல், பதவி உயர்வு வழங்குதல், இடமாற்றம் செய்தல், ஒழுக்கக் கட்டுப்பாடு மற்றும் பதவிநீக்கம் போன்ற கருமங்களை நிறைவேற்றுவதற்கு அத்துணைக் கமிட்டிகளை நியமித்து அவற்றுக்கு அதிகாரங்களை வழங்கும் அதிகாரம் ஆணைக்குழுவுக்கு உண்டு. அவ்வாறான துணைக்குழுக்களில் 3 உறுப்பினர்கள் இடம்பெறுவதோடு அவர்களை ஆணைக்குழுவே நியமிக்கும். மேலும் அக்குழுவின் செயலாளர்களை நியமித்து அவற்றின் பணிகளைத் தீர்மானித்தல். அவ்வாறு தீர்மானித்த பணிகளை அரசாங்கம் கெசட் (வர்த்த மானி) மூலம் வெளியிட வேண்டும்.

3. 57 (1) ஆம் சரத்து:
ஓர் அரசாங்க அதிகாரிக்கு அதிகாரத்தை ஒப்படைக்கும் அதிகாரம். இதுதொடர்பிலான ஏற்பாடுகளும் மேலே 56 (1) இல் இடம்பெறும் விளக்கங்களும் சமமானவையே ஆகும்.

4. 58 (1) ஆம் சரத்து:
56 (1), 57 (1) ஆகிய சரத்துக்களின்படி நியமிக்கப்படும் துணைக்குழுக்கள் மற்றும் அதிகாரிகள் மேற்கொள்ளும் செயற்பாடுகள் தொடர்பாக எவரேனும் ஓர் அதிகாரி திருப்தியுறாவிட்டால் அது தொடர்பாக முன்வைக்கப்படும் மேன்முறையீடுகளை விசாரித்து இறுதி முடிவுகளை வழங்குதல்.

**3) இலங்கையில் அடிப்படை உரிமைகள் பாதுகாப்புப் பொறிமுறை.**

இலங்கையில் அடிப்படை உரிமை மீறல்களை விசாரிப்பதற்கு பின்வரும் நிறுவன அமைப்புக்கள் தாபிக்கப்பட்டுள்ளன.

**1. உயர் நீதிமன்றம்.**

* 26 (1) ஆம் சரத்துப்படி யாப்பின் (iii)ஆம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டு உள்ள அடிப்படை உரிமை மற்றும் (iV)ஆம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டு உள்ள மொழி உரிமையானது ஏதேனும் நிறைவேற்று அல்லது நிருவாகச் செயற்பாடுகளினால் மீறப்படின் அல்லது உடனடியாக மீறப்படவுள்ளமை பற்றிய ஏதேனும் பிரச்சினையை விசாரணைசெய்து தீர்மானிப்பதற்கான தனியானதும் பிரத்தியேகமானதுமான அதிகாரத்தை உயர் நீதிமன்றம் பெற்றுள்ளது.

* மேலே கூறப்பட்டவாறு ஓர் அடிப்படை உரிமையோ அல்லது மொழி உரிமையோ மீறப்படுதலுக்கு அல்லது மீறப்படவுள்ளமைக்கு உட்பட்டிருக்கும் ஓர் ஆள் அந்நிகழ்வு இடம்பெற்ற தினத்திலிருந்து ஒருமாத காலத்துக்குள் தாமாகவோ தமது வழக்கறிஞர் மூலமோ எழுத்துமூல மனு ஒன்றின்மூலம் உயர் நீதிமன்றுக்கு விண்ணப்பிக்கவேண்டும்.

* அம்மனு உயர் நீதிமன்றின் இரு நீதியரசர்களால் பரிசீலனை செய்யப்பட்டு விசாரணைக்குத் தகுதியானது என்று தீர்மானித்ததன் பின்னரே முன்னெடுக்கப்படும்.

* விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டால் உயர் நீதிமன்றம் மேற்கொள்ளும் விசாரணைகளின் பிரகாரம் அம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அடிப்படை உரிமை அல்லது மொழி உரிமை மீறப்பட்டுள்ளது என்று கண்டால் உயர்நீதிமன்றம் நீதியானதும், பொருத்தமானதுமான நிவாரணத்தை மனுதாரருக்குப் பெற்றுக்கொடுக்கவேண்டும் என்று பணிப்புரை விடுக்கும்.

* உயர் நீதிமன்றமானது மனு சமர்ப்பிக்கப்பட்டு இரண்டு மாத காலத்துக்குள் தனது முடிவினைத் தெரிவிக்கவேண்டும்.

* உயர் நீதிமன்றின் அபிப்பிராயப்படி அடிப்படை உரிமை அல்லது மொழி உரிமை எதுவும் மீறப்படவில்லை என்று கண்டால் அக்கருத்தை மேன்முறையீட்டு நீதிமன்றுக்குத் திருப்பி அனுப்புதல்வேண்டும்.

* உயர் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படும் அடிப்படை உரிமை பற்றிய மனுவினால் தோன்றும் ஒரு விடயத்தை விசாரணைசெய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவைப் பணிப்பதற்கும் உயர் நீதிமன்றுக்கு அதிகாரம் உண்டு.

**2. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு.**

1996, 21ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் மனித உரிமைகள் ஆணைக்குழு உருவாக்கப்பட்டது. அதில் 05 உறுப்பினர்கள் இடம்பெறுகின்றனர். இவர்கள் அரசியலமைப்புப் பேரவையின் சிபாரிசின் பேரில் ஜனாதிபதியால் நியமிக்கப்படுவர். இவர்களுள் ஒருவர் தலைவராக நியமிக்கப்படு

* விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும் என்று தீர்மானிக்கப் பட்டால் உயர் நீதிமன்றம் மேற்கொள்ளும் விசாரணைகளின் பிரகாரம் அம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அடிப்படை உரிமை அல்லது மொழிஉரிமை மீறப்பட்டுள்ளது என்று கண்டால் உயர்நீதிமன்றம் நீதியானதும், பொருத்தமானதுமான நிவாரணத்தைமனுதாரருக்குப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்று பணிப்புரை விடுக்கும்.

* உயர் நீதிமன்றமானது மனு சழர்ப்பிக்கப்பட்டு இரண்டு மாத காலத்துக்குள் தனது முடிவினைத் தெரிவிக்கவேண்டும்.

* உயர் நீதிமன்றின் அபிப்பிராயப்படி அடிப்படை உரிமை அல்லது மொழி உரிமை எதுவும் மீறப்படவில்லை என்று கண்டால் அக்கருத்தை மேன் முறையீட்டு நீதி மன்றுக்குத் திருப்பி அனுப்புதல்வேண்டும்.

* உயர் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படும் அடிப்படை உரிமை பற்றிய மனுவினால் தோன்றும் ஒரு விடயத்தை விசாரணைசெய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவைப் பணிப்பதற்கும் உயர் நீதிமன்றுக்கு அதிகாரம் உண்டு.

**2. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு.**

1996, 21ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் மனித உரிமைகள் ஆணைக்குழு உருவாக்கப்பட்டது. அதில் 05 உறுப்பினர்கள் இடம்பெறுகின்றனர். இவர்கள் அரசியலமைப்புப் பேரவையின் சிபாரிசின் பேரில் ஜனாதிபதியால் நியமிக்கப்படுவர். இவர்களுள் ஒருவர் தலைவராக நியமிக்கப்படுவார். இது மரபுசார் நீதித்துறை முறையிலிருந்து வேறுபட்ட பிணக்குத் தீர்க்கும் ஒரு நிறுவனம் ஆகும்.

மனித உரிமைகள் ஆணைக்குழு மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் பின் வரும் பங்கினை நிறைவேற்றுகிறது.

* அடிப்படை உரிமைகள் பற்றிய அரசியல் யாப்பின் ஏற்பாடுகளுக்கு அமைவாக செயற்பாடுகள் இடம்பெறுகின்றன என்று உறுதிப்படுத்தும் அடிப்படை உரிமைகளை மதித்தல், அவற்றைப் பின்பற்றுவதை மேம்படுத்தல் சம்பந்தமான நிறைவேற்று மற்றும் நிருவாகச் செயற்பாடுகளை விழிப்புடன் அவதானித்தல்.

* அடிப்படை உரிமை மீறப்படுதல் அல்லது மீறப்படுதலுக்கு உட்படவுள்ளமை பற்றிய முறைப்பாடுகளை விசாரணைசெய்தல், இணக்கப்படுத்தல், ஒற்றுமைப்படுத்தல் போன்ற வழிமுறைகள் மூலம் தீர்த்து வைத்தல்.

* அடிப்படை உரிமைகளை மேம்படுத்தல், விருத்திசெய்தல், பாதுகாத்தல் தொடர்பான சட்ட மற்றும் நிருவாக ஏற்பாடுகள் என்பவற்றைத் தயாரிப்பதில் அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்குதல்.

* தேசிய சட்டங்களையும், நிருவாக நடவடிக்கைகளையும் சர்வதேச மனித உரிமைகள் தரங்களுக்கும் ஏற்றுக்கொள்ளுதலுக்கும் இசைவானதாக மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் பற்றி அரசாங்கத்துக்குச் சிபாரிசுகளை முன்வைத்தல்.

* மனித உரிமைகள் பரப்பில் இடம்பெறும் ஒப்பந்தங்கள் மற்றும் வேறு சர்வதேச ஆவணங்கள் என்பவற்றில் பங்காற்றுவதன் மற்றும் உடன்படுவதன் அவசியம் பற்றி அரசாங்கத்துக்குச் சிபாரிசுசெய்தல்.

* மனித உரிமைகள் பற்றி அறிவூட்டல், விருத்திசெய்தல், மனித உரிமைக் கல்வியை வழங்குதல்.

* மனித உரிமைகள் பற்றி பிரதேசமட்டத்தில் செயற்படுவதற்கென பிரதேசக் குழுக்களை நியமித்து அவற்றுக்கு அதிகாரங்களை வழங்கிச் செயற்படுத்தல்.

* ஏதேனும் ஒரு நீதிமன்றில் விசாரணைக்கு உட்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறலோடு தொடர்பான வழக்கினை அந் நீதிமன்றத்தின் அனுமதியுடன் தலையிட்டுச் செயற்படுதல்.

* உயர் நீதிமன்றம் ஆணைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தும் ஒரு விடயம் சம்பந்தமாக ஈடுபட்டு உயர் நீதிமன்றம் விதிக்கும் நடவடிக்கைகளை எடுத்தல்.

**3. ஓம்புட்ஸ்மன்**

* 1978 யாப்பின் மூலம் ஓம்புட்ஸ்மன் பதவி அறிமுகம் செய்யப்பட்டது.

* யாப்பின் 156 (1) ஆம் சரத்தில் குறிப்பிடப்படுவதன்படி அரசாங்க அதிகாரிகள், அரசாங்கக் கூட்டுத்தாபனங்களின் உள்ளூராட்சி மன்றுகளின் அதிகாரிகள், அவை போன்ற வேறு நிறுவனங்களின் அதிகாரிகள் என் போரால் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன என்றும் வேறும் அநீதிகளை இழைத்துள்ளனர் என்றும் முன் வைக்கப்படும் முறைப்பாடுகளை சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கவும், அமையவும் புலனாய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்கும் பங்கை ஓம்புட்ஸ்மன் மேற் கொள்கின்றார்.

* அரசாங்க நடவடிக்கைகளின்போது ஓர் அடிப்படை உரிமை மீறப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் தலையிட்டுச் செயற்படுவதற்கான அதிகாரம் உயர் நீதிமன்றுக்கும் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கும் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், அடிப்படை உரிமை மீறல் அல்லாத வேறு அநீதிகளை அரசாங்கமோ அதனோடு இணைந்த நிறுவனங்களோ இழைக்கும்போது அவற்றில் தலையிட்டுச் செயற்படும் அதிகாரம் ஓம்புட்ஸ்மனுக்கு உண்டு.

* பொதுமக்கள் விண்ணப்பக்குழு அல்லது ஒரு நபர் முன்வைக்கும் முறைப்பாட்டின் மூலம் அரசாங்கமோ அதனோடு இணைந்த ஒரு நிறுவனமோ ஒரு நிறுவன அலுவலரோ அடிப்படை உரிமையை மீறி உள்ளார் எனக் கண்டால் ஓம்புட்ஸ்மன் கருதும் ஒரு சந்தர்ப்பத்தில் அது தொடர்பான புலனாய்வுகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிப்பர்.

* எவரேனும் ஆளின் பொறுப்பின் கீழ் அல்லது கைதுசெய்யப்பட்டதன் கீழ் இருக்கும் ஒருவரை விசாரணைக்காக ஆஜர்படுத்துமாறு கட்டளை பிறப்பிப்பார்.

* ஓர் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளது அல்லது வேறு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்று ஓம்புட்ஸ்மன் முடிவெடுக்கும்போது அதற்குப் பொருத்தமான சிபாரிசுகளை முன்வைப்பார்.

* அடிப்படை உரிமை மீறப்பட்டமை அல்லது வேறு அநீதி இழைக்கப்பட்டுள்ளமை தொடர்பாகச் சம்பந்தப்பட்ட அலுவலர் பணிபுரியும் நிறுவனத்தின் தலைவருக்கும் அந்நிறுவனம் பொறுப்பாக்கப்பட்டுள்ள அமைச்சருக்கும், பொதுமக்கள் விண்ணப்பக் குழுவுக்கும் அறிக்கை சமர்ப்பிப்பார்.

-நிறைவுற்றது-

**இவ்வெளியீடு தொடர்பான விமர்சனங்களுக்கும், கருத்துக்களுக்கும் 0714273035/0716850005 என்ற கைத்தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளலாம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க. பொ.த உயர்தர மாணவர்களுக்கான

புள்ளி வழங்கும் திட்டம்- அரச பரீட்சை வினாத்தாள் ஒகஸ்ட் -2008

# தமிழ்-01

பகுதி-1

01. பின்வரும் செய்யுட் பகுதிகளுள் எவையேனும் மூன்றினைத் தெரிவுசெய்து
அ. அவற்றின் பொருளை இக்கால உரைநடையில் எழுதுக.
ஆ. தடித்த எழுத்தில் தரப்பட்டுள்ள பகுதிகளின் சிறப்பை விளக்குக.

1) அறம்புரிந் தன்ன செங்கோ னாட்டத்து
**முறைவேண்டு பொழுதிற் பதனெளி யோரீண்**
**டுறைவேண்டு பொழுதிற் பெயல்பெற் றோரே**
ஞாயிறு சுமந்த கோடுதிரள் கொண்மூ
மாக விசும்பி னடுவுநின் றாங்குக்
**கண்பொர விளங்குநின் விண்பொரு வியன்குடை**
**வெயின்மறைக் கொண்டன்றோ வன்றே வருந்திய**
**குடிமறைப் பதுவே.**

அ. அறக்கடவுளே வந்து அமைந்தது போன்ற செங்கோல் முறையினை ஆராயுங்கால், நீதிவேண்டும் ஒருவருக்கு அரசன் காட்சிக்கு எளியனாய் இருந்தால் அவர் மழைத் துளி வேண்டுங்காலத்துப் பெருமழை பெற்றவர் போலாவார்.
சூரியனைத் தன்மேற்கொண்ட பக்கங்கள் திரண்ட முகில் உயர்ந்த வானத்து நடுவே நின்று அதன் வெயிலை மறைத்தாற்போலக் கண்ணொளியோடு மாறுபட விளங்குகின்ற வானை முட்டிய உனது வெண்கொற்றக்குடை வெயிலை மறைப்பதற்குக் கொண்டதோவெனின்,அன்று; அது வருத்தமுற்ற மக்களைக் காப்பதற்காகப் பிடிக்கப்பட்டதாகும்.

(06 புள்ளிகள்)

ஆ வெண்கொற்றக் குடை சூரிய வெயிலை மறைக்கும் முகில்போல் விளங்குகின்றது. ஆயினும், அது ஏந்தப்படுவது மக்களை வெயிலினின்று காப்பதற்கல்ல; துயரினின்று காப்பதற்கு.

(02 புள்ளிகள்)

2) கருமத்தா னாணுத னாணுந் திருநுத
னல்லவர் நாணுப் பிற

**ஊனுடை யெச்ச முயிர்க்கெல்லாம் வேறல்ல**
**நாணுடைமை மாந்தர் சிறப்பு**

நாண்வேலி கொள்ளாது மன்னோ வியன்ஞாலம்
பேணலா மேலா யவர்

**நாணகத் தில்லா ரியக்க மரப்பாவை**
**நாணா லுயிர்மருட்டி யற்று**

அ. இழிச்செயல் காரணமாக நாணுவதே நாணமாகும், பெண்களுக்கு இயல்பான ஏனைய நாணங்கள் வேறு வகையானவை. உணவும் உடையும் அவை ஒழிந்தனவும் எல்லா உயிர்களுக்கும் பொதுவானவை; (நன்) மக்களின் சிறப்பியல்பாக அமைவது நாணுடைமையே ஆகும். மேலோர் நாணமாகிய வேலியைத் திமக்குக் காவலாக அமைத்துக்கொள்வார்களே அன்றிப் பெரிய உலகத்தினைப்பெற விரும்பார்.
மனத்தின்கண் நாணமில்லாதார் இயங்குதல், மரப்பாவை கயிற்றினாலே இயங்கி உயிருள்ளதுபோல மயங்கினாற் போன்றது.

(06 புள்ளிகள்)

ஆ நாணமில்லாதவர் மரப்பாவைக்கு உவமிக்கப்பட்டுள்ளனர். நாணமில்லாதார் மக்கள் எல்லர் எனப்படுகின்றனர்.

(02 புள்ளிகள்)

3) கன்னகு திரள்புயக் கணவன் பின்செல
நன்னக ரொத்தது நடந்த கானமு
மன்னவன் றுஞ்சின னென்ற மாற்றத்தா
லன்னமுந் துயர்க்கட லடிவைத் தாளரோ

**ஆய்வ டன்னைநோந் தங்கை யேந்தினர்**
**தாயரின் முனிவர்தந் தருமப் பன்னியர்**
**தூயநீ ராட்டினர் துயர நீக்கினர்**
**நாயகற் சேர்த்தினர் நவையு ணீங்கினார்**

அ. தனக்கு நிகரார்தென் மலையை இகழ்கின்ற திரண்ட தோள்களையுடைய கணவனான இராமன்பின் சென்றபோது நடந்துசென்ற காடும் சீதைக்கு நல்ல அயோத்தி போல் இருந்தது. இப்போது தசரதன் இறந்தான் என்ற செய்திகேட்டதால் அன்னப் பேடு போன்ற சீதை துன்பக்கடலில் கால் வைத்தாள். குற்றங்களினின்றும் நீங்கியவர்களான முனிவர்களுடைய மனைவியர், தாய்மார்போல் அருகில்சென்று தமது அழகிய கைகளால் சீதையைத்தாங்கி, அழைத்துச்சென்று தூய நீரில் நீராட்டி, அவளுடைய துன்பத்தைப்போக்கிக் கணவனிடத்தில் சேர்த்தார்கள்.

(06 புள்ளிகள்)

ஆ இராமன் உடன் சென்றதால் காடும் சீதைக்கு அயோத்திபோல் இதமானதாயிற்று. இராமனிடத்து அவள் கொண்ட விடுதலறியா விருப்பினைக் காட்டுவது.

(02 புள்ளிகள்)

4) அரியவிண் ணவர்கள் சிரமிசை புரையு சரதநித் தியசோ பனமணிச் சுவனந்
**மலர்சா ணாம்புய நிதியை இனிதுறக் கூறுதெனு மியாணைக்குருவரு வதனி**
னடுநிலை பொருந்து திரிமிசை யுலவு நபிதிருத் துதிப்பக் முத்தம் காட்சியுற்
**பவத்தைச் கேட்குமச் செவிகளே செவிகள்.**

அ. வானவர்கள் தம் சிரத்தினிலே கொண்டு போற்றுகின்ற பாதகமலமாகிய நிதி உடையவரும் நடுநிலைப் பொருந்தும் உத்தமக் காட்சித்தோற்றம் உடையவரும் சுவர்க்கத்திலே மகமூது எனும் யானைக் கிரிமிசை உலவுகின்றவருமான முகம்மது நபி (ஸல்) அவர்களைப் பிறர் துதிப்பதைக்கேட்கும் செவிகளே நல்ல செவிகள்.

(06 புள்ளிகள்)

ஆ பாதம் தாமரையாகவும் பொருட்குவையாகவும் உருவகிக்கப்படுகிறது.

(02 புள்ளிகள்)

02 'அ' பகுதியிலுள்ள கவிதையைப் படித்து அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

அல்லது

'ஆ' பகுதியிலுள்ள உரைப்பகுதியை வாசித்து அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

அ. ''ஊரெல்லாம் கூடி ஒரு தேர் இழுக்கிறதே;
வாருங்கள் நாமும் பிடிப்போம் வடத்தை''
என்று வந்தான் ஒருவன்.
வயிற்றில் உலகத்தாய்
நொந்து சுமந்திங்கு நூறாண்டு வாழ்வதற்காய்
பெற்ற மகனே அவனும்
பெருந்தோளும்
கைகளும், கண்ணில் ஒளியும், கவலையிடை
உய்ய விழையும் உளமும் உடையவன்தான்.

வந்தான். அவன் ஓர் இளைஞன்;
மனிதன்தான்.
சிந்தனையாம் ஆற்றற் சிறகுதைத்து வானத்தே
முந்தநாள் ஏறி முழுநிலவைத் தொட்டுவிட்டு
மீண்டவனின் தம்பி
மிகுந்த உழைப்பாளி!

''ஈண்டுநாம் யாரும் இசைந்தொன்றி நின்றிடுதல்
வேண்டும்'' எனும் ஓர் இனிய விருப்போடு,
வந்தான் குனிந்து வணங்கி வடம்பிடிக்க -

'நில்' என்றான் ஓராள்
'நிறுத்து' என்றான் மற்றோராள்
'புல்' என்றான் ஓராள்
'புலை' என்றான் இன்னோராள்
'கொல்' என்றான் ஓராள்
'கொளுத்து' என்றான் வேறோராள்.

கல்லொன்று வீழ்ந்து
கழுத்தொன்று வெட்டுண்டு,
பல்லோடு உதடுபறந்து சிதறுண்டு,
சில்லென்று செந்நீர் தெறித்து
நிலம் சிவந்து, மல்லொன்று நேர்ந்து
மனிசர் கொலையுண்டார்.

ஊரெல்லாம்கூடி இழுக்க உகந்த தேர்
வேர் கொண்டதுபோல் வெடுக்கென்று நின்றுவிடப்
பாரெல்லாம் அன்று படைத்தளித்த அன்னையோ
உட்கார்ந் திருந்துவிட்டாள் ஊமையாய்த் தான்பெற்ற
மக்களுடைய மதத்தினைக் கண்டபடி.

முந்தநாள் வான முழுநிலவைத் தொட்டுவிட்டு
வந்தவனின் சுற்றம்
அதோ மண்ணிற் புரள்கிறது!

1) இக்கவிதை புனையப்படுவதற்குத் தூண்டுதலாய் இருந்தது யாதென்பதைத் தெளிவுபடுத்துக.
சமூகத்தில் ஏற்பட்ட ஏற்றத்தாழ்வுகள்; அவற்றினால் மனிதன் மதிக்கப்படாமை; மனிதர் கொலையுண்டமை ஆசிரியருடைய உணர்வை உலுக்கியுள்ளன. இவற்றுக்கு மேலாக முழுநிலவைத் தொடுகிற அறிவு உயர்ச்சியின் நடுவே இப்படியான அவலம் ஏற்பட்டமை; பேதங்கள் ஏற்பட்டமை கவிஞர் இப்படியான கவிதை புனையத் தூண்டுதல்களாயின.

(04 புள்ளிகள்)

2) ''வாருங்கள் நாமும் பிடிப்போம் வடத்தை'' என்று வந்தவன் பற்றிக் கவிஞர் என்ன கூறுகிறார்?
உலகத்தாய் நொந்து சுமந்து பெற்ற மகன், பெருந்தோள் கைகள் உடையவன். ஒளியுடைத்த கண்ணினன். கவலை இருப்பினும் அதிலிருந்து மீள எண்ணும் உள்ளம் உடையவன்; ஓர் இளைஞன்; முழு நிலவைத்தொட்டு வந்தவனின் தம்பி; மிகுந்த உழைப்பாளி; மனித சமூகம் ஒற்றுமையுடன் இருக்க வேண்டும் என்பதிலே பெருவிருப்புடையவன்.

(04 புள்ளிகள்)

3) குனிந்து வடம்பிடிக்க முனைந்தவனுக்கு நேர்ந்த கதியினைக் கவிஞர் சித்திரிக்குமாற்றினை விளக்குக.
''மல்லொன்று நேர்ந்தது மனிதர் கொலையுண்டார்'' என்று சித்திரிக்கிறார். நில், நிறுத்து, புல், புலை, கொல், கொளுத்து என்ற வார்த்தையாடல்கள் வடம்பிடிக்க வந்தவனின் கதியைச் சித்திரிக்கின்றன.

4) ''தான் பெற்ற மக்களுடைய மதத்தினைக் கண்டபடி'' என்ற தொடர் மூலம் கவிஞர் எதனைப் புலப்படுத்த விரும்புகிறார்?
மக்களிடையே ஏற்பட்ட பிளவும், அதன் காரணமாக ஏற்பட்ட மல்லும் மரணங்களும் தெய்வத்தையே வாயடைத்து நிற்கவைத்துவிட்டன. மனிதருடைய நிலை எம்மாத்திரம் என்பதை ஓரளவு புலப்படுத்துவதாக ''அன்னையோ உட்கார்ந்துவிட்டாள் ஊமையாய்த் தான் பெற்ற மக்களுடைய மதத்தினைக் கண்டபடி'' என்னும் பாடலடி அமைகின்றது. மக்கள் பின்பற்றும் மதம் உயர்வு-தாழ்வினைக் கற்பிப்பதாகவும், தாழ்ந்தவர்கள் மீது உயர்ந்தவர் மதங்கொண்டு தாக்குவதாகவும் அமைவதை ''மக்களுடைய மதத்தினை'' என்னும் தொடர் சித்திரிக்கிறது.

(04 புள்ளிகள்)

ஆ. எங்களுடைய அனுபவம் புலவனுடைய அனுபவத்தைப்போல ஆழம் அல்லது தெளிவுள்ளதாக இருப்பதில்லை. அதனாலும் நாம் அதனைத் தெளிவாக வெளிப்படுத்த முடிவதில்லை. இத்தகைய நிலையிலிருக்கும் நாம் சிறந்த அனுபவம் ஒன்றைப் பெற்று அதனால் இன்பம் அடைய விரும்பின், ஒரு புலவனுடைய உதவியை நாடவேண்டிய நிலை ஏற்படுகின்றது. ஆகாய வெளியில் நீந்திக்கொண்டு செல்லும் தண்மதியைக் காணும்போதெல்லாம் எம்முடைய உள்ளத்தில் ஓர் இன்ப உணர்ச்சி உதிக்கின்றது. எனினும், அக் காட்சியின்கண் ஒரு புலவனுடைய உள்ளம் அழுந்துவதுபோல எம்முடைய உள்ளம் அழுந்துவதில்லை. எம்மிலும் பார்க்கப்பன்மடங்கு இன்பத்தைப் புலவன் அடைகின்றான்; அதுமட்டுமன்று, தான்பெற்ற அனுபவத்தைக் கவிதை உருவத்தில் எமக்குத் தருகின்றான். ஆகவே, நாம் அவனுடைய உதவியை நாடி, அவன் எழுதிய கவிதையைப் படித்து, ஒரு தெளிந்த அனுபவத்தைப் பெற்று இன்புறுகின்றோம். ஆகவே, கற்புனைத் திறனிலும் மொழி ஆற்றலிலும் புலவன் எம்மிலும் பன்மடங்கு சிறந்துவிளங்குவதால் அவனால் கவிதை புனையமுடிகின்றது; எம்மால் முடிவதில்லை. இதுதான் எமக்கும் புலவனுக்கும் இடையேயுள்ள வித்தியாசம்.

ஒரு கவிதையை நாம் படித்து அனுபவிக்கவேண்டுமாயின், முதலில் அக்கவிதைக்கு ஏற்ற மனோநிலையினை நாம் எம்மிடத்தில் ஏற்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். அதுமட்டும் போதாது; அதைப் பலமுறை படித்தல் வேண்டும். உயர்ந்த கவிதைகளை ஒருமுறை படித்து அனுபவிக்க முடியாது. பன்முறை படித்தால்தான் அது குறிக்கும் பொருள், உணர்ச்சி, அனுபவம் என்பனவற்றை நாம் கிரகித்துக்கொள்ள முடியும். ஒருமுறை படித்தவுடனே அது குறிப்பன யாவற்றையும் அறிந்துகொள்ள முடியுமாயின், அது சிறந்த கவிதையன்று என்பதை அனுமானித்துக்கொள்ளலாம். கவிதையைப் படிக்கும்போது ஊக்கமும் உள்ளக் கிளர்ச்சியும் எமக்கு இருத்தல் வேண்டும்; அதன்கண் உள்ளத்தைத் தோயவிடுதல் வேண்டும். அந்த நிலையிலே தான் புலவனுடைய அனுபவம் எமக்குப் புலனாகும். அதில் நாம் அழுந்துவதால் சொலற்கரிய இன்பத்தைப் பெறுகின்றோம்; அமர வாழ்வை அடைகின்றோம். இதுதான் நாம் கவிதையாற் பெறும் பயன், வேறில்லை.

1) புலவனால் எப்படிக் கவிதை புனைய முடிகின்றது?
புலவன் கற்பனை திறனினும், மொழி ஆற்றலினும் எம்மிலும் பன்மடங்கு சிறந்து விளங்குவதால், அவனாற் கவிதை புனைய முடிகின்றது, எம்மால் முடிவதில்லை.

(04 புள்ளிகள்)



தொடர்ச்சி VIஆம் பக்கத்தில்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாதிரிப் பரீட்சை - 2009 ஆகஸ்ட்
General Certificate of Education (Advance.Level) Model Examination - 2009 August

# பொருளியல் - 1

ஆசிரியர் : V.முரளி (கொழும்பு)


## பகுதி - 1

01. தரப்பட்ட அட்டவனையில் புடைவை, கோதுமை உற்பத்தி தொடர்பான தரவுகள் காட்டப்பட்டுள்ளது.

| நாடு | கோதுமை | புடவை |
|---|---|---|
| U.K | 40 | 30 |
| U.S.K | 60 | 90 |

U.K,U.S நாடுகள் முறையே கோதுமை உற்பத்திக்கான அமையச் செலவு யாது?
1. 0.75,1.25  2. 1.5,0.75  3. 0.75,1.5
4. 0.5,1.5  5. 1.5,0.5

02. பொருளாதாரம் ஒன்றின் உற்பத்தி சாத்திய வளையில் தரப்பட்டுள்ளது. இங்கு புள்ளி X ஆனது Y ஆக மாற்றம் அடைகின்ற பொழுது பின்வருவனவற்றுள் யாது நிகழும்?





1. அமையச் செலவானது மாற்றமடையாது காணப்படுகின்றது.
2. விவசாயப்பண்டத்தின் உற்பத்தியில் பயன்படுத்தப்பட்ட தொழில்நுட்பம் வீழ்ச்சி யடைகின்றது.
3. கைத்தொழில் பண்டத்தின் உற்பத்தி நோக்கி வள ஒதுக்கீட்டில் ஓர் அதிகரிப்பு ஏற்பட்டு உள்ளது.
4. கைத்தொழில் பண்டத்தின் உற்பத்தியில் தொழில்நுட்ப முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.
5. அமையச்செலவானது அதிகரித்து செல்கின்றது.

03. மாம் பழத்திற்கான சந்தைக் கேள்விச்சார்பு $QD = 150 + 3P$, மாம்பழத்திற்கான சந்தை நிரம்பல் சார்பு $QS = 10 + 4P$ தரப்பட்டுள்ளது. இங்கு மாம்பழத்தின் விலை 17.50 எனின், மாம்பழத்திற்கான சந்தையில்,
1. சமநிலை காணப்படும்
2. மிகைக்கேள்வி ஏற்பட்டு விலை அதிகரிக்கும்.
3. மிகைக்கேள்வி ஏற்பட்டு விலை ஏற்பட்டு விலை அதிகரிக்கும்.
4. மிகை நிரம்பல் ஏற்பட்டு விலை அதிகரிக்கும்.
5. மிகை நிரம்பல் ஏற்பட்டு விலை குறையும்.


04. கைத்தொழில் பண்டம் X, விவசாயப்பண்டம் Y ஆகிய இரண்டு பண்டங்களை உற்பத்தி செய்யக்கூடிய ஒரு நாட்டினுடைய உற்பத்திச் சாத்திய வளையில் இருந்து பெற்றுக் கொள்ளக்கூடியது யாது?
1. அதனால், உற்பத்தி செய்யக்கூடியது கைத்தொழில் உற்பத்தி
2. அதனால் உற்ாத்தி செய்யக்கூடியது விவசாய உற்பத்தி
3. வளங்கள் முழுமையாக பாவனைக்கு உட்படுத்தக்கூடிய எல்லை
4. பொருளாதாரத்தின் விருப்பத்தேர்வு
5. விவசாயப் பண்டத்தின் அடிப்படையில் கைத்தொழில் பண்டத்தின் அமையச்செலவு

05. கைத்தொழில் பண்டம் மற்றும் விவசாயம் தொடர்பாக ஒரு நாட்டின் உற்பத்திச் சாத்திய வளையில் AA ஐ கீழ்வரும் படம் காட்டுகின்றது. பின்வருவனவற்றுள் எழுது உற்பத்திச் சாத்திய வளையியை AA யிலிருந்து BB க்கு நகர்த்துவதற்கு அதிக சாத்தியமான காரணமாக அமைவது.
1. அதிகரித்தலாகும்
2. குறைந்த தேறிய மதலீடு
3. பெரியளவிலான உற்பத்தி சிக்கனங்கள்
4. பொதுச் செலவீனத்தின் ஓர் அதிகரிப்பு
5. உற்பத்தித் திறனினல் ஓர் அதிகரிப்பு




06. நிறைபோட்டிச்சந்தையில் பண்டத்தின் விலை 100 ரூபா ஆக உள்ள போது 90 m அளவு கேள்வி காணப்படுகிறது. இச்சந்தையில் ஓர் உற்பத்தியாளன் பண்டத்தின் விலையை 110 ரூபா ஆக அதிகரிப்பின் போது அவ் உற்பத்தியின் வருமானம் யாது?
1. பூச்சியம்  2. 900 m  3. 9900 m
4. 1000 m  5. தொடர்பான விலை இல்லை.

07. இங்கு வரைபடமானது நகரசபை பிரதேசமொன்றில்பொதுப்போக்குவரத்திற்கான கேள்வி மற்றும் நிரம்பல் வளையிகளைத் காட்டுகிறது. இங்கு OP என்பது மாறா விலை ஆகும். (flat ratc) இச்சேவையைப் பெற விரும்பும் சகலருக்கும் இந் நகர சபையானது அதனை இலவசமாக வழங்க முடிவு செய்கிறது. எனின் நுகர்வோர் மிகை யாது?
1. MEP ஆல் வீழ்ச்சியடையும்.
2. SEP ஆல் அதிகரிக்கும்.
3. MOT ஆகக் காணப்படும்.
4. OPEQ ஆல் குறைவடையும்.
5. 0PEQ ஆகக் காணப்படும்.




08. தரப்பட்ட வரைபடத்தின் படி சேமிப்பு நாட்டம் MPS 0.4 ஆக உள்ள பொழுது நுகர்வுக் கோட்டைப் பயன்படுத்தி A எனும்புள்ளியில் நுகர்வு செலவீட்டின் அளவு யாது?
1. 6000
2. 7000
3. 12000
4. 13000
5. 14000




09. சில பண்டங்களது விலை சார் கேள்வி நெகிழ்ச்சி பின்வருமாறு:-

| பண்டங்கள் | விலைசார் கேள்வி நெகிழ்ச்சி |
|---|---|
| A | 0.0 |
| B | -0.5 |
| C | -1.0 |
| D | -1.5 |

விலையானது 2 சதவீதத்தினால் குறைவடைகின்றபொழுது எப்பண்டத்தின் வருமானம் TR அதிகரிக்கும்.
1. A  2. B  3. C
4. D  5. B,C

10. செலவு தொடர்பான அட்டவணை தரப்பட்டுள்ளது.

| வெளியீடு () | மொத்தமாறும் செலவு () |
|---|---|
| 1 | 7 |
| 2 | 12 |
| 3 | 16 |
| 4 | 22 |
| 5 | 35 |

4 ஆவது அலகு வெளியீட்டின் எல்வைச் செலவு யாது?
1. 4 ரூபா  2. 6 ரூபா  3. 13 ரூபா
4. 22 ரூபா  5. 35 ரூபா

11. பண்டத்தின் மீது அரச இழிவு விலையினை தீர்மானிக்கும் போது சந்தையில் ஏற்படக் கூடியது எது?
1. மிகைக்கேள்வி  2. மிகை நிரம்பல்  3. சமநிலை தோன்றும்.
4. உற்பத்தியாளன் மிகை அதிகரிக்கும்.  5. நுகர்வோர் மிகை அதிகரிக்கும்.

12. சந்தைதோல்வியை ஏற்படுத்தக்கூடியது எது?
1. விலைப்பொறிமுறை.
2. தனியார்செலவு சமூகச் செலவுக்கு சமனாக இருத்தல்.
3. தொழிற்சாலைகள் மூடப்படல்
4. போட்டி அதிகரித்தல்
5. உற்பத்தியின்போது ஏற்படும் புறநன்மைகள்

13. ஓர் உற்பத்தித் தொழிற்பாட்டில் உற்பத்திக் காரணிகளில் நிலையான காரணி என கருதப் படக் கூடியது எது?
1. ஊழிய மணித்தியாலம்  2. பயன்படுத்தப்படும் மின்சாரத்தின் அளவு
3. தொழிற்சாலை அமைவிடம்
4. மூலப்பொருட்கள் அளவு
5. போக்குவரத்துச் செலவு

14. தேசிய வருமானக் கணிப்பீட்டின்பொழுது கவனத்தில் கொள்ளப்படாத செலவீடுகள் ,எனக் கருதப்படுபவை எவை?
1. யுத்தசெலவீனம்  2. படையினரது சம்பளம்
3. சொத்துக்கள் மீதான முதலீடு 4. அரச நுகர்வுச் செலவு
5. சொத்துக்களின் மறு விற்பனை

15. மொத்தக் கேள்வியினுள்ளடங்காதது எது?
1. முதலீடு  2. தனியார் நுகர்வு  3. அரச நுகர்வு
4. ஏற்றுமதி  5. உற்பத்தியின் வினைத்திறன்

16. அண்மையில் அரசாங்கத்தினால் 2009 ஆம் ஆண்டுக்கென ஆரம்பிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில் பாதீட்டுப் பற்றாக்குறையானது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் எத்தனை சதவீதம்?
1. 8.0  2. 7.7  3. 7
4. 6.7  5. 5.7

17. 2008/2009 ஆண்டுகளில் வரி அரசிறையின் பங்களிப்பு மொத்தஉள்நாட்டு உற்பத்தி இன் சதவீதமாக எவ்வளவாகும்.?
1. 12 %- 14%  2. 14 %- 15.40%  3. 16-16.40%
4. 17.40-18%  5. 18-19%

18. 2007,2008,2009 ஆம் ஆண்டுகளுக்கான பொருளாதார வளர்ச்சி வீதங்கள் முறையாக அமையப்பெற்றது எது?
1. 7.7,6.8,6.5  2. 6.8,6.5,6.5  3. 5.4,6.2,7.7
4. -1.5,4.0,5.9  5. 6.5,6.0,6.8

19. எளிய பொருளாதாரமொன்றில் மொத்தவெளியீடு () இங்கு முதலீடு 4,500 () எனில், எல்லை நகர்வு நாட்டம் யாது?
1. 0.25  2. 0.3  3. 0.5
4. 0.7  5. 0.75

20. அண்மையில் இலங்கையின் வரி வருமானத்தில் மிக முக்கிய மூலாதாரம் எது?
1. பெறுமதி சேர்வரி  2. கலால்வரி
3. இறக்குமதித்தீர்வை  4. தேசக்கட்டுமான வரி

தொடர்ச்சி அடுத்த கிழமை வெளிவரும்

2 ஆம் பக்க தொடர்ச்சி தொடர்ச்சி.....

**05. 1948 மற்றும் 1978 யாப்புக்களின் கீழ் இடம்பெற்ற பிரதிநிதித்துவ முறைகளைப் பின்வரும் தலைப்புக்களின் கீழ் ஒப்பிடுக.**
**1) வாக்காளருக்கும் பிரதிநிதிக்கும் இடையிலான தொடர்பு.**
**2) அரசியல் கட்சிகளின் பங்கு.**
**3) அரசாங்கத்தின் உறுதிப்பாடு.**

**1) வாக்காளருக்கும் பிரதிநிதிக்கும் இடையிலான தொடர்பு.**

1948-1978 காலப்பகுதியில் நடைமுறையில் இருந்த பிரதிநிதித்துவ முறை எளிய பெரும்பான்மை முறை என்றும், 1978 இலிருந்து இன்றுவரை செயற்படும் பிரதிநிதித்துவ முறை விகிதசமப் பிரதிநிதித்துவ முறை என்றும் அழைக்கப்படுகிறது. கோட்பாட்டு ரீதியாக எளிய பெரும்பான்மை முறையின்கீழ் வாக்காளருக்கும்- பிரதிநிதிக்கும் இடையில் நெருங்கிய தொடர்பும் விகித முறைமையின்கீழ் சேய்மையான தொடர்பும் நிலவுகிறது. எளியபெரும்பான்மை முறையின் கீழ் இடம்பெறும் தேர்தல் தொகுதிகளில் வாக்காளர்களின் எண்ணிக்கை சிறியதாக அமைவதன் காரணமாக வாக்காளர் பிரதிநிதியை நன்கு அறிவதோடு பிரதிநிதியும் வாக்காளரை நன்கு அறிவார். குறிப்பாகக் கட்சி இணைவின் அடிப்படையில் கட்சி உறுப்பினர்கள் தமது கட்சி வேட்பாளருக்கு வாக்களிப்பதுடன் தமக்கு யார் வாக்களித்தனர் என்பதைப் பிரதிநிதி அறிவார். இதன் காரணமாக வாக்காளருக்கும் பிரதிநிதிக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு ஏற்படும். இத்தொடர்பு வாக்காளர் பக்கமாகச் சிறந்ததாயினும், பிரதிநிதியின் பக்கமாக அவ்வளவு சிறந்த ஒன்றல்ல. காரணம், பிரதிநிதி வாக்காளரின் அடிமையாக மாறுவதனால் ஆகும். அதனால், பிரதிநிதி தேசியக் கொள்கைகளை விட வாக்காளரின் குறுகிய நலன்களுக்கு முக்கியத்துவம் வழங்குவதோடு தேசியமட்டத்தில் அது சிறந்த ஒரு நிலையாக அமையாது.

நிறைவுபெற்றது-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாதிரிப் பரீட்சை - 2009 ஆகஸ்ட்**
**General Certificate of Education (Advance.Level) Model Examination - 2009 August**

# வணிகக்கல்வி

ஆசிரியர் : திரு B.S பசில் (B.B.A)
யாழ்

## பகுதி -1

01. கீழே தரப்படும் கூற்றுக்களில் இலங்கை தொடர்பாக மிகச்சரியான கூற்றைத் தெரிவு செய்க.
 1. ஒரு விவசாய நாடு  2. ஒரு கைத்தொழில் நாடு
 3. ஒரு சேவைத் துறை சார்ந்த நாடு  4. ஒரு ஏற்றுமதி சார்ந்த நாடு
 5. மேற்சொன்ன எதுவுமல்ல

02. விலங்குகளை இறைச்சிக்காக வளர்ப்பது கீழே தரப்படுவற்றில் எதனுள் அடக்கப்படும்.
 1. கைத்தொழில்  2. வர்த்தகம்
 3. வியாபாரம்  4. உதவிச்சேவைகள்
 5. மேற்சொன்ன எதுவுமல்ல.

03. பின்வருவனவற்றில் கைத்தொழில் பொருளாக கருதப்படமுடியாதாதது ?
 1. மூலப்பொருட்களும் பகுதிகளும்.
 2. உற்பத்திசெய்யப்பட்ட உள்ளீடுகள்
 3. உற்பத்தி செய்யப்பட்ட வெளியீடுகள்
 4. மூலதனப்பொருட்கள்
 5. விநியோகமும் வணிகச்சேவைகளும்

04. வணிகமொன்றினது உற்பத்திக் கிரயத்தை இழிவுபடுத்தக்கூடியதாக இருப்பது அந்த வணிகத்திற்கு,
 1. பலம்  2. பலவீனம்  3. வாய்ப்பு
 4. அச்சுறுத்தல்  5. உள்ளீடு

05. வணிகத்தின் அமைவிடத்தெரிவு பின்வருவனவற்றுள் எத்தொழிற்பாட்டினுள் அடக்கப்படும்.
 1. நிதியும் கணக்கீடும்.  2. உற்பத்தி  3. ஆளணி
 4. ஆராய்ச்சி அபிவிருத்தி  5. நிர்வாகம்

06. பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் பணியாகக் கருதமுடியாதது
 1. போட்டி வியாபாரத்தை உந்துவித்தல்
 2. நுகர்வோர் கல்வியை விருத்தியை செய்தல்
 3. சூழல் பாதுகாப்பில் ஈடுபடல்
 4. சில பொருட்களுக்கு விலைக்கட்டுப்பாட்டை பேணல்
 5. பொய்யான தகவல்கள் அளிக்கும் வியாபாரிகள் மீது நடவடிக்கை எடுத்தல்

07. திரு க. பனான்டோ எனும் அரச வைத்திய அதிகாரி தனது பொருளாதார நலன்களை முன்னேற்றுவிக்கும் வகையில் பங்குடமை அமைப்பு ஒன்றில் இணைந்து கொண்டார். இங்கு திரு. க. பனான்டோ உண்மையில்,
 1. இயங்கும் பங்காளி  2. தூங்கும் பங்காளி
 3. பெயரளவில் பங்காளி  4. போலிப்பங்காளி  5. இரகசியப்பங்காளி

08. பொதுக்கம்பனி ஒன்றில் இழிவுக்கட்டணம் திரட்டப்பட்டதை உறுதிப்படுத்துவது.
 1. முன்விவரணம்  2. முன்விவரணத்திற்குப் பதிலான கூற்று
 3. சட்டமுறை அறிக்கை  4. ஆண்டறிக்கை  5. அமைப்புப் புறவிதி

09. பின்வருவனவற்றில் கணினி மென்பொருள் () வகையைச் சேராதது எது ?
 1. சொல்செயன்முறைப்படுத்தல் ()
 2. எக்ஸெல்()
 3. எம்.எஸ்.டொஸ்
 4. செயன்முறைப்படுத்தும் அலகு.()
 5. அக்ஸல்()

10. பின்வருவனவற்றுள் எது தொழில்நுட்ப சூழல் என்பதில் அடக்கப்படக் கூடியது ?
 1. பணக்கொள்கை  2. வரிவிதிப்பு  3. வாழ்க்கைமுறை
 4. நுகர்வோர் எதிர்பார்ப்புக்கள்  5. வீட்டுச் சூழல்

11. பின்வருவனவற்றுள் எதில் சில சமயங்களில் ஒரு அல்லது சில உடமையாளர்களுக்கு மூலதன எல்லைக்கு மேல் இடரைத் தாங்கிக் கொள்ளக்கூடிய நிலை ஏற்படலாம்.
 1. வரையறுக்கப்பட்ட சொந்தக்கம்பனியில்
 2. வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனியில்
 3. வரையறுக்கபட்ட மக்கள் கம்பனியில்
 4. வரையறுக்கப்பட்ட பங்குடமையில்
 5. மேற்சொன்ன எவையுமல்ல.

12. வரையறுக்கப்பட்ட கம்பனி ஒன்றின் அனுகூலமாக கருத முடியாதது ?
 1. அதிகளவு வணிகம்
 2. அதிகளவு பிரமானங்கள்
 3. அதிகளவு வாடிக்கையாளர்
 4. அதிகளவு வளர்ச்சி
 5. அதிகூடிய வாழ்க்கைக் காலம்.

13. கப்பல் முகவர் நிலையத்தின் பணியல்லாதது ?
 1. வியாபார ஆவணங்களை ஒழுங்கு செய்தல்
 2. பொதி செய்தலுக்கு உதவுதல்
 3. பொருட்களை அப்புறப்படுத்த உதவுதல்
 4. கப்பலை ஒழுங்கு செய்தல்
 5. தோற்றுவாய் சான்றிதழை வழங்குதல்

14. வர்த்தக வங்கியின் பணியல்லாதது ?
 1. வட்டியைப் பெறுதல்
 2. வ்ட்டியை வழங்குதல்
 3. வங்கி வீதத்தை தீர்மானித்தல்
 4. தரகு பெறுதல்
 5. மேற்சொன்ன எவையுமல்ல

இவ் இதழில், மாவட்ட ரீதியாக முன்னிலையில் திகழும் ஆசிரியர்களினதும், மூத்த அனுபவமிக்க ஆசிரியர்களினதும் மாதிரி வினாத்தாள்கள் தொடர்ச்சியாக வெளிவரவுள்ளன.

15. தகவல் பரிவர்த்தனையில் தடையாக கருத முடியாதது ?
 1. சத்தம்  2. அவதானம்
 3. உணர்ச்சி வசப்படுதல்  4. தகவல் மிகை  5. தகவல்பற்றாக்குறை

16. காப்புறுதி செய்முறையில் முதலாம்,இரண்டாம் நபர்களுக்கிடையில் ஏற்பட்டுள்ள இணக்கத்தைக் காட்டுவது,
 1. காப்புறுதிக் கடிதம்  2. காப்பபுறுதித் தத்துவம்  3. காப்புறுதிப்பூட்கை
 4. காப்புறுதிப்படிவம்  5. மேற்கூறப்பட்ட எவையுமல்ல

17. பொருளின் உரிமை மாற்றலை எடுத்துக்காட்டுவது
 1. விலைக்கூற்று  2. விலை விசாரணை  3. பட்டியல்
 4. கட்டளை  5. வரவுத்தாள்

18. ஓர் குறித்த உற்பத்திக் கம்பனியில் பொருட்களை மட்டும் விற்பனை செய்ய உடன்பட்டு அதை நடைமுறைப்படுத்தும் அமைப்பு,
 1. பகுதிக் கடை  2. கிளைக் கடை  3. சிறப்புக் கடை
 4. கழிவுக்கடை  5. கட்டக்கடை

19. ரெலர் அட்டை தொடர்பாக தவறான கூற்று,
 1. 24 மணிநேர வங்கிச்சேவையைப் பெற உதவுதல்
 2. இதற்கு வட்டி அறவிடப்படமாட்டாது
 3. இரகசியத்தன்மை இருப்பதனால் பாதுகாப்பானது
 4. இதற்கு காலாவதி திகதியில்லை
 5. மேற்சொன்ன எவையுமல்ல

20. பூரணப்படுத்துக.
 விருப்பம்  கொள்வனவுச்சக்தி
 [ ] → [ ] → [ ] → [ ]

21. 2005 ஆம் ஆண்டில் இருந்து நிதிக்கம்பனிகளுக்கு எச்செயற்பாட்டை மேற்கொள்ள மத்திய வங்கி அனுமதி அளித்தது ?
 ..........................................................................

22. இலங்கை இறுதியாக ........................................ நாட்டுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையைச் செய்துள்ளது.

23. அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| | |
|---|---|
| 2007 இல் இலங்கையின் நுகர்வோரின் தொகை | |
| 2007 இல் இலங்கையின் குடித்தொகை வளர்ச்சி வீதம் | |

24. இலங்கை மத்திய வங்கி அறிக்கைப்படி 2004 ஆம்,2007 ஆம் ஆண்டிற்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதப் பங்களிப்பு கீழே தரப்பட்டுள்ளது.

| துறைகள் | 2004 (%) | 2007(%) |
|---|---|---|
| 1. விவசாயம்,காட்டுத்தொழில்,கடல்தொழில் | 17.8 % | 11.9% |
| 2. சுரங்கத்தொழிலும், கல்லுடைத்தலும் | 2.0 % | 1.9% |
| 3.தயாரிப்புத்தொழில் | 15.4 % | 17.7% |
| 4. மின்வலு,நீர் | 1.5 % | 2.5 % |
| 5. கட்டவாக்கம் | 7.9 % | 6.4 % |
| 6. மொத்த, சில்லறை வர்த்தகம்,சுற்றுலா விடுதிகளும், உணவகங்களும் | 21.4 % | 24.5 % |
| 7. போக்குவரத்து,களஞ்சியப்படுத்தல்,தொடர்பாடல் | 14.4 % | 12.8 % |
| 8. நிதியியல் பணிகள், உண்மைச்சொத்துக்கள் வர்த்தகப்பணிகள் | 12.1 % | 8.7 % |
| 9. பொதுநிர்வாகம்,ஏனைய அரச பணிகளும் பாதுகாப்பும் ஏனைய சமூகங்கள்,சமூக தனியாள் பணிகளும் | 7.8 % | 13.6 % |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி | 100.0 | 100.0 |

அ. முதன் நிலை உற்பத்தி ( முதன்நிலைக் கைத்தொழிலின்)சதவீதப் பங்களிப்பு யாது ? ( 2007 ஆம் ஆண்டுக்கு)
 ..........................................................................

ஆ இரண்டாம் நிலை உற்பத்தி (இரண்டாம் நிலைக் கைத்தொழிலின்)சதவீதப் பங்களிப்பு யாது ? ( 2007 ஆம் ஆண்டுக்கு)
 ..........................................................................

இ. மூன்றாம் நிலை உற்பத்தி ( மூன்றாம்நிலைக் கைத்தொழிலின்) சதவீதப்பங்களிப்பு யாது ? ( 2007 ஆம் ஆண்டுக்கு)
 ..........................................................................

**தொடர்ச்சி அடுத்தக் கிழமை வெளிவரும்**

**3 ஆம் பக்க தொடர்ச்சி தொடர்ச்சி.....**

30. உற்பத்தித் தாபனம் ஒன்றின் கூலி தொடர்பான தரவுகள் வருமாறு.
 பொருள் ஒன்றை உருவாக்குவதற்கான நியம நேரம் 2 மணித்தியாலங்கள்.
 உற்பத்திசெய்த அலகுகள் 60
 உற்பத்திக்கு எடுத்த நேரம் 100 மணித்தியாலங்கள்
 நிறுவனம் சேமித்த நேரங்களுக்கு 75% உபகாரச் சம்பளம் வழங்கும்.
 மணித்தியாலம் ஒன்றுக்கான கூலி 420/=
 மேற்குறித்த நிலைமையில் றோவான் முறையில் உபகாரச் சம்பளம் வழங்கப்படின் வழமையான முறையிலும்பார்க்க ஊழியர் பெறும் நலன் யாது ?

*** பின்வரும் கூற்றுக்கள் ஒவ்வொன்றும் 'உண்மை' அல்லது 'பொய்' என எழுதுக.**

31. கழிவுசெய்யப்பட்ட காசேட்டு முறையில் தேறிய இன்றைய பெறுமதி பூச்சியமாக இருக்கும் போது முதலீட்டுத் திட்டம் தெரிவுசெய்யப்படும். ( )

32. செயற்றிட்டம் ஒன்றில் கால எண்ணக்கரு அடிப்படையில் பணத்தின் நீண்டகாலப் பெறுமதி வரையறுக்கப்படுகின்றது. ( )

33. நிலையான கிரயமும், இலாபமும் சேர்ந்த பகுதி பங்களிப்பு (உதவுதொகை) எனப்படும். ( )

34. துண்டுகளாக்கி விற்பனைசெய்யும் நோக்குடன் காணி ஒன்றைக் கொள்வனவுசெய்தல் முதலீட்டு நடவடிக்கையான காசு வெளிப்பாய்ச்சல் ஆகும். ( )

35. பங்குவட்டத்தின் நிதியினால் அருவ மற்றும் கற்பனைச் சொத்துக்களைப் பதிவழிப்புச் செய்ய முடியாது. ( )

*** பின்வரும் வினாக்களிலுள்ள வெற்றிடங்களை நிரப்புக.**

36. கிரய இலாப அளவுப் பகுப்பாய்வில் ( CVP ஆய்வு) மொத்தக் கிரயமானது ................................ என வகைப்படுத்தப்படும்.

37. பங்குவட்டம் என்பது ஒரு .............................. ஒதுக்கம் என்பதுடன் அது ஒரு .......................... ஒதுக்கமும் ஆகும்.

38. எல்லைக்கிரயவியலில் மதிப்பிடப்பட்ட விற்பனை அலகுகளிலிருந்து சமப்பாட்டுப் புள்ளி விற்பனை அலகுகளைக் கழிக்க வருவது ................................. எனப்படும்.

39. மூலதன இணைப்பு விகிதம் தாழ் இணைப்பு நிலையில் இருக்கும்போது கடன் முதலைவிட உரிமை முதல் ................................. இருக்கும்.

40. காசோட்டக்கூற்று ஒன்றில் எப்போதும் இடம்பெறமுடியாத ஒரு பங்குவழங்கல் .......................... ஆகும்.

**தொடர்ச்சி அடுத்த கிழமை வெளிவரும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# IIIஆம் பக்கத் தொடர்ச்சி...

**2) நாம் சிறந்த அனுபவம் ஒன்றைப் பெற்று அதனால் இன்பம் அடைய புலவனுடைய உதவியை நாடவேண்டும் என்பதை இக்கட்டுரையாசிரியர் எவ்வாறு விளக்குகிறார்?**

எங்களுடைய அனுபவம் ஆழம் அல்லது தெளிவுள்ளதாக இல்லை. ஆதனால் அந்த அனுபவத்தை நாம் தெளிவாக வெளிப்படுத்த முடிவதில்லை. இந்நிலையில் சிறந்த அனுபவம் ஒன்றைப்பெற்று இன்புறவேண்டும் எனில், ஒரு புலவனுடைய உதவியையே நாடவேண்டியுள்ளது ஆகாய வெளியில் நீந்திச்செல்லும்குளிர்ந்த சந்திரனைக் காணும்போது எமக்கு இன்ப உணர்வு ஏற்படுகின்றது. ஆனால், நாம் அதில் அழுந்துவதில்லை. புலவன் அதில் அழுந்துவதால் பன்மடங்கு இன்பத்தைப்பெற்று அந்த அனுபவத்தை கவிதை உருவிலே தருகிறான். எனவேதான் நாம் அவனுடைய உதவியை நாடி, அக்கவிதையைப்படித்து தெளிந்த அனுபவத்தைப் பெற்று பரவசம் அடைகிறோம். (04 புள்ளிகள்)

**3) ஒரு கவிதையை நாம் படித்து அனுபவிக்க என்ன செய்யவேண்டும்?**

* அக்கவிதைக்குரிய மனோநிலையினை ஏற்படுத்துதல்.
* அதைப் பலமுறை படிக்கவேண்டும்.
* அதைப் படிக்கும்போது ஊக்கமும் உள்ளக்கிளர்ச்சியும் இருத்தல் வேண்டும்.
* அதன் கண் உள்ளத்தைத் தோயவிடுதல் வேண்டும். (04 புள்ளிகள்)

**4) கவிதையாற் பெறும் பயன் யாது?**

கவிதையை யாத்த புலவனுடைய அனுபவம் எமக்குப் புலனாகும். அத்தகைய அனுபவத்திலே அழுந்துவதால் சொலற்கரிய இன்பத்தை அடையலாம். இது அமர வாழ்வைத்தருகின்றது. (04 புள்ளிகள்)

**03. நல்குரவு என்னும் அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறுவனவற்றை ஆதாரமாகக் கொண்டு,**

**அ. நல்குரவின் கொடுமையையும்**

**ஆ. நல்கூர்ந்தார்க்கு உளதாங் குற்றத்தையும்**

**இ. அது உளதாய வழிச் செயற்பாலது பற்றி வள்ளுவர் கூறுவது குறித்த உமது அபிப்பிராயத்தையும் தெளிவுறுத்துக.**

அ.
* அதையொத்த துன்பம் வேறில்லை.
* இம்மை இன்பமும் மறுமை இன்பமும் கெடுக்கும் கொடுமை.
* தொன்றுதொட்டு வரும் ஒழுக்கத்தையும், வலிமையையும், பெருமையையும், வடிவழகினையும் சிதைக்கும்.
* நற்குடிப்பிறந்தோரிடமும் இழிவாற் பிறக்க ஏதுவாகும்.
* பல்வேறு துன்பங்களுக்கு விளைவிடமாகும். (06 புள்ளிகள்)

ஆ.
* நல்லவற்றை ஆராய்ந்து சொல்லினும் கேட்போரின்மையின் பயனற்றுப்போகும்.
* பெற்ற தாயாலும் பிறர்போல் நோக்கப்படுவர்.
* நாடோறும் அச்சமுறுத்தும்.
* நெருப்பினும் கொடியது; உறங்கவொட்டாது. (06 புள்ளிகள்)

இ. உடன்பட்டோ அல்லது மறுத்தோ தன் அபிப்பிராயத்தை விளக்குமாற்றை நோக்கிப் புள்ளி வழங்குக. (02 புள்ளிகள்)

**04. கலிங்கத்துப்பரணியில் 'காடு பாடியது' என்ற பகுதியில்,**

**அ. பாலை நிலம் வர்ணிக்கப்பட்டுள்ள வகையினையும்**

**ஆ. குலோத்துங்க சோழனின் வீரம் புலப்படுத்தப்பட்டிருக்குமாற்றினையும்**

**இ. கையாளப்பட்டுள்ள நான்கு உவமைகளையும்**

**ஈ. நான்கு தற்குறிப்பேற்றங்களையும் விளக்குக.**

அ.
* செந்நெருப்பைத் தகடாக்கி விரித்தது போன்ற கொடிய வெம்மை.
* நிலமெங்கணும் வெடிப்பும் பிளவும்.
* சூரியனின் கதிர்கள் அப்பிளவுகளுட் பாய்கின்றன.
* நிழலில்லை; நீரில்லை; சூறைக்காற்று வீசுகிறது.
* பாலை நிலத்துக்குரிய மரம், செடி கொடிகள், காரை, சூரை, வீரை, பாரை வெள்ளில் முதலானவை பொரிந்தும், கரிந்தும், புகைந்தும், உரிந்தும், எரிந்தும், உலர்ந்தும், உதிர்ந்தும், பிதிர்ந்தும், உணங்கியும், ஒடுங்கியும், பிளந்தும், பரந்தும், மடிந்தும், பொடிந்தும், வறண்டும், முற்றியும், முறிந்தும் காணப்படுகின்றன. (04 புள்ளிகள்)

ஆ. பாலைநில வெம்மையை உயர்வு நவிற்சியாக வர்ணித்த பின், காட்டு வழியாகவும் மலை வழியாகவும் பாண்டியர் விழுந்தடித்து ஓடும்படி குலோத்துங்க சோழன் மேற்கொண்ட போரில் தீக்கிரையாகிய பாண்டியனுடைய ஊர்களான வெள்ளாற்றையும் கோட்டாற்றையுமே அப் பாலைவனத்துக்கு உவமிக்கக்கூடும் என்கிறார். அதன் மூலம் குலோத்துங்க சோழனின் வீரமும் போர் வலியும் விளங்குகின்றன. (03 புள்ளிகள்)

இ.
* செந்நெருப்பைத் தகடுசெய்தது போன்ற தரைப்பரப்பு.
* காவற்பேய் தனியே துன்பப் பெருமூச்சுவிடுதல்போல் மரங்கள் எரிந்து, கரிந்து, புகைந்து (துன்புற்று) நின்றன.
* பேய் நாக்கை நீட்டுவதுபோல் மரப்பொந்தினின்று பாம்பு புறப்படும்.
* புதைந்த மணி புகைபோர்த்த அல்லது பொடிமூடும் தழலைப் போன்றது.
* மூங்கிலினின்று சிதறிய முத்துக்கள் வியர்வைத்துளிகளை அல்லது கொப்புளங்களை ஒக்கும். (04 புள்ளிகள்)

ஈ.
* சூரியனின் வெம்மை மிகுதியால் நிலம் பாளம்பாளமாகப் பிளவுப்பட்டிருந்தமையை நிலத்துள் ஒளிந்த தன் மனைவியைச் சூரியன் கையை நுழைத்துத் தேடியதுபோல் இருந்ததெனல்.
* பறக்கும் பருந்தின் நிழலை அஞ்சியோடும் நிழல்போன்றதெனல்.
* மரத்தடியில் நிழல் இல்லாதது மரம் தன்னைப்பருகிவிடும் என்ற அச்சத்தினால் எனல்.
* தேவர்கள் நிலத்தில் அடி வையாதது பாலைநில வெம்மை கருதி எனல்.
* இரவில் சூரியன் வராதது ஒரு பொழுதாவது இழைப்பாறவேண்டி எனல்.
* பனிக்குக் காரணம் முகிலும் சந்திரனும் ஓடி இளைத்து வியர்த்ததால் எனல்.
* விண்ணோர் தம்மைக்காக்க இட்ட திரையே முகில் எனல்.
* மூங்கிலின்று சிதறிய முத்துக்களை, பாலையின் நிலை கண்டு இரங்கி அழுத கண்ணீர் எனல்.
* பாலைநில வெம்மையிலிருந்து தம்மைக் காக்கவே கடல் அலைகளை வீசுவதும், திக்கு யானைகள் தம் செவிகளை அசைத்துக்காற்றினை வீசுவதும் எனல். (04 புள்ளிகள்)

**05. திருவடிசூட்டு படலத்தில் தசரதன் இறந்த செய்தியை இராமன் கேட்டதுமுதல் தந்தைக்கு நீர்க்கடன் செய்வது வரையுள்ள பகுதியில்,**

**அ. தசரதன் பெருமையும்**

**ஆ. அவனிடத்து இராமன் கொண்ட பாசமும்**

**இ. இராமனை வசிட்டன் ஆறுதற்படுத்திய விதத்தையும் சித்திரிக்கப்படுமாற்றிலுள்ள சிறப்புக்களையும் துலக்குக.**

அ. சத்தியத்தை உரிமையாகக்கொண்டவன் என்று பரதன் கூறுகிறான்.

அணையா விளக்கைப் போன்ற நாயகன்; மானிலத்தோர் தந்தை; தனி அறத்தின் தாய்; பேரருளின் இருப்பிடம்; பகை அரசர்க்குச் சிங்கம் போன்றவன்; வாய்மையைக் காப்பவன்; பகைவருக்கு அச்சம் தரும் வேலாயுதத்தை ஏந்தியவன்; சம்பராசுரனை அழித்து இந்திரனுக்கு விண்ணுலக ஆட்சியைக்கொடுத்தவன்; வன்மையும், மானமும், திண்மை யும், தண்மையும் மிகுந்தவன்; செங்கோல் நெறி திறம்பாதவன் என்றெல்லாம் இராமன் குறிப்பிடுகிறான். உலகம் யாவையும் அறுபதினாயிரம் ஆண்டுகள் தானொருவனே ஆண்டவன் என்றும் பிரமனுக்கும் அரிய விஷ்னுலோகத்திற் சேர்ந்து விளங்கினான் என்றும் வசிட்டன் கூறுகிறான். (05 புள்ளிகள்)

ஆ. இறந்தனன் என்ற வார்த்தை புண்ணில் வேல் சொருகினாற்போலத் தன் காதில் புகுமுன் கண்ணும் மனமும் காற்றாடிபோற் சுழல மண்மீது வீழ்ந்தான். மூச்சடங்கி இடியினால் வருந்தும் பாம்புபோல் உணர்வு நீங்கினான். சிரமப்பட்டு உணர்வுபெற்றுக் கலங்கிப் புலம்பினான். அசுவமேத யாகம் வைத்து என்னை மகனாகப் பெற நான் உன் உயிருக்கு இயமனாகப் பிறந்தேனோ என்றும், இறந்தொழியாமல் யார் முகத்தைப் பார்ப்பதற்கு இன்னும் இருக்கிறேன் என்றும் பலவாறு புலம்பி இடர் உழந்தான். (05 புள்ளிகள்)

இ. வேதங்களை முற்றும் அறிந்தவன் பிறத்தலும் இறத்தலும் இயற்கை என்பதை மறந்துவிட்டாயோ, உயிர்களுக்கு இன்பத்தாலும் துன்பத்தாலும் நிலையற்ற பிறப்புக்கள் அளவற்றன என்பதை அறிந்திருக்கும் இயமனிடத்துக் கண்ணோட்டம் இருக்கின்றது எனநினைக்கலாமோ, பிறப்பதற்கு முன்பாகவே உயிர்கள் பிரிவதைக் கண்டவன் அறுபதினாயிரம் ஆண்டு உலகினைத் தானே ஆண்டவன் இறத்தலை அறிந்து மனம் வருந்துவதோ, எல்லாவற்றிற்கும் மூலமாகிய மூவராயினும் காலவலையைக் கடத்தல் கூடுமோ, ஐம்பூதங்களுமே அழியும் என்றால் ஓர் உயிர் அழிவதற்கு வருந்துதல் தகுமோ, புண்ணியமும் விதியும் ஒழிந்தால் உயிர் பிரியும் என்பதில் ஐயம் உண்டோ, உனக்குத் தந்தை என்ற காரணத்தால் த்சரதன் விஷ்னுலோகமடைந்து ஒளி பெற்றான். மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இதைவிட மேலானதேதும் உண்டோ என்றெல்லாம் எடுத்துரைத்து வசிட்டன் இராமனைத்தேற்றினான். (05 புள்ளிகள்)

**06. டாக்டர் மு.வரதராசனாரின் தம்பிக்கு கடிதத்தை ஆதாரமாகக்கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

**அ. நல்லவராக மட்டுமன்றி வல்லவராகவும் இருந்தால்தான் இந்த உலகில் வாழ முடியும் என்பதை ஆசிரியர் எவ்வாறு நிறுவுகிறார்?**

**ஆ. நாம் இயற்கையிலிருந்து கற்றுக்கொள்ளவேண்டிய பாடம் உண்டு என்பதையும் அதைத் திருவள்ளுவர் உணர்ந்திருந்தார் என்பதையும் ஆசிரியர் எவ்வாறு வலியுறுத்துகிறார்.**

**இ. தற்காலத்துப் பொதுமக்களின் நிலைமை குறித்த ஆசிரியரின் கருத்துப் பற்றிய உமது அபிப்பிராயத்தை வெளிப்படுத்துக.**

அ. நல்லவர்கள் பலர் கலங்கிக் கண்ணீர்விட்டு மாய்கின்றனர் என்றும், வல்லவர்கள் பலர் எதிர்பாராத வகையில் நசுங்குண்டு அழிகின்றனர் என்றும் கூறும் ஆசிரியர் குடும்பங்கள் முதல் நாடுகள் வரை அதற்குச் சான்றுகள் காணலாம் என்கிறார். நல்லரசுகளும் வல்லரசுகளும் அழிவுற்றதை எடுத்துக் கூறுகின்றார். நல்ல மருமகள் தற்கொலை செய்வதையும் வல்ல மாமியார் கடைசியில் அலட்சியப்படுத்தப்படுவதையும் காட்டுகிறார். வல்லவர்களாக இல்லாததனால் தமிழர்கள் தனித்தனியாகவும் குடும்பம் குடும்பமாகவும் நாடு நாடாக அழிந்ததாகக் கூறுகிறார். தமிழ்மொழிக்கு வல்லமை சேர்க்கப்படாததையும், தமிழ்க் கலைகள் புறக்கணிக்கப்பட்டதையும் அதனால் ஏற்பட்ட இழப்புக்களையும் எடுத்துக்காட்டுகிறார். (05 புள்ளிகள்)

ஆ. வாழ்க்கையில் ஓர் அம்சத்தை மட்டும் போற்றி ஏனையவற்றை அலட்சியம் செய்பவர் வெற்றிபெற முடியாது என்பதை இயற்கையிலிருந்து நாம் கற்கவேண்டிய பாடம் என்கிறார். உடலை மட்டும் போற்றி உள்ளத்தைப் புறக்கணிப்பதோ, உள்ளத்தை மட்டும் போற்றி உடலைக் கவனியாது விடுவதோ அழிவுக்கு வழிவகுக்கும் என்கிறார். அதற்கு அவர் மண்ணைப் புறக்கணித்தோ அன்றேல் வானத்தைப் புறக்கணித்தோ ஒரு மரம் வாழ முடியாது என்பதை உதாரணமாகக் காட்டுகிறார்.

இந்த உண்மையை வாழ்க்கையின் பல பகுதிகளிலும் போற்றி வாழவேண்டும் என்பதை நன்கு உணர்ந்த வள்ளுவர் அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றிலும் வலியுறுத்துகிறார். (05 புள்ளிகள்)

இ. பொதுமக்களுக்குத் தங்கள் எதிர்காலத்தையும் நிகழ்காலத்தையும் சேர்த்து எண்ணித் தேவையை உணர இன்னும் தெளிவில்லை; அவர்கள் களிமண்ணாய்த் திரண்டுகிடக்கிறார்கள்; யார் யாரோ நீர்சேர்த்துப் பிசைந்து தமக்கு வேண்டியவாறெல்லாம் உருவங்களைச் செய்து கொள்கிறார்கள்.

இந்நிலையையும் அதன் விளைவுகளையும் குறித்த மாணவரது அபிப்பிராயங்களையும் கவனத்திற்கொள்க. (05 புள்ளிகள்)

**07. அ. புனைகதையில் இடம்பெறும் கதாபாத்திரம் ஒன்றின் குணவியல்புகளைச் செவ்வனே அறிந்துகொள்வதற்கான வழிமுறைகளைத் தெளிவுறுத்துக.**

**ஆ. நாகம்மாள் நாவலில் சித்திரிக்கப்படும் சின்னப்பன் என்னும் கதாபாத்திரத்தின் குணவியல்புகளையும் கதை வளர்ச்சிக்கு அப்பாத்திரம் உதவுமாற்றினையும் விளக்குக.**

**இ. நாகம்மாள் என்னும் பாத்திரத்தின் வாயிலாகப் பெறத்தக்க படிப்பினைகளை எடுத்துக் காட்டுக.**

அ.
* பாத்திரங்களின் சொல்லும் செயலும்.
* அவைபற்றி ஏனைய பாத்திரங்கள் கூறுபவை.
* ஆசிரியர் கூற்றாக அமைபவை.
* இக்கட்டான சந்தர்ப்பங்களில் பாத்திரங்கள் நடந்துகொள்ளும் முறைமை. (03 புள்ளிகள்)

ஆ. கூட்டுக்குடும்ப வாழ்க்கையைப் பேணுவதிலுள்ள விருப்பு:
* தனது அண்ணனின் மனைவியான நாகம்மாளுடன் பழகும்போதும், உரையாடும் போதும் மிகுந்த மரியாதையையும் பொறுமையையும் கடைப்பிடித்தமை.
* தனது மாமியாரின் (காளியம்மாள்) ஏவுதல் முயற்சிகளுக்கு இலகுவில் இடங்கொடாமை.
* தனது அண்ணனின் மகளான முத்தாயியிடம் உயிருக்குயிராக அன்பு வைத்திருந்தமை.
* சிறுமை கண்டு பொங்கி எழும் இயல்பு.
* சின்னப்பனைப்பற்றிய ஏனைய பாத்திரங்களின் கணிப்பீடு.

சின்னப்பன் என்னும் கதாபாத்திரம் கதைவளர்ச்சிக்கு உதவும் முறை:
* நாவல் முழுவதும் நற்பாத்திரமாக ஊடாடிநிற்றல்.
* நாவலின் முடிவில் சின்னப்பன் கெட்டியப்பனால் கொலைசெய்யப்படுதல், அத்துடன் நாவல் முடிவடைதல்.
* நாவல் முடிவடைந்த பின்னரும் கதை முடிவுறாமை.
* நாவல் முழுவதும் முக்கியம்பெறும் பாத்திரங்களுள் ஒன்று.
* நாகம்மாள்-சின்னப்பன்-கெட்டியப்பன் ஆகியோருக்கிடையிலான உறவுநிலை. (06 புள்ளிகள்)

இ.
* கூட்டுக்குடும்ப வாழ்க்கை முறைகள் அர்த்தமுடையவை; ஒருவருக்கொருவர் உதவ ஏற்றவை.
* அவ்வாறான வாழ்க்கைமுறை சிதைவடையும்போது மன உழைச்சல்களும் பாரதூரமான விளைவுகளும் ஏற்படலாம்.
* ஒற்றுமையீனம் கேட்டையும் ஒற்றுமை உயர்வையும் கொண்டுவரக்கூடியவை.
* பெண் ஒருத்தி தன் வாழ்க்கையைத் தானே தீர்மானிக்க இயலுமாயின், அதுவே விபரீதமான ஆபத்தில் முடியலாம்.
* உறுதியான ஓர் உள்ளம்கூடக் கெட்ட சகவாசத்தினாலும் துர்ப்போதனைகளாலும் குழப்பமடைந்து மாறிவிடக்கூடும்.
* தீயார் இணக்கம் தீமையில் முடியும். (06 புள்ளிகள்)

**08. வெள்ளிப்பாதசரம் என்ற கதையில்,**

**அ. வல்லிபுரக்கோயில் திருவிழாக்கோலத்தையும், நல்லம்மாவின் குதூகலத்தையும் இலங்கையர்கோன் எவ்வாறு சித்திரிக்கிறார்?**

**ஆ. செல்லையாவின் மனம் நோகக்கூடாது என்பதில் நல்லம்மா கொண்ட அக்கறை எவ்வாறு விளங்குகின்றது?**

**இ. இலங்கையர்கோன் பயன்படுத்திய எவையேனும் ஐந்து உவமைகளை இனங்கண்டு அவை கையாளப்பட்டுள்ள சந்தர்ப்பப் பொருத்தப்பாட்டினை விளக்குக.**

தொடரும்.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org